6369.

# சோழர்கால திருக்கோயிற் சிற்பங்களில் இசைக்கருவிகள்



டாக்டர் (திருமதி) எஸ். கேசவன்

வெளியீடு
மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் சங்கம்,
மட்டக்களப்[illegible]
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No: 784
Acc No 6369

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோழர்கால திருக்கோயிற் சிற்பங்களில் இசைக்கருவிகள்

Class No: 784.
Acc No 6369

**டாக்டர் (திருமதி) எஸ். கேசவன்**

மேனாள் தலைவர்/ இந்து நாகரிகத் துறை
சிரேஷ்ட விரிவுரையாளர் G-1,
கலை கலாசார பீடம்,
கிழக்குப்பல்கலைக் கழகம், இலங்கை.

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

வெளியீடு
மட்டக்களப்பு மாவட்டம்,
மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் சங்கம்,
கச்சேரி,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | : | சோழர்கால திருக்கோயிற் சிற்பங்களில் இசைக்கருவிகள். |
| ஆசிரியர் | : | டாக்டர் (திருமதி) எஸ். கேசவன்<br>மேனாள் தலைவர்/ இந்து நாகரிகத் துறை<br>சிரேஷ்ட விரிவுரையாளர் G-1,<br>கலை கலாசார பீடம்,<br>கிழக்குப்பல்கலைக் கழகம், இலங்கை. |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| பதிப்பு | : | முதலாம் பதிப்பு – 2021 |
| வெளியீடு | : | மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் சங்கம்,<br>மட்டக்களப்பு செயலகம்,<br>கச்சேரி, மட்டக்களப்பு. |
| அச்சுப்பதிப்பு | : | துர்க்கா அச்சகம், கொக்குவில், மட்டக்களப்பு. |
| அட்டைப்படம் | : | தஞ்சைப் பெரிய கோயில் |
| ISBN | : | 978-624-5967-00-1 |
| பக்கம் | : | 131 |
| விலை | : | 650/= |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்வுரை



**பேரா.முனைவர் க. பாஸ்கரன்**
மேனாள் துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - தமிழ்நாடு

முனைவர் (திருமதி) எஸ். கேசவன் அவர்கள் வெளியிடும் அருமையான ஆய்வு நூலான "சோழர் கால திருக்கோயிற் சிற்பங்களில் இசைக் கருவிகள்" என்னும் தலைப்பினிலமைந்த நூலிற்கு அணிந்துரை எழுதும் மகிழ்வான வாய்ப்பினை அடைந்தேன்.

முனைவர் (திருமதி) எஸ். கேசவன் அவர்கள் தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் தத்துவமையத்தின் முதுகலைப்பட்ட மாணவியாக இருந்தபோது சீரிய ஆய்வார்வத்தின் பயனாய் இதே தலைப்பினில் ஆய்வினை அளித்திருந்தார். அதனை நூலாக்கம் செய்திருப்பது மிகவும் சிறப்பான ஒன்றாகும். அதற்கென அவர்களைப் பாராட்டி மகிழ்கிறேன்.

இந்தியப் பண்பாடு என்பது நான்கு முக்கிய கூறுகளைக் கொண்டமைந்ததாகும், கலை, சமயம், தத்துவம், அறிவியல் என்பனவே அந்நான்கு கூறுகள். இதில் கலையே முதலிடம் பெறுகிறது. அந்நிலையில் கலை என்பது நுண்கலைகளையே குறிக்கும். நுண்கலைகளாவன கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசை, நாட்டியம் மற்றும் படிமக்கலை என்பனவாகும்.

இதில் சிற்பக்கலை என்பது பெரும்பாலும், திருக்கோயில்களில் அதிகளவில் வெளிப்பட்டிருப்பதை அனைவரும் அறிவோம். திருக்கோயில் என்பதே ஒரு பண்பாட்டு மையம் என்றே கூறலாம். திருக்கோயில்களில் தான் ஆயகலைகள் அனைத்தும் ஒருங்கே அமைய பெற்றிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டில், கோயிற்கலையில் சிற்பக்கலையே அதிக முக்கியத்துவம் பெறும். உண்மையான நேர்த்தியான சிற்பக்கலை என்பது இறையுணர்வின் முழுநிறைவு அல்லது பூரணத்தும் எனலாம். திருக்கோயில்களின் சிற்பக்கலை ஆன்மிக அனுபவத்தில், அறிக்கக் கூடிய வல்லமை வாய்ந்தனவாகும். அச் சிற்பங்களில் இறைவனின் எல்லாப் படைப்பு உயிரினங்களின் உருவங்களையும் காணலாம்.

இறைவனின் படைப்பினை, பிரபஞ்ச அமைப்பினை, உலக நிகழ்வினை, மக்கள் வாழ்வு நிலைகளை வெளிப்படுத்தக் கூடியவை சிற்பக்கலையின் படைப்புகள். அதுவும் சிறப்பாக தமிழ்நாட்டுக் கோயிற் சிற்பக்கலைகளில், அற்புதமாக அனைத்தையும் நோக்கலாம். அந்நிலையில் சோழர்கால திருக்கோயிற் சிற்பங்களில் காணப் பெற்றிருக்கும் இசைக்கருவிகளைக் கண்டறிந்து அதனை முனைவர் (திருமதி) எஸ். கேசவன் தனது ஆய்வில் வெளிப்படுத்தியுள்ள திறனை மிகவும் பாராட்டலாம். அதிலும் குறிப்பாக தனது நுட்ப ஆய்விற்காக சோழர்கால திருக்கோயில்களான தஞ்சை பெரிய கோயில், கங்கை கொண்ட சோழீஸ்வரம், தராசுரம் ராஜராஜ சோழீஸ்வரம், திருபுவனம் கம்பகரேஸ்வரர் கோயில் என்ற நான்கு சிறப்பு மிகு திருக்கோயில்களைத் தெரிவு செய்து இருப்பதனை பாராட்டலாம்.

இசை என்பது இறைவனை நோக்கிய ஆன்மிக மொழி அதுவே இறைவனின் திருவடிகளை அடைவிக்கும் வழிமுறையாகும். "இசை இல்லையெனில் வாழ்க்கை என்பதே ஒரு தவறாகும்" என்ற நீட்சே எனும் தத்துவ அறிஞரின் கூற்று முழு உண்மையாகும். டால்ஸ்டாய் "இசை என்பது மன உணர்ச்சிகளின் ஒரு சுருக்கம்" என்கிறார். இசையின் உணர்வுகள் சமய நிலையில் இறைவனை நோக்கி நிற்கும் போது இசையின் மொழியினை இறைவன் விரும்புகிறான். இப்படியாக பல சிறப்புகளைப் பெற்ற இசைகளை வெளிப்படுத்தும் இசைக்கருவிகளும் மிக முக்கியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் கோயில் வழிபாடுகளில் இசைக்கருவிகள் அவசியமானதாக அமைந்துள்ளன. எனவே கோயில் சிற்பங்களிலும் இசைக்கருவிகள் அற்புதமாய் இடம் பெற்றுள்ளன. இதனையே ஓர் ஆய்வுப் பொருண்மையாக முனைவர் (திருமதி) எஸ். கேசவன் எடுத்து ஆராய்ந்துள்ளமை அனைவரும் பாராட்டுதல் வேண்டும். ஏனெனில் இப் பொருண்மையில் நிகழ்ந்த ஆய்வுகள் மிகக் குறைவானதாக உள்ள நிலையில் இவர் இவ்வாய்வினை மேற்கொண்டுள்ளார்.

முன்னுரை, முடிவுரை உள்ளிட்ட ஆறு இயல்களைக் கொண்ட இந்நூலின் மையப் பொருண்மையாக ஆய்வு நோக்கமாக அமைந்துள்ள தத்துவ, சமூகவியல் பார்வை என்பது தான் மிகவும் பாராட்டுதல்களுக்கு உரியதாகும். ஏனெனில் ஆய்வு என்பது சமூக நோக்கு, சமூகப்பார்வையோடு அமைந்திருந்தால் தான் ஆய்வின் உண்மையான பயன் மக்களைச் சென்றடையும். அந்நிலையில் முனைவர் (திருமதி) எஸ். கேசவன் அவர்கள் முன்னர் குறிப்பிட்ட நான்கு சிறப்பு மிகு சோழர்கால திருக்கோயில்களில் காணப்பெற்ற சிறப்புக்களில் வெளிப்படுத்தப்பட்ட இசைக்கருவிகளை அருமையான முறையில் ஆய்ந்தறிந்து அவற்றின் தத்துவப் பின்னணிகளையும், சமூகவியற் பயன்பாடுகளையும் மிகச் சிறப்பாக எழுதி அளித்துள்ளார்.

ஓர் அருமையான ஆய்வு நூல் இது. அனைவரும் படித்தறிதல் என்பது மிக முக்கியமாக சமய நிலையில், சமூக நிலையில் அவசியமான ஒன்றாக அமைந்துள்ள சீர்மிகு நூலினை யாத்த முனைவர் (திருமதி) எஸ். கேசவன் அவர்களுக்கு பாராட்டுகள், வாழ்த்துகள்.

தஞ்சாவூர்
05.08.2021

க. பாஸ்கரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

தலைவர்,
மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் சங்கம்
மட்டக்களப்பு செயலகம்,
கச்சேரி, மட்டக்களப்பு.



மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் சங்கம் 2021ஆம் ஆண்டு தேசிய மரபுரிமை அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் கீழ், மாவட்ட செயலாளரின் ஆலோசனைக்கு அமைவாகத் தாபிக்கப்பட்டது. இதன் நோக்கம் மறைந்து, அழிந்து, அருகிக்கொண்டு செல்கின்ற அருங்கலைகளையும் இலக்கியங்களையும் பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்குக் கையளிப்பதாகும்.

தமிழர் வாழ்வு, கிறிஸ்துவிற்கு முற்பட்ட (கி.மு) காலம் தொடக்கம் இன்றுவரையும் பல்வேறு மாற்றங்களுடன் பயனிக்கின்றது. சங்ககாலத்தில் முடியுடைய மூவேந்தர்களின் ஆட்சியினால் சிறப்புப்பெற்ற தமிழர் சால்பு, சோழர் காலத்தில் உச்சங்காணுகின்றது. இக்காலத்தில் சோழ மன்னர்களுடைய அசையாத தன்னம்பிக்கையினால் கங்கைமுதல் கடாரம் வரை தோராயமாக நானூறு ஆண்டுகள் அவர்களின் ஆட்சி நீட்சிபெற்றது. சோழ அரசர்களின் ஆட்சியில் பல்வேறு சிறப்புத் தன்மைகள் மேலோங்கின. அதனால் இக்காலம் பொற்காலம் என்ற தன்மையில் உயர்ந்து நிற்கின்றது.

அந்த வகையில் "சோழர் கால திருக்கோயிற் சிற்பங்களில் இசைக் கருவிகள்" எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்த வெளியீட்டினால் மாணவர்கள் மட்டுமன்றி ஆய்வினை மேற்கொள்ளும் ஆராய்ச்சியாளர்களுக்கும் இந்நூல் பயனுடையதாக அமையும். இந்த நூலினை சிறப்பாகத் தயாரித்து வெளியிடும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின், இந்துநாகரிகத்துறையின் மேனாள் தலைவர், முதுநிலை விரிவுரையாளராக பணிபுரியும் கலாநிதி (திருமதி) எஸ். கேசவன் அவர்களுக்கு எமது நன்றிகள்.

**கலாநிதி. மு. தயாநிதி**
பதிவு எண் (NH/PL/01/10,ADS/GENRL/DS-16174)
2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

உலகில் அறிவியற் கலைகளையும், அழகுக் கலைகளையும் எந்த நாடு செம்மையாகவும், சிறப்பாகவும் முறையாகவும், வகையாகவும் வளர்க்கிறதோ அந்நாடு நாகரிக மேம்பாட்டையும், பண்பாட்டு உயர்வையும் மிக நல்ல முறையில் பெற்று விளங்கும். இந்த இலக்கணத்தை போற்றி வளர்த்ததில் சோழ மன்னருக்கு உயரிய இடமுண்டு.

சிற்பங்களில் இசைக்கருவிகள் என்பது ஒருங்கிணைந்த அறிவியற்கலை. இராகம், தாளம், பாடலுக்கு பக்க துணையாயிருக்கும் இசைக்கருவியானது சிற்பங்களில் பொருந்தும் போது அது இசைச் சிற்பங்களாகின்றன. இத்தகைய உன்னதமான தலைமுறையை இராஜராஜன், இராஜேந்திரன், இரண்டாம் ராஜராஜன், மூன்றாம் குலோத்துங்கன் காலம், உலகியல் கலை வரலாற்றில் சிறப்பான காலங்களே என்பதில் வியப்பில்லை. இச் சோழ மன்னர்கள் உருவாக்கிய கோயில்களை நேரடியாகச் சென்று ஆய்வு மேற்கொள்ள வைத்த இறைவனுக்கு சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத்தை ஒரு பாடமாக கற்பிப்பதற்காக 2001ம் ஆண்டு நான் விரிவுரையாளராகத் தெரிவு செய்யப்பட்ட போது நுண்கலைத்துறையில் இணைக்கப்பட்டிருந்தேன். அப்போது அத்துறைக்குத் தலைவராக இருந்தவர் மதிப்பிற்குரிய பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள். அவர் தலைமையின் கீழ் சேவையாற்றியதையிட்டு வாழ்வில் நான் பெற்ற பெரும் பாக்கியமாக கருதுகின்றேன். முதலில் என்னை வழி நடத்திய பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களுக்கு மிக்க நன்றி.

நான் ஏற்கனவே இந்துநாகரிக பாடநூல் புத்தகங்களை எழுதியிருந்தாலும் பல்கலைக்கழகம் எனக்கு ஒரு முற்றிலும் மாறுபட்ட ஒரு கல்விச் சூழலை உத்வேகத்தைக் கொடுத்தது என்றே கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2001ம் ஆண்டில் நடைபெற்ற வருடாந்த ஆய்வுக் கருத்தரங்கில் மட்/ஆனைப்பந்தி சிற்பங்களை விபரண ஆய்வாக இலத்திரனியல் நிகழ்த்துகையூடாக (Power Point) பல்வேறு படங்களுடன் விளக்கினேன்.

சிற்பங்கள் எதனைக் கூறி நிற்கிறது? எதனை சமூகத்திற்கு விளக்கி நிற்கிறது? சிறுவர்கள் மட்டும் அல்ல பெரியவர்களுக்கும், இதன் தாற்பரியம் தெரியாது என்ற பல கேள்விகளை பேராசிரியர்கள் ஊட்பட பலரும் பல வினாக்களைத் தொடுத்திருந்தார்கள். அப்போது என்னால் கூட முழுமையாகப் பதிலளிக்க முடியவில்லை. அதன் தொடர்ச்சியின் வளர்ச்சியாகவே முதுகலைமாணிப் பட்டபடிப்பினை நிறைவு செய்யும் பொருட்டு **"கோயிற் சிற்பங்களில் இசைக்கருவிகள் – தத்துவம், சமூகவியல் பார்வை"** எனும் தலைப்பை தெரிவு செய்தேன். இசையாசிரியர்களிடம் இது பற்றி கலந்துரையாடும் போது இத்தலைப்பு கடினமான தலைப்பு என்றார்கள். ஆனால் இதில் எனக்கு ஏற்பட்ட ஈடுபாட்டின் காரணமாக அரிய பல நூல்களை, இந்திய நூலகங்கள் பலவற்றில் தேடினேன்.

நுண்ணிய ஆய்வுக்காக நான்கு கோயில்களையும் அதாவது தஞ்சைப் பெரிய கோயில், கங்கை கொண்ட சோழீஸ்வரம், தாராசுரம் ராஜராஜ சோழீஸ்வரம் (ஐராவதேஷ்வரர்) திருப்புவனம் கம்பகரேஸ்வரர் கோயில் என்பவற்றை தெரிவு செய்தேன்.

இதற்காக ஒவ்வொரு கோயிலையையும் நேரடியாகச் சென்று (கள ஆய்வு) நுட்பமாக, சிற்பங்களில் இசைக்கருவிகள் பற்றி ஆராய்ந்து, சிற்ப இசைக் கலை கூறும் தத்துவம், சமூகவியல் சிந்தனைகளை, என்னால் முடிந்தவரை ஆராய்ந்து 2008ம் ஆண்டு தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக முதுகலைமாணிப் பட்டப்படிப்பிற்காகச் சமர்ப்பித்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கள வாய்வினைப் பற்றி ஆய்வு மேற்கொள்ளும் போது சில தகவல்கள் விடுபட்ட வேளை திரும்பவும் தஞ்சாவூரில் இருந்து பல மைல்களுக்கப்பால் விளங்கும் கோயில்களை மீண்டும் ஆய்வு செய்யச் சென்றேன். இவ்வாறு பெறப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்த இவ் ஆய்வு நூலினை இன்று எமது சமூகத்தினர் பார்வையிடும் பொருட்டு நூலாக்கம் செய்வதில் மகிழ்வடைகின்றேன்.

இவ்வாய்வினை எழுதுதற்கு தெளிவான கருத்துக்களையும் விளக்கங்களையும் அளித்து சிறப்பான முறையில் எனக்கு சிறந்த வழிகாட்டியாக இருந்து ஊக்குவித்த (2006 – 2008) எமது ஆய்வு நெறியாளரும், தமிழ் பல்கலைக் கழக மேனாள், துணை வேந்தர் பேரா. முனைவர் க. பாஸ்கரன் அவர்களுக்கு எமது உளங்கனிந்த நன்றிகளை உரித்தாக்குவதுடன் இன்று இந்நூலிற்கு ஒரு அணிந்துரை வேண்டி நின்ற போது எவ்வளவோ வேலைப்பளு மத்தியிலும் இந்நூலுக்கு அரிய தொரு மகிழ்வுரை ஒன்றினையும் தந்துள்ளார். அவர்களுக்கு மீண்டும் என் சிரம் தாழ்ந்த நன்றிகள்.

மேலதிக அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் வழங்கிய தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழக பேரா. முனைவர், க. குளத்தூரன், முனைவர் ஜெ. அரங்கசாமி, முனைவர் செ. நீலாயதாட்சி, முனைவர் கோ. ப. நல்லசிவம் அவர்களுக்கும் என் நன்றிகள்.

இவ் வாய்வினை மேற்கொள்ளும் போது ஆரம்ப காலம் முதல் எமது கல்விக்கு ஊக்கமும், ஆக்கமும் தந்து வழி நடாத்திய பெற்றோர்களுக்கும், (இன்று அவர்கள் உயிருடன் இல்லை) எனது சகோதரி திரு. திருமதி. தயாபரன் குடும்பத்தினருக்கும், எனது பிள்ளைகள் கே. சுபராஜீதன், கே. ஷேமங்கரி அவர்கட்கும் என் நன்றிகள். தற்போது எங்கள் குடும்பத்தில் சுருதி சுபராஜீதன், துலாஞ்சனன் விவேகானந்தராஜா ஆகிய இரு பிள்ளைகளும் இணைந்து உள்ளார்கள். எனது உடல், உள விருத்தியில் இவர்களது பங்கும், பணியும் மகத்தானது. எனவே இவர்களுக்கு விசேட நன்றிகள் உரித்தாகட்டும்.

**டாக்டர் (திருமதி) எஸ். கேசவன்**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| நூல் விபரம் | i |
| அணிந்துரை | ii - iv |
| வெளியீட்டுரை | v |
| என்னுரை | vi-viii |
| முன்னுரை | 1 – 5 |
| 1. கலை அறிமுகம் | |
| 1.1 கலைகளின் வகைகளும் சிற்பங்களும் | 5 – 6 |
| 1.2 சிற்பங்களை அமைக்கும் பொருட்கள் | 7 – 8 |
| 1.3 இசைச் சிற்பங்களுக்குரிய ஆதாரங்கள் | 9 – 23 |
| 2. இசைக்கருவிகள் – உருவமைப்பு | 23 – 42 |
| 3. திருக்கோயில் சிற்பங்களில் இசைக்கருவிகளின் – தோற்றமும் வளர்ச்சியும் | |
| 3.1 சங்ககாலம் – பல்லவர், பாண்டியர் காலம் வரை | 43 – 49 |
| 3.2 ஆரம்பகாலச் சோழர் தொடக்கம் – இராஜராஜ சோழர் காலம் வரை | 49 – 54 |
| 4. இராஜராஜ சோழர் காலம் தொடக்கம் குலோத்துங்க சோழர் காலத்து இசைச் சிற்பங்கள் | |
| 4.1 தஞ்சைபெரியகோயில் | 55 – 62 |
| 4.2 கங்கைகொண்ட சோழீஸ்வரம் | 63 – 74 |
| 4.3 தராசுரம் ராஜராஜசோழீஸ்வரம் | 74 – 86 |
| 4.4 திருபுவனம் கம்பகரேஸ்வரர் | 86 – 96 |
| 5. இசைக்கருவிகளின் தத்துவவியல் பார்வை | 96 – 115 |
| 6. இசைக்கருவிகளின் சமூகவியல் பார்வை | 116 – 130 |
| 7. முடிவுரை | 131 – 132 |
| 8. துணை நூற்பட்டியல் | i - v |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## ஆய்வு அறிமுகம்

இந்தியக் கலை வரலாற்றில் பல்லவர் காலச் சிற்பக்கலை பல சோதனைக் களங்களைத் தாண்டி நிலை பெற்றது. சோழர்காலச் சிற்பக்கலை அந்த வெற்றியின் அடித்தளத்தில் பல்கிப்பெருகி கலை வரலாற்றில் ஒரு "பொற்காலம்" என்று உலகமே வியக்கும் வண்ணம் போற்றப்படுவது வரலாறுகண்ட உண்மை. விஜயாலய சோழனுடன் தொடங்கி மூன்றாம் இராஜேந்திரசோழனுடன் முடிவு பெறும் ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்கு இடைப்பட்ட சோழப் பெருவேந்தர் காலத்தில் தமிழ்நாட்டில் மலர்ந்த சிற்பக்கலை வளர்ச்சியை இரு பிரிவுகளாக வகுக்கலாம். முதலாம் இராஜராஜனின் ராஜராஜேசுவரத்திற்கு முற்பட்டவை முதற்பிரிவில் அடங்கும். இராஜராஜேசுவரத்துடன் தொடங்கி திருபுவன வீரேசுவத்துடன் முடிவது இரண்டாம் பிரிவு.

தஞ்சையை தலைநகராகக் கொண்டு, ஆண்ட சோழமன்னர்கள் இலங்கை, தென்கிழக்காசிய நாடுகள் போன்ற பல இடங்களையும் தம் ஆட்சியின் கீழ் கொண்டிருந்தமையால் செல்வவளம் மிகுந்து பல அரிய கலைப் பணிகளைச் செய்துள்ளனர். சோழ மன்னர்களுள் இராஜராஜ சோழன் இராஜேந்திரச்சோழன், இரண்டாம் ராஜராஜன், மூன்றாம் குலோத்துங்கன் கால சிற்பக்கலை உலகப் புகழ்பெற்றவை. எனவே இவர்கள் காலப்பகுதியில் அடங்கும் சிறப்பு மிக்க திருக்கோயில்களாக விளங்கும்

1. தஞ்சைப் பெரியகோயில்
2. கங்கைகொண்ட சோழீஸ்வரம்
3. தாராசுரம் ராஜராஜசோழீஸ்வரம்
4. திருபுவனம் கம்பகரேஸ்வரர் கோயில்

என்பன இவ்வாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுவதுடன் இக்கோயில்களில் காணப்பெறும் இசைச்சிற்பங்களே முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இது பற்றிய முழுமையான ஆய்வுகள் இதுவரை இடம் பெறவில்லை இதற்கமைய "சோழர்கால திருக்கோயிற் சிற்பங்களில் இசைக்கருவிகள்" எனும் தலைப்பு ஆய்வுக்குரிய தலைப்பாக தேர்ந்தெடுக்கப்பட்டது. அத்துடன் இக்கோயில் இசைச்சிற்பங்கள் தொகுத்தும், பகுத்தும் ஒப்பிட்டும் கூறியதுடன் இசைச்சிற்பங்கள் சமூகவியல், தத்துவவியல் பார்வையில் பெறும் சிறப்பும் இவ் ஆய்வில் முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வின் பிரச்சினை

சிற்பங்கள் எதனைக் கூறி நிற்கின்றன? அதிலும் சிறப்பாக கோயில்களில் இசைச் சிற்பங்களை ஏன் செதுக்கினார்கள்? அதன் தத்துவப் பின்னணி என்ன? சமூகத்திற்கு அது கூறும் செய்தி என்ன? என்பனவே ஆய்வின் பிரச்சினையாகும்.

## ஆய்வின் நோக்கம்

சோழ மன்னர்களின் இசைச் சிற்பங்கள் பல்லவ மன்னர்களின் கலைப்பின்னணியாலும், பின்னர் வந்த கலை மாறுதல்களையும் உள்ளடக்கி தனக்கே உரித்தான புதிய பரிணாமங்களில் சோழர்களின் கலைப்படைப்புகள் எவ்வெவ் வகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதை ஆராய்தல்.

இதை விட இசைக்கருவிச் சிற்பங்களுக்கும் தத்துவம் மற்றும் சமூகத்திற்கும் இடையே உறவுகள் உண்டு, இந்த உறவுகளும் இதுவரை ஆழமாக யாராலும் ஒரே பார்வையில் எடுத்துக் கூறப்படவில்லை. எனவே இவற்றை நிறைவு செய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு முன்னோடிகள்

கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியின் History of South India என்ற நூலும், டி.ஏ. கோபினாத்ராவ் எழுதிய Elements of Hindu Inconagraphy, கே.ஆர் சீனிவாசன் எழுதிய தென்னிந்தியக் கோயில்கள், எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் எழுதிய கலை வரலாறு, மயிலை சீனி வேங்கடசாமி எழுதிய அழகுக்கலைகள் போன்ற சிற்பங்களை சிறப்பாக எடுத்துக் கூறினாலும் ஆங்காங்கே சில இடங்களில் மட்டுமே இசைச் சிற்பங்களை அடையாளப்படுத்தியுள்ளனர்.

இசை நூல் ஆராய்ச்சி செய்தவர்கள், குறிப்பாக பஞ்சமரபு – அறிவனார் இயற்றியது, ஆபிரகாம் பண்டிதர் – கருணாமிர்தசாகரம், சுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிருஞ்ஞானந்தா எழுதிய Music of the South - Asion Peoples, எச். ஏ. பொப்பிலியின் "The music of India" பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி எழுதிய South Indian Music, History of Indian Music போன்றன தனியே இசை இலக்கணம், இசையின் சிறப்புக்களைக் கூறும் சிறப்பான நூல்களாகும். பி. சைத்தன்யதேவ இசைக்கருவிகளின் அமைப்பு பற்றி எழுதியுள்ளார். ஞானகுலேந்திரன் பழந்தமிழர் ஆடலில் இசை என ஆடலுடன் தொடர்பு படுத்தியுள்ளார். எனவே இவ்வாறாக பல ஆராச்சி நூல்கள் தனித்தனியே சிற்பக்கலையையும், இசைக்கலையையும் எழுதியபோதிலும் "இசைச்சிற்பங்கள்" பற்றி முழுமையான ஆய்வுகள் இதுவரை வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆய்வின் எல்லை

இசைக் கருவிச் சிற்பங்களின் உயர்நிலை கி.பி. பத்தாம் நூற்றாண்டில் ராஜராஜசோழனுடன் முகிழ்கின்றது. எனவே இப்பேரரசன் காலத்துடன் ஆரம்பமாகிய சிறப்பு மிக்க தஞ்சைப் பெரியகோயில், கங்கைகொண்ட சோழீஸ்வரக் கோயில், தாராசுரம் ராஜ ராஜசோழீஸ்வரர் கோயில், திருபுவனம் கம்பகேஸ்வரர் கோயில் எனும் நான்கு கோயில்களும் இவ் ஆய்வின் எல்லைகளாகும்.

## ஆய்வு மூலங்கள்

### முதல் நிலை தரவு - களப்பணி

திருக்கோயில்களின் சிற்ப இசைக்கலைகளை கள ஆய்வு முறையில் நான்கு தலங்களுக்குச் சென்று நேரடியாகவும், ஆலய தர்மகர்த்தாக்களிடம் பேட்டி மூலம் பெறப்பட்ட செய்திகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதுவே முதன்மைச் சான்றுகளாகும்.

### இரண்டாம் நிலைத்தரவுகள்

கோயில் சிற்பக்கலை, இசைக்கலை பற்றி நூல்களில் சொல்லப்பட்டுள்ள செய்திகள் குறிப்பாக சில்பரெத்தினம், மயமதம், ஆகமங்கள், புராணங்கள் மற்றும் இலக்கியங்கள், கல்வெட்டுக்கள் ஆராய்ச்சியாளர்களது நூல்கள் இரண்டாந்தர செய்திகளாகச் சேகரிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வில், வரலாற்று விவரண முறையியல், விளக்க முறையியல், மதிப்பீட்டு முறையியல், பகுப்பாய்வு முறையியல், பிரயோக முறையியல் ஆகிய ஆய்வு அணுகு முறையியல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## ஆய்வேட்டின் இயல் அமைப்பு

இவ் ஆய்வேடானது முன்னுரை, முடிவுரை நீங்கலாக கீழ்க்கண்டவாறு ஐந்து இயலாக அமைந்துள்ளது.

1. கலை – அறிமுகம்
1. இசைக்கருவிகள் – உருவ அமைப்பு
3. திருக்கோயிற் சிற்பங்களில் இசைகருவிகள் – தோற்றமும் வளர்ச்சியும்
4. இராஜராஜசோழன் தொடக்கம் மூன்றாம் குலோத்துங்க சோழன் கால இசைச் சிற்பங்கள்
5. இசைக்கருவிகள் – தத்துவ, சமூகவியல் பார்வை

இறுதியாக முடிவுரையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முறைகள் பற்றியும், ஆய்வாளருக்கு ஏற்பட்ட அனுபவங்கள் பற்றியும் மேலும் வளர்ச்சி பெற வேண்டிய பணிகள் பற்றிய கருத்துகளைக் கூறும் வகையில் முடிவுரை அமைக்கப்பட்டுள்ளது.

## ஆய்வின் பயன்

கோயில்களில் இசைக்கருவிச் சிற்பங்களின் சமயச் சிறப்பு, தத்துவம், சமூகம் பற்றிய செய்திகளை இதுவரை எவரும் ஆழமாக ஆய்வுக்குட்படுத்தாததினால் இவ்வாய்வு முதல்நிலை முன்னோடி ஆய்வாக அமைகின்றது.

சோழ மன்னர்கள் குறிப்பாக மேற்குறித்த நான்கு ஆலயங்களிலும் இடம் பெற்ற இசைச்சிற்பங்கள் முழுமையாக ஆராயப்பட்டு அதிகமான அளவில் எவரும் வெளியிடாத இசைச் சிற்பங்களின் புகைப்படங்களுடன் இவ்வாய்வு இடம் பெறுவதால் இசை ஆர்வலர்களுக்கு இது பெரிதும் பயன்படும் வகையில் அமையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் தரிசனம் செய்வோர் வெறுமனே இசைச் சிற்பங்களாக பார்க்காமல் அவை கூறும் தத்தும் மற்றும் சமூகவியல் சிந்தனைகளை அறியும் போது அச்சிற்பங்கள் எம்முடன் பேசும் சிற்பங்களாகவும், வாழ்க்கைக்கு வழிகாட்டும் சிற்பங்களாகவும் காணுமாறு அமையும் என்பது என் எண்ணம். இக்கோயில்களில் இசைச் சிற்பங்களின் பெருமைகளை அறிந்து அழிந்து கொண்டு போகும் சிற்பங்களை பராமரிக்கும் எண்ணத்தை ஏற்படுத்துவதற்கும் இவ் ஆய்வு துணைபுரியுமெனலாம்.

## துணை நூற்பட்டியல்

இவ் ஆய்வேட்டின் இறுதியில் ஆய்வுக்குத் துணையாக நின்ற ஆதார நூல்களின் பெயர்கள் இடம் பெறுகின்றன.

## பின்னிணைப்புகள்

நிழற்படங்கள் பல எடுக்கப்பட்டுள்ளன. இவ் நிழற்படங்கள் இத்தகு நுட்பமான ஆய்வுக்குத் துணைநிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் ஒன்று

# கலை – அறிமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Class No:
Acc No

★-கள ஆய்வு மேற்கொள்ளப்பட்ட சோழர் காலத் திருத்தலங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. கலை - அறிமுகம்

மானிடரின் அழகிய படைப்புகளைக் கலை என்கிறோம். படைப்பு என்பது வடிவினதாகவோ, வரைதலாகவோ, பொருளாகவோ, நிகழ்த்துதலாகவோ இருக்கலாம், கலைகள் மொழி, லயம் (Rhythm) இசை என்பவற்றை வாயிலாகக்கொண்டு படைக்கப்படுகின்றன. இவை தனித்தனியாகவும், ஒன்றுக்கு மேற்பட்டவற்றோடும் கலந்து பயன்படுத்தப்பெறுதலும் உண்டு[1] உதாரணமாக குழல், யாழ் என்பவற்றில் இசை, லயம் இரண்டும் முறையே மாதா, பிதா எனும் வகையில் முக்கியத்துவம் பெறுகின்றன. இவ் விசைக்கருவிகள் சிற்பங்களாக படைக்கப்படும்போது, இவற்றை உணர்த்தும் இசைச் சிற்பங்களாகின்றன.

சிலம்பொலி செல்லப்பன் (1990:3) கலை பற்றிக் கூறுகையில் "கலை என்பது ஒன்றைச் செய்வதில் அல்லது ஒன்றை உருவாக்குவதில் உள்ள திறமை" என்று குறிப்பிடலாம் என்கிறார்.

தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் "கலை என்பது கலைஞனது அனுபவத்தினை அவன் வெளியிடும் வெளிப்பாடு மட்டுமன்று அதன் வெளிப்பாட்டினையே கலைஞர் உணர்வு நிலையில் துய்க்கின்ற அனுபவமாகும்" என்கிறார்.

"கலை என்பது ஆபரணமல்ல, நாட்டின் நல்ல பண்பினை வெளிப்படுத்துவது அது. அதே வேளையில் பண்பை உருவாக்கும் கருவி அது"[2] ஒவ்வொருவரும் தத்தமது அறிவு, அனுபவம் சூழ்நிலை என்பதற்கேற்ப இதற்கு விடை தர முயல்வர். கலை என்பது என்ன என்று கூறமுடியாவிட்டாலும் ஓவியம், கட்டடம், சிற்பம், நடனம், சங்கீதம், நாடகம் என்பவற்றை எவ்விதத்தயக்கமுமின்றி எவரும் கலைகள் என்று கூறிவிடுவர்.[3]

## 1.1 கலைகளின் வகைகளும், சிற்பங்களும்

சிலப்பதிகாரத்தில் கலைகள் அறுபத்து நான்கு என்று கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எண்ணெண் கலையும் இசைந்துடன் போக"[4]

"எண்ணென் கலையோர் இருபெருவீதி"[5]

என்பதிலிருந்து 8X8 = 64 என கலை வகைப்படுத்தப்பட்டுள்ளது. சில நூல்களில் கலைகள் எழுபத்தி இரண்டுக்கு மேலும் உள்ளது எனக் கூறப்படுகின்றது. (செ. வைத்திலிங்கம் 19:864) ஆனால் பழைய மரபுப்படி இன்றும் "ஆயகலைகள் அறுபத்துநான்கு" என்று கூறுவதே நமது வழக்காயிற்று.

இந்த அறுபத்து நான்கு கலைகளுள் நுண்கலைகள் சிறப்பிடம் வகிக்கின்றது. அவையாவன : 1. கட்டடக்கலை, 2. சிற்பக்கலை, 3. ஓவியக்கலை, 4. நடனக்கலை, 5. இசைக்கலை முதலியனவாகும். இக்கலைகளின் வளர்ச்சியின் போக்குகளுக்கும், சமுதாய வளர்ச்சிகளுக்கும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புகளுண்டு.

**சிற்பங்கள்**

சிற்பங்கள் தெய்வத்தை அணுகுவதற்குரிய சாதனங்கள் ஆகும். தெய்வ உணர்வு பெற்ற ஆன்றோர் மனதிற்கு எட்டாத பரம்பொருளையும், அளவு கடந்த அழகினையும் தமது சிந்தையில் உருவகப்படுத்தினார்கள். அன்பும் தன்னம்பிக்கையும் கொண்ட அவர்களது உள்ளத்தில் பக்தி உதித்தது. இறைவனும் அடியார்க்கு எளியனாதலால் தத்துவ சிந்தனைகளை, மானிட வாழ்வின் நோக்கத்தை, வாழும் முறையை தோற்றுவித்து அவர்தம் இதயத்தில் இடம் கொண்டான். ஆகவே சான்றோரிடத்துத் தத்துவப் பொருளின், அழகிய கருத்துக்களும் நிரம்பப் பெற்ற அவர்கள் தம் கருத்துக்களை உலகம் அனுபவிக்கவேண்டுமென நினைத்தனர். அவ்வெண்ணங்கள், சிற்பங்களாயின. அவ்வெண்ணங்கள் இசையாய் மாறின. இவ்விசை ஆகமங்களாயின. அதன் விதிகள் சிற்ப சாத்திரங்களாயின.[6]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.2 சிற்பங்களை அமைக்கும் பொருட்கள்

**மணிமேகலை**

"மண்ணிலும் கல்லிலும் மரத்திலும் சுவரினும்
கண்ணிய தெய்வம் தம் காட்டுநர் வகுக்க"

எனச் சிற்பங்கள் எவ்வெவ் பொருள் கொண்டு உருவாக்கப்பட்டன என உணர்த்துகின்றன.

**பிங்கல நிகண்டு**

"கல்லும், உலோகமும், செங்கல்லும், மரமும்
மண்ணும், சுதையும், தந்தமும், வண்ணமும்
கண்ட சருக்கரையும், மெழுகும் என்றிவை

பத்தே சிற்பத்தொழிற்கு உறுப்பாகும்" என பிங்கலநிகண்டு (3–129) தெய்வத்திருவுருவங்களைச் சமைப்பதற்குரிய மூலப் பொருள்களைக் கூறுகின்றது.

### சிற்பங்கள் இரண்டு வகை

1. முழுவுருவச் சிற்பம்
2. புடைப்புச் சிற்பம்

**முழுவுருவச் சிற்பம்**

தெய்வ வடிவங்களின் அல்லது பொருள்களின் முன்புறம் பின்புறம் முதலிய முழு உருவமும் தெரிய அமைக்கப்படுவது.

**புடைப்புச் சிற்பம்** (relief works)

தெய்வ வடிவங்களின் அல்லது பொருள்களின் ஒரு புறம் மட்டும் தெரியும்படி சுவர்களிலும், பலகைகளிலும் அமைக்கப்படுவது. இவ் வித சிற்ப உருவங்கள் கோயில்களில் அமைக்கப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுதைப்பொருட் சிற்பங்கள்**

சுண்ணாம்பை நன்கு அரைத்து கருப்பஞ்சாறு, வெல்லச்சாறு, நெல்லிக்காயின் சாறு முதலியவற்றை ஊற்றி அரைத்து வச்சிரம் போல் செய்து, அதைக் கொண்டு உருவங்கள் செய்வது பண்டைய மரபு. உருவங்களைச் செய்வதற்கு ஏதுவாக உள்ள வலிய மரத்தாலான முளையொன்று வைக்கப்பட்டுச் செங்கல், கம்பிகள் முதலியவற்றைப் பொருத்தி, சுண்ணாம்புக் காரை பூசி, மேலே சுதை பூசி உருவங்கள் அமைக்கப்படும்.[7]

பல்லவர் காலக் கோயில்களில் சுதையுருவங்கள் இருந்தன. செங்கல்லால் சுவர்களை எழுப்பி அவற்றின் புறங்களில் சுதையாலான உருவங்களை அமைப்பது மரபு.

கற்சிற்பங்கள் பெருவழக்கான சோழர்காலத்தில் கூட வானளாவிய கோபுரங்களில் சுதையுருவங்கள் அமைக்கப்பட்டன.

**மரச்சிற்பங்கள்**

நல்நிலத்தினின்று பெற்ற நன் மரத்தால் செய்யப்படும் சிற்பங்கள் மரச்சிற்பங்களாகும். தெய்வ உருவங்களை செய்ய மரத்தை வெட்டும்போது அம்மரத்தில் உறைந்திருந்த தேவதைகளுக்குரிய கிரியைகள் செய்யப்பட்டு மரம் உரிய முறையில் பெறப்படும். பின் மரத்தைச் செதுக்கி தெய்வ உருவங்களை எடுப்பர்.

**கற்சிற்பங்கள்**

கருங்கற்களால் அமைக்கப்படும் சிற்பங்கள் கற்சிற்பங்களாகும். கற்களில் ஆண்கல், பெண்கல், அலிக்கல் என மூன்று வகையுண்டு. அதற்கேற்ப ஆண் கல்லில் ஆண் உருவங்கள், பெண் கல்லில் பெண் உருவங்கள், அலிக்கல்லில் படிக்கட்டு, பீடம் போன்றவை உருவாக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியின் கீழ் பழுதுபடாத நல்ல நிலையிலிருக்கும் கல்லே விக்கிரகங்கள் செய்யப் பயன்படுத்தப்படும்.

**உலோகச் சிற்பங்கள்**

செப்பு, பித்தளை, ஈயம், வெள்ளி, தங்கம் சேர்ந்த பஞ்ச உலோக கலவையில் வார்க்கப்படும் சிற்பங்கள் உலோகச் சிற்பங்களாகும். இதனில் இரு வகையுண்டு. 1. முழு உருவமும் கனமாக வார்த்தல் (உள்ளீடற்ற வார்ப்புப் படிமம்) 2. பொள்ளலான படிமம் (உள்ளே வெற்றிடம், கூடானதாய் செய்யப்படும் முறை)

## 1.3. இசைச் சிற்பங்களுக்குரிய ஆதாரங்கள்

**சிற்ப நூல்கள்**

தமிழ்நாட்டுச் சிற்பிகள் கோயில்களையும், கல், உலோகச் சிற்பங்களையும் செய்வதற்குரிய விதிகளைக் கூறும் பல நூல்களைக் கையாண்டனர். சங்க நாளிலேயே "மனை நூல்" இருந்தது என்பதை நெடுநல் வாடை குறிப்பிடுகின்றது.

தற்போது கிடைக்கும் சிற்ப நூல்கள் வடமொழியிலேயே அமைந்துள்ளன. எனினும் அவை தமிழர்களின் செல்வங்கள் என்பதில் ஐயமில்லை. இடைக் காலத்தில் நாவலந்தீவு முழுவதும் அறியப்பட்ட மொழியாக வடமொழி விளங்கியமையால் தம் கலைகள் யாண்டும் பரவ வேண்டுமென்னும் பரந்த நோக்கில் அவை வடமொழியில் எழுதப்பட்டன போலும்.[8] இவை வடமொழியில் எழுதப்பட்டிருப்பினும் வடநாட்டுச் சிற்பிகள் இவற்றைப் பின்பற்றவில்லை என்பதனைக் கொண்டும், அவற்றின் உதவியோடு கட்டப்பட்ட கோயில்களும், வார்க்கப்பட்ட சிலைகளும் தென்னகத்திலே உள்ளன என்பதனைக் கொண்டும் இச்சாத்திரங்கள் தமிழரின் தனிச்சொத்துக்கள் என்றுணரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டைய சிற்ப நூல்கள் சில**

விசுவகர்மேயம், விசுவம், வசுவாசரம், பிரபோதம், விருத்தம், மயமதம், துவஸ்த்த தந்திரம், மனுசாரம், மானவிதி, மானசாரம், மானபோதம், விசுவாசியபம், மகாதந்திரம், வஸ்துவித்தியாபதி, சித்திரம், பானுபதம், இந்திரமதம், சௌரம்.

**தலைமையான சிற்ப நூல்கள்**

மயமதம், விசுவகருமேயம், மானசாரம், மனுசாரம், சித்திரகாசியபம், நாராயணீயம், இந்திரமதம், வாஸ்துவித்யம், காசியபம்,

இவை தவிர அகத்தியரின் சகளாதிகாரம் தலைமையான சாத்திரமென்றும், ஸ்ரீ குமாரின் சிற்ப ரத்தினம், சிற்பரத்தினாகாரம், மனுஷ்யாலய சந்திரிகை, சர்வார்த்த சிற்ப சிந்தாமணி, பிரம்மேயம், சரசுவதீயம் எனும் துணைச் சாத்திரங்களும் உண்டு. இவை ஆகமங்களுக்கேற்ப எழுதப்பட்டவை. காமிகாகமம், காரணாகமம், சுப்பிரபேதாகமம், வாதுளாகமம் ஆகியவற்றிலும் சிற்பச் செய்திகள் கிடைக்கின்றன.

## சிற்பநூல்களில் இசைச் சிற்ப படிமச் செய்திகள்

**வீணாதர தட்சணாமூர்த்தி படிமம்**

தட்சணாமூர்த்தி சாத்விக படிமவகையைச் சார்ந்ததாகும். ஆலமரத்தடியில் அமைக்கவேண்டும். வலது கால் தொங்கவிடப்பட்டிருக்கும். இடதுகால் மடக்கிக் கிடத்தப்பட்டு. இடதுகாலின் நுனி வலது முழங்காலிற்கு சமமாக அமைக்கவேண்டும். முடியில் இடதுபுறம் ஊமத்தமலரும், பாம்பும் வலது புறம் பிறைச்சந்திரன், மூன்று கண்களுடன் ருத்ராட்ஷமாலையும், கண்டமாலையும் அமைக்க வேண்டும். தட்சணாமூர்த்தியின் வலதுபுறம் நாரதமகரிஷியும், ஜமதக்நி முனிவரும், வசிட்டமுனிவரும் இருப்பர். இடதுபுறம் பரத்வாஜரும் சனகரும் அகத்திய முனிவரும் இருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்னரர்கள், கிம்புருஷர்கள் முதலியவர்கள் பக்தியுடன் வழிபடப்பெற்றவராக இருப்பர். இந்த தட்சணாமூர்த்தி வீணை வாசிப்பது போலவும் காட்டப்பட்டிருக்கும்.[9]

## திருஞானசம்பந்த நாயனார் படிமம்

"புரச்சூடாம நோக் ஞாங்கம் பாலம் ஹாராதி பூஷிதம்!
திவ்யாம்பரதரம் ஸ்வர்ண தாள வாத்ய கரம் சுபம்!!
ஈஷதுத்தித தக்ஷாங்க்ரிம் க்வணந்நூபுர மண்டிதம்!
வந்தேஹம் த்ராவிடாசார்யம் ஞானசம்பந்த மந்வஹம்!!"

தலையின் முன்புறத்தில் விளங்கும் அழகான கொண்டையினால் சோடிக்கிற முகத்தையும், சரீரத்தையுமுடையவரும், குழந்தை வடிவமாக இருப்பவரும், முத்துமாலை முதலான ஆபரணங்களையுடையவரும், அழகான ஆடையை உடுத்திருப்பவரும் (பரமேச்வரனால் அளிக்கப்பெற்ற) சுவர்ணத்தாலான தாளத்தைக் கையில் வைத்திருப்பவரும், நன்மையைச் செய்பவரும், சிறிது தூக்கினாற்போல் வைத்துக்கொள்ளப்பட்ட வலது முழங்காலையுடையவரும், ஒலிக்கின்ற நூபுரத்தைக் கால்களில் அணிந்திருப்பவரும், திராவிடமொழி, (தமிழில்) வல்லுநரும், திராவிடருமான ஞானசம்பந்தப் பெருமானை அனுதினமும் வணங்குகின்றேன். (வரலாற்று முறையில் பூணூலும் இவர்க்கு அணிவித்தல் வேண்டும்.)

## ஆனாய நாயனார் படிமம்

இவரது திருமேனியினை பத்ம பீடத்தில் நின்ற நிலையாக அமைக்க வேண்டும். கரங்களில் புல்லாங்குழல் ஏந்தி தமது உதடுகளின் முன்னால் பட்டும் படாததுமாக வாசிக்கின்றபடி (ஊதுதல்) அமைக்க வேண்டும். புல்லாங்குழலில் சிறுசிறு துவாரங்களும், நீண்ட துவாரமும் இருத்தல் வேண்டும். சிரசில் தமது முடியினை முறுக்கிக்கொண்டை போட்டவாறு இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வேறொரு முறையில் வலது காலை ஊன்றியும் இடது காலை முன் இருத்தி வளைத்தபடி புல்லாங்குழல் வாசித்தல் போல) இடையர் குலத்தில் அணியப்பெறும் வஸ்திரக்கட்டு இருத்தல் வேண்டும்.

**காரைக்காலம்மையார் படிமம்**

காரைக்காலம்மையாரின் திருமேனியானது சதைப்பற்று இல்லாத நரம்புகள், எலும்புகள் தெரியும் படியாகவும், மார்பகங்கள் வற்றியும் அமர்ந்த கோலத்தில் அமைத்தல் வேண்டும். மிகவும் வயோதிக உருவத்தோடு வலக்கால் குத்திட்டும், இடக்காலை மடித்தும் இருக்கலாம். அல்லது இருகாலையும் மடித்துமிருக்கலாம். கரங்களில் தாளங்களைப் பொருத்தி வைப்பதும் உண்டு. அறுபத்து மூவரில் அமர்ந்த திருக்கோலம் இதுவே அகும்.

**பரதநாட்டிய சாத்திரம்**

பரத முனிவரால் இயற்றப்பட்டது. கி.மு. 5ம் நூற்றாண்டிற்கும் கி.பி. 2ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலம் எனப் பல்வேறு கருத்துக்கள் உண்டு.

நாட்டிய சாத்திரத்தில் உள்ள 36 அத்தியாயங்களில் நாட்டியத்தின் பல்வேறு அம்சங்களின் விதிகள், விளக்கங்கள் உண்டு. இவர் இசை பற்றியும் விளக்குகின்றார். நூலின் இருபத்தெட்டாவது அத்தியாயத்திலிருந்து முப்பத்தைந்தாவது அத்தியாயங்கள்வரை குரலிசை மற்றும் இசைகருவிகள் பற்றிய நுட்பமான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இதற்கேற்பவும் சிற்பங்களில் இசைவடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஆகமங்கள்**

சைவாகமங்கள் இருபத்தெட்டினுள் காமிகாகமம், காரணாகமம் சிறப்பாக கோயில் கட்டும் முறைகள், பிரகாரங்கள், விமானங்கள், மண்டபங்கள், கோபுரங்கள் அதில் இடம் பெறவேண்டிய சிற்பங்கள், உருவங்களைச் செய்வதற்குரிய மரம், கல் உலோகம் ஆகியவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றமற்ற இயல்புகள், சிற்பங்கள் அமைக்கும் முறைகள், கைகளில் திருப்பாதங்களில் அணிய வேண்டிய அணிகலன்கள், இசைக்கருவிகள், போன்றவற்றை அமைக்கும் முறைகள் கூறப்பட்டுள்ளன.

**வாதுளாகமம் - உரையாசிரியர்**

வாதுளாகம்மத்திற்குரிய உரையொன்று வடமொழியில் உள்ளது. ஆயினும் மிகச் சிறப்பாக விளக்கும் இந்த விளக்கவுரையை எழுதியவர் இன்னார் எனத் தெரியவில்லை. இவரது உரையிலே உள்ள ஓர் எடுத்துக்காட்டு கைலாயமலையில் நிகழும் இசை, இசைக்கருவி பற்றி கூறுகின்றது.

"நானாவிதமான ரத்தினங்களால் பிரகாசிக்கும் கைலைமலை என்பது விட்னு முதலான ஆடவர் குலரத்தினங்களாலும், இந்திரன் முதலான பெண்டிர் குலரத்தினங்களாலும், வசிட்டர் முதலான முனி ரத்தினங்களாலும் இந்திரர் முதலான காயக ரத்தினங்காளாலும் (காயகர் - கீதம் இசைப்பவர்) அரம்பை போன்ற நாட்டிய குலரத்தினங்களாலும், (வாதகர் - இசைக்கருவி) நந்தி முதலான கண குலரத்தினங்களாலும், சூரியன் முதலான ஒளி குலரத்தினங்களாலும் குறிப்பிட்டு பிரகாசிக்கும் மலை " என வருகின்றது. ( சைவ ஆகமங்கள் எஸ். சபாரத்தினம் பக்.101-102) மேற்கூறிய ஆகமத்திற்கேற்ப தாராசுரம், கங்கைகொண்ட சோழபுர புடைப்புச் சிற்பங்கள் இராவணன் கைலைமலையை பெயர்க்கும் காட்சிகள் குறிப்பிடத்தக்கன.

**புராணங்கள்**

விஷ்ணுபுராணம், லிங்கபுராணம், பாகவதபுராணம், மத்சய, வாமன மற்றும் பல புராணங்கள் பக்தியை வளர்க்கவும், இறைவனுக்கு பல்வேறு வடிவங்களை கற்பித்தும், தத்துவச்சிந்தனைகளை மக்களுக்குச் சொல்லுவதனால் இறைவனின் பல்வேறு வடிவங்களும் குணங்களும் தத்துவமும் மக்களுக்குப் புரியும் வண்ணம் சிற்பங்களில் வடிவமைக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணங்கள் கூறும் கதைகளே விமானம், கோபுரங்களுக்கு கதைக் கருவூலங்களாக அமைந்தன.

ஆகமங்கள், புராணங்கள் சிற்பக்கலைப் படைப்பிற்கு ஆதாரங்களாக விளங்கின, புராணங்களில் வேதக் கடவுளர்கள் கவனிப்பாரற்று போயின. சிவன்,விஷ்னு, பிரம்மா, தேவி, முருகன், கணபதி ஆகிய கடவுளர்கள் முக்கிய கடவுளர்களாக புராணங்கள் குறித்தன. மக்களின் நம்பிக்கைகளை இவை நிலைநிறுத்தின. இவை இவ்வுலகப் படைப்பை, நிலைப்பை, மறைப்பை விளக்க வந்தவை.[12]

மேற்கூறப்பட்ட இவ்வுலக ஒழுங்கை விளக்க வந்த கடவுளர்கள் இசைபாடினர். இசைகருவிகளை தம் கைகளில் வைத்திருந்தனர். இசை மூலம் இறைவனையடையலாம் என்பதை மக்களுக்கு உணர்த்தினர்.

## தமிழ் இலக்கண, இலக்கியங்களில் இசைக்கருவிச் செய்திகள்

**பறை, யாழ்**

"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பதியொரு தொகை"[13]

**யாழ்**

"இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்"

என்பதற்கு உரைகண்டவர், குரல் துத்தம் முதலிய ஏழிசையோடு பொருந்திய நரம்பினையுடைய யாழினது இசை நூற் கண்ணும் உள என்று கூறுவார்.

"புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில் யாழ்" (பெரும்பாண் 180 – 182)

"ஒரு திறம் பாணர் யாழின் தீங்குரல் எழ
ஒரு திறம் பாணர் வண்டின் இமிரிசையெழ" [14]

"கொம்மை வருமுலை வெம்மையில் தடைஇ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை" [15]
"இடனுடைப் பேரியாழ்
பாலைப் பண்ணில் படர்ந்தனை"[16]

## திருமுறைகளில் இசைக்கருவிச் செய்திகள்

**சங்கு**

"காலையொரு துந்துபிகள் சங்கு குழல் யாழ், முழவு காமருவு
சீர் மாலை வழிபாடு செய்து மாதவர்க ளேத்தி
மகிழ் மாகறலுளான்"[17]

என கோயிலில் இசைக்கப்பட்ட சங்கு, குழல், முழவு பற்றிக் கூறுகின்றார். மணிவாசகர்,

"கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கெங்கும்" என சங்கின் பெருமையைப் பேசுகின்றார்.

**குடமுழா**

"கொடுகொட்டி ... துந்துபியொரு குடமுழா"[18]
"தமருகம் குடமுழா மொந்தை .."[19]
"குடமுழா நந்தீசனை வாசகனாக கொண்டார்."[20]

**தக்கை**

"மொந்தை தக்கை" (திருஞானசம்பந்தர்)
"சச்சரி கொக்கரை தக்கையோடு"[21]

**தாளம்**

"தக்கை தண்ணுமை தாளம் வீணை
தகுணிச் சங்கிணை சல்லரி"[22]

**உடுக்கை**

"தண்டு உடுக்கை தாளம் தக்கை"[23]

**வீணை**

"பண்ணுலாம் பாடல் வீணை பயில்வானோர்"[24]
"வித்தக வீணையொடும் வெண்புரி நூல்பூண்டு"[25]
"வேயுறு தோழி பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி"[26]
"இன்னிசை வீணையர் யாழினர் ஒரு பால்"[27]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழல்

அநாயநாயனார் தனித்தமிழ் மந்திரமாகிய திருவைந்தெழுத்தை புல்லாங்குழலில் வைத்துப்பாடித் திருத்தொண்டு புரிகின்றார்

மேவு துளைக்கருவிக் குழல்
வாசனை மேற் கொண்டார்.[28]

இவர் குழலில் எப்படி, எதனை இசைத்தார் என்பதைச் சேக்கிழார்,

"..... தொடுத்தமுறை ஏழிசையின்
சுருதிபெற வாசித்துத்;[29]
"குழல் ஒலி யாழ் ஒலி கூத்தொலி ஏத்தொலி;[30]

என நாயன்மார்கள் பாடல்கள் மூலம், இசைக்கருவிகளை சங்கு, குழல், யாழ், வீணை, டமருகம், குடமுழா, முழவு, தக்கை, தாளம், சல்லரி, போன்ற பல இசைக்கருவிகளின் மூலம் இறைவனைத் துதி பாடினர் என்பது தெரிகின்றது.

## நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் இசைக்கருவிச் செய்திகள்

### சங்கு

"............. படைப்போர் புக்கு முழங்கும்
அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே (பெரியாழ்வார்)
"கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ,
........................................................"
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே"
(ஆண்டாள் 567)

### யாழ்

"பண்ணினின் மொழி யாழ் நரம்பில்
பெற்ற பாலையாகி யீங்கே புகுந்து........" (பெரிய திருமொழி)
"அன்ன நடைய அரம் பையர்
தம் கை வளர்த்த
இன்னிசை யாழ்ப் பாடல் கேட்டின்புற்று" (பெரியதிருமடல் – 15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவலோக மங்கையரால் மீட்டப்பட்ட இன்னிசை யாழில் உருவான பாடல் இனிமை தந்ததாகவும் ஆழ்வார் பாடுகின்றார்.

"யாழிசையே – அமுதே" (நம்மாழ்வார் 2606)

யாழிசையாகி இறைவன் இருக்கிறார் என்பதை உணர்த்துகின்றார் நம்மாழ்வார்.

**குழல்**

கண்ணன் குழல்கேட்டு தும்புருவும், நாரதரும் தம் வீணையை மறந்தனர். கின்னரர்களும் தம் கின்னரங்களைத் தொடவில்லை

"– – – மன்னரஞ்சும் மதுசூதனன் வாயில்
குழலினோசை செவியைப் பற்றி வாங்க
நன்னரம்புடைய தும்புருவோடு
நாரதனும் தம் தம் வீணை மறந்து
கின்னர மிதுனங்களும் தம்தம்
கின்னரம் தொடு கிலோமென்றனரோ"[31]
"கோவிந்தன் குழல் கொண்டு ஊதின போது
பறவையின் கணங்கள் கூடுதுறந்து...."[32]

கோவிந்தன் குழல் கொண்டு ஊதினபோது பறவைகளெல்லாம் தம் கூடுகளைத் துறந்து வெளிவந்து குழலிசையில் மயங்கி நின்ற செய்தியை பெரியாழ்வார் கூறுகின்றார்.

எங்களுக்கே யொரு நாள் வந்தூத
உன் குழலின்னிசை போதராதே"

(குலசேகராழ்வார் – 706)

ஆழ்வார்களும் குழல், சங்கு போன்ற இசைக்கருவிகளின் மூலம் இறைவனைக் கண்ட சிறப்பினை கூறியமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் பாடிய திருப்பாடல்களும் பிற்கால சோழர் இசைச் சிற்பங்களுக்கு அடித்தளமாக அமைந்தன எனலாம்.

Arasady Public Library
Municipal Council
Batticaloa.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலை இசை நூல்கள் காட்டும் இசைச் செய்திகள்

### பஞ்சபாரதீயம்

இந்நூலை நாரதர் என்பவர் இயற்றினார் என்றும் அந்நூல் மறைந்து போயிற்று என்றும் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் கூறுகின்றார். (சிலப்பதிகாரத்தில் உரைப்பாயிரம்) நாரத முனிவர் வழிவந்தது தமிழ்நாட்டு இசை மரபு என்று கூறப்படுவதும் இங்குக் கருதத்தக்கது. இந்தக் கர்ண பரம்பரை வழக்கு, நாரத முனிவர் தமிழில் பஞ்ச பாரதீயம் என்னும் நூலை இயற்றினார் என்பதனாலும் உறுதிப்படுகிறது. சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளும் நாரதர் இசையைச் சிறப்பாகக் கூறுகிறார்.

"நாரத வீணை நயந்தெரி பாடல்" (சிலம்பு : கடலாடு காதை)
"முதுமறைதேர் நாரதனார் முந்தை முறை நரம்புளர்வார்"
"குயிலுவருள் நாரதனார் கொளைபுணர்சீர் நரம்புளர்வார்"
என்றும் கூறியது காண்க. (சிலம்பு : ஆய்ச்சியர் குரவை)

### இசை நுணுக்கம்

இந்நூலை இறையனார் அகப்பொருள் உரையாசிரியரும் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரும் குறிப்பிடுகின்றார்கள். அநாகுலன் என்னும் பாண்டியனுடைய மகன் சயந்த குமாரன்( சாரகுமாரன் என்றும் பெயர்) என்பவனுக்கு இசை கற்பிப்பதற்காக, சிகண்டி என்னும் முனிவர் இந்நூலை இயற்றினார் என்று அடியார்க்கு நல்லார் கூறுகிறார்.

### பஞ்ச மரபு

பஞ்ச மரபு எனும் இவ் இசைத்தமிழ் இலக்கணநூலைச் செய்தவர் அறிவனார் என்பவர்.

### வாய்ப்பியம்

வாய்ப்பியம் எனும் நூலை இயற்றியவர் வாய்ப்பியன் என்பவர்.

### இந்திர காவியம்

இப்பெயருள்ள இசைத்தமிழ் நூலை, அடியார்க்கு நல்லார்,சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் "பாரசர முனிவரில் யாமனேந்திரர் செய்த இந்திர காளியம்" என்று எழுதுகிறார். இது அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரை எழுதுவதற்கு உதவியாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குலோத்துங்கன் இசைநூல்

சோழ அரசர்களின் புகழ் பெற்றவன் குலோத்துங்க சோழன். இவனுக்கு விசயதரன், சயங்கொண்டான் என்னும் சிறப்புப் பெயர்களும் உண்டு. கலிங்கப்போரை வென்றவன் இவனே. அதனால் கலிங்கத்துப் பரணி என்னும் நூலைச் சயங்கொண்டார் என்னும் புலவரால் பாடப்பெற்றவன் இவன். இசைக்கலையில் வல்லவன் என்றும், இசைத்தமிழ் நூல் ஒன்றை இயற்றியவன் என்றும் கலிங்கத்துப் பரணி கூறுகிறது.

## சங்கீத இரத்னாகரம்

கி.பி 1210 முதல் 1247 வரையில் வாழ்ந்தவரும் சங்கீத ரத்னாகரம் என்னும் இசை நாடக நூலை வடமொழியில் எழுதியவர் சாரங்கதேவர் ஆவார்.

மேற்கூறப்பட்ட முக்கியமான இசைநூல்களில் இசைக்கருவிகளின் தன்மை, செய்யப்படும் பொருள், வகைகள், சிறப்புகள் பற்றி விளக்கப்படுகின்றன.

## இசையும் சிற்பமும்

கோயில்களில் காணப்படும் நாட்டியச் சிற்பங்களும் அதனோடு இசைவாக விளங்கும் இசைச்சிற்பங்களும் அக்காலத்திய இசைக்கென பயன்படுத்தபட்ட கருவிகள் பற்றியும் அறிய முடிகின்றது. அன்றைய காலங்களில் இறைவழிபாட்டில் மற்றும் மக்கள் பயன்பாட்டில் இருந்த இசைக்கருவிகளின் பதிவுகளே கோயிற் சிற்பங்களாகும். கோயில்களில் இசையையும் இசைக்கருவிகளையும் வளர்ச்சிடைய வைத்த பெருமை சோழமன்னர்களையே சாரும். அதுமட்டுமல்ல வரலாற்றுப் பொக்கிசங்களாக கோயிற் சிற்பங்களில் இசைக்கருவிகளை சிற்பங்களாக்கினர். ஆடல் நிகழ்ச்சிகளில் இசைக்கப் பெற்ற பல்வேறு இசைக்கருவிகளின் வகைகள், அக்கருவிகளின் அமைப்பு, இசைக்கலைஞர் ஏந்தியுள்ள முறை இசையெழுப்பும் முறை என்பனவற்றை நாம் மட்டுமல்ல எதிர்கால நமது சந்ததியினரும் பெறும் பேறாக விளங்குகின்றது சிற்பங்களில் அமைந்த இசைக்கருவிச் சின்னங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசையும் இறைவனும்

இசைக்கும் இறைவனுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. நமக்கும் இசைக்கும் உள்ள தொடர்பினைப் போன்றதன்று. வேறு பிரித்தறிய முடியாத வகையில் இரண்டும் ஒன்றெனத்தகும் முறையில் – இரண்டும் இணைந்து ஒன்றியுள்ளன. இசையே இறைவன். இறைவனே இசை என்றுதான் கூறவேண்டும். இசையின் பிறப்பிடம் இறைவன். இறைவனின் இருப்பிடம் இசை என்றும் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புக்கள்

1. இராமநாதன், ஆறு; நாட்டுப்புறக்கலைகள், ப.137
2. பாஸ்கரன், க; தியாகராஜரின் தத்துவச் சிந்தனைகள், ப.20
3. மௌனகுரு, சி; கலை இலக்கியக் கட்டுரைகள், ப.9
4. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், 8.64
5. மேலது, 14.165
6. சோமசுந்தரம். ஜே. எம; சிற்பமும் கலை வாழ்வும், ப.14
7. நாகசாமி இரா; தமிழகக் கோயிற் கலைகள், ப.74
8. தட்சிணாமூர்த்தி.அ; தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.293
9. ஸ்ரீ குமாரர் சில்ப ரெத்தினம், ப. 360
10. வேங்கடசாமி. சீனி; தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், பக். 71- 74
11. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி.7, ப.191
12. குளத்தூரன்,க; தத்துவச் சமயப் பின்னணியில் கோயிற்கலை வரலாறு, ப.47
13. தொல்காப்பியம், 118
14. பரிபாடல், 19
15. நெடுநல்வாடை, 69 — 70
16. பதிற்றுப்பத்து, 66 — 2
17. தேவாரம், மூன்றாம் திருமுறை
18. சுந்தரர் தேவாரம், 49 — 6
19. மூத்த திருப்பதிகம், 1–9
20. திருமுறை, 6.96.11
21. காரைக்காலம்மையார் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், 1.8
22. தேவாரம், 7.3.6.9
23. சம்பந்தர் தேவாரம், 65,102.
24. மேலது, 316.8
25. திருமுறை, 7.85.6
26. மேலது, 2.8.5.1
27. மணிவாசகர் திருப்பள்ளியெழுச்சி, 8.4
28. பெரியபுராணம், அநாய நாயனார் புராணம், பா.12.4
29. மேலது, பா.14
30. திருமுறை, 9.29.9
31. திவ்யபிரபந்தம், பா.279
32. பெரியாழ்வார் பாசுரம், பா.282


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் இரண்டு

## இசைக்கருவிகள் – உருவ அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. இசைக் கருவிகள் - உருவ அமைப்பு

உலகில் எந்த ஒரு நாட்டின் இசை வளர்ச்சியிலும் இசைக்கருவிகளின் பங்கு மகத்தானது. இசைப்பாட்டிற்கு மட்டுமல்ல நடனத்திலும் இசைக்கருவிகள் இன்றியமையாதவை.

### இசைக் கருவிகளின் தோற்றம்

இயற்கை தரும் இனிய ஒலிகளைக் கேட்கும் கருவியிசை எனும் அருங்கலை ஒன்றை ஆக்கி அக்கலை மரபைத் தொடர்ச்சியாக பேணிக்காத்தவர்கள் தமிழர்கள்.

### 1. துளைக் கருவிகள்

மலையிடை வானுற நின்ற மூங்கிலில் வண்டுகள் துளை செய்திருக்க, அத்துளையினுள் காற்றுப் புகுங்கால் எழுப்பிய இன்னொலியைக் கேட்டு மனிதன் உவகை கொண்டான். இம் மூங்கிலையும், துளையினையும், காற்று புகுதலையும் இசை வெளிப்படலையும் நுனித்தறிந்து, தானும் அதனை உண்டு பண்ண முயன்றான். அதன் பயனாகத் துளைக்கருவிகள் தோன்றலாயிற்று. இதனை மணிமேகலை

" கொம்பர்த் தும்பி குழலிசை காட்டப்

பொங்கர் வண்டினம் நல்யாழ் செய்ய " எனக் கூறுகின்றது. இவ்வரிகள் சோலைக் காட்சியை சித்தரித்தலும் இசைக்கருவிகள் தோன்றிய சிறப்பினையும் உணர்த்துகின்றது.

### 2. தோற்கருவிகள்

உலகிலுள்ள பொருள்கள் ஒன்றோடொன்று மோதுவதன் மூலமாகவும், உராய்வின் மூலமாகவும் பலவகை ஓசைகள் உண்டாவதை அக்கால மனிதன் கண்டறிந்தான். இக் கருவிகளை தயார் செய்வதற்குப் பெருந்துணையாக இருந்தது கருவியில் சொரியும் நீரின் நல்லோசையாகும்,

"பாடிமிழ் பனிகடல் " [1]

"பறையிசை அருவி"[2]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. நரம்புக்கருவி

வண்டுகளின் இசையொலி, வில் நாணிலிருருந்து ஏற்பட்ட இசை பின்னர் நரம்புக் கருவிகள் தோன்றக் காரணமாயிருந்தன.

### பரதரின் நாட்டிய சாத்திரமும், இசைக்கருவிகளும்

கி.மு 4ம் நூற்றாண்டில் தோன்றிய "நாட்டியசாத்திரத்தில்" பரதர் இசைக்கருவிகளை நான்கு வகையாகப் பிரித்துக்காட்டியுள்ளார். 1.நரம்புக்கருவி, 2.துளைக்கருவி, 3.தோல் கருவி, 4.கஞ்சக்கருவி.

### நரம்புக்கருவி(Stringed instruments)

நரம்புக்கருவிகளில் உள்ள தந்திகளில் அசைவுகளை உண்டாக்கி அதனால் எழும் நாதத்தின் மூலம் இசையை உண்டாக்கும் அமைப்பினை உடையது தந்தி வாத்தியம். இதில் வீணை, கொட்டுவாத்தியம், சிதார், யாழ், தம்புரா, போன்ற வாத்தியங்களில் தந்தியினை விரலால் மீட்டி நாதத்தை எழுப்புகிறோம். மற்றும் வயலின், சாரங்கி போன்ற இசைக்கருவிகளில் வில்போட்டு தந்திகளின் மீது உராய்ந்து நாதத்தினை உண்டாக்குகிறோம்.

### 1. யாழ்

யாழ்க் கருவி மிகவும் தொன்மையானது. யாழில் பலவகை உண்டு, யாழ் என்பது நரம்புகளால் யாக்கப்பட்டது அல்லது கட்டப்பட்டது என்பது பொருள்.

### யாழின் தோற்றம்

ஆதி காலத்தில் மனிதன் விலங்குகளைக் கொல்வதற்காக வில்லில் நாணேற்றி அம்பெய்தான். அப்போது வில்லி நாணில் உண்டான இனிமையான நாதம் அவனைக் கவர்ந்தது. இதிலிருந்து அவன் வில் யாழை முதன் முதலில் கண்டறிந்தான். பின்னர் இதுவே யாழ் என்னும் இசைக்கருவியாக வளர்ச்சி பெற்றது.[3]

### யாழின் அமைப்பு

யாழின் ஒலிப்பெருக்கி "தணக்கு"என்னும் மரத்தில் உண்டாக்கப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் தண்டிற்குக் கோடு என்று பெயர். மூடப்பட்டிருக்கும் இதற்கும் வெள்ளைத் தோல் என்று பெயர் . இதிலிருந்து மெல்லிய ஒரு குச்சியின் வழியாக நரம்புகள் மேலே உள்ள தண்டுடன் இணைக்கப்பட்டுள்ளன. ஆதி காலத்து யாழ்கள் கம்பி கட்டிய வில் வடிவில் இருந்தன. இத்தகைய யாழ்களுக்கு பிருடை கிடையாது.

## யாழின் வகைகள்

பழங்காலத்தில் பலவகையான யாழ்கள் காணப்படுகின்றன. 21 நரம்புகளை உடைய பேரியாழ், (மகா மீன்வடிவம் உடையது) 17 நரம்புகளை உடைய மகரயாழ், 16 நரம்புகளையுடைய சகோடயாழ், 7 நரம்புடைய செங்கோட்டு யாழ், மற்றும் நாரதயாழ், வில்யாழ், சீறியாழ், தும்புருயாழ், கீசகயாழ், மருத்துவயாழ், ஆதியாழ் ஆகியவை. இவற்றில் ஆதியாழ் 1000 நரம்புகளைக் கொண்டது என விபுலானந்தர் கூறுகிறார். ஐந்து நரம்புகளை உடைய கருவியாக இருந்த வில்யாழே பின்னர் ஏழு நரம்பகளையுடைய யாழாக ஆகியிருக்கலாம் என்பது விபுலானந்தர் கருத்து.[4] தமிழ் நாட்டில் ஆதியாழ் என்ற முதல் யாழ் இருந்தது. பூவுலகிலேயே முதல் யுகம் என்று கருதப்படும் கிருதயுகத்தில் கொடியவர்களான அரக்கர்களை அடக்க இது வாசிக்கப்பட்டது என புராணங்கள் கூறுகின்றன.

அறிவனார்,

பேரியாழ் பின்னு மகரஞ் கோடமுடன்
சீர்பொலியுஞ் செங்கோடு செப்பினர்..."[5]

என நால்வகை யாழ்பற்றி கூறுகிறார்.

இக்காலத்தில் யாழ்களுக்குப் பதில் வீணையே பயன்படுத்தப்பட்டு வருகிறது. பரிபாடல் எனும் நூலில் பிரம வீணை என்னும் ஒரு வீணை குறிக்கப் பெற்றுள்ளது. மணிமேகலையில் (சிறைக்கோட்டம், அறக்கோட்டம்) மகர வீணை என்று ஒரு வீணை குறிக்கப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து பழங்காலத்தில் வீணையும் இருந்தமை புலனாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் யாழின் திரிபு வீணை என்றும், யாழே வீணை என்றும் கூறுவர். உண்மையில் யாழ் வேறு, வீணை வேறு.[6]

வீணை வேறு, யாழ் வேறு என்பதை உறுதி செய்யும் இலக்கியம் மற்றும் கோயிற் சிற்பச் சான்றுகள் பல கிடைத்துள்ளன. திருப்பெருந்துறை இறைவனைத் துயிலெழுப்ப,

"இன்னிசை வீணையர், யாழினர் ஒருபால்"[7]

"கின்னரம் முழவம் மழலை யாழ் வீணை"[8]

"நேர் வைத்த வீணைக்கும் யாழுக்கும் நிலைவகையில்"

(பெரியபுராணம், திருநாளைப்போவார் நாயனார் புராணம்)

என்றும் பாடுகின்றனர். யாழ் வீணை ஆகிய இரண்டும் வெவ்வேறு கருவிகளாகக் குறிக்கப்பெற்றதால் இவை ஒரே கருவியை குறிக்கவில்லை என்பது தெளிவாகின்றது.

## 2. வீணை

"வித்தக வீணையொடும்
வெண்புரி நூல் பூண்டு
முத்தன வெண்முறுவல்
மங்கையோடும் முடனே"[9]

இருப்பவன் இறைவன். சிவபெருமான் வீணையுடன் இருக்கும் போது வீணாதர தட்சிணாமூர்த்தி என அழைக்கப்படுகின்றார்.

வீணை சரஸ்வதியின் வாத்தியம் என்பது சகலரும் அறிந்தது. இவ்வாறாக வீணை தெய்வீக உணர்வினைப் பெற்றிருப்பதாலும், கலைமகளின் கையில் இருப்பதாலும் இசைக்கருவிகளுக்கெல்லாம் அரசி என அழைக்கப்படுகின்றது. இதனைப் பேசும் வாத்தியம் எனவும் சிறப்பித்து கூறுவதுமுண்டு. இசையின் பல நுட்பங்களையும், தத்துவங்களையும் இக்கருவி மூலம் தெளிவாக வெளிப்படுத்த முடியும். மொழி கலவாத தனி இசையில் (Absolute Music) மேன்மையை வீணை வழியாக உணரலாம்.

### ஆரம்பகாலத்து வீணை

வீணைக்கு குடம் அல்லது பானை என்பது பொருள். முற்காலத்தில் இரண்டு பானைகளின் மேல் வைத்து அதன் மீது நரம்பினை இறுக்கிக் கட்டி வீணையைச் செய்திருந்தனர் எனச் சொல்வோருமுண்டு.[10]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்ககாலத்தில் தோன்றிய செங்கோட்டி யாழே கின்னரியாகி, வீணையாக மாறியுள்ளது என்பது ஆப்ரகாம் பண்டிதர் போன்ற இசை வல்லுனர்களது கருத்து. எனினும் கி.பி. 7ம் நூற்றாண்டு வரையே யாழ் இருந்துள்ளது என்பது கோயிற் சிற்பங்கள், இலக்கியங்கள் ஊடாக கண்டு தெளியலாம். எனவே யாழ் வேறு, வீனை வேறு என்பது மேலே உள்ள ஆதாரங்கள் உறுதி செய்கின்றன.

**வீணையின் அமைப்பு**

வீணையின் உருவம், தந்திகளின் எண்ணிக்கை காலந்தோறும் மாறிக் கொண்டே வந்துள்ளது. தற்பொழுது வழக்கத்திலிருக்கும் தென்னிந்திய வீணை தஞ்சாவூர் வீணை என்று அழைக்கப்படுகிறது. இதில் 7 தந்திகள் உண்டு. நான்கு தந்திகள் இசைப்பதற்கும், (தாரணி, பஞ்சமம், மந்திரம், அனுமந்திரம்) மூன்று தந்திகள் சுருதி, தாளத்திற்கும் உள்ளன. யாளிமுகம் தலையின் முடிவில் கீழ் நோக்கி உள்ளது. வீணை செய்ய பலா மரம் உபயோகிக்கப்படுகின்றது.

தலை, மெட்டுக்கள் அமைந்துள்ள தண்டி, குடம் என மூன்று பகுதிகள் உள்ளன. குடம்தான் இக்கருவியின் நாதப்பெருக்கி, முற்காலத்தில் சுரைக்காயை பதப்படுத்தி, உட்பகுதிகளை நீக்கி, இப்பகுதிக்கு (குடம்) பயன்படுத்தினர்.

**3. தம்புரா**

இதன் நாதத்திற்கு இணையாக ஒலிக்கக் கூடிய கருவி வேறு எதுவும் இல்லை. இதன் ஒவ்வொரு தந்தியிலிருந்தும் பிறக்கும் நுட்பமான சுருதிகளும், நான்கு தந்திகளும் சேர்ந்து ஒலிக்கும் போது தோன்றும் நாத விசேடமும் தரும் இன்னிசை உணர்ச்சியை விவரிக்க இயலாது. தம்புராவில் பாட்டு வாசிக்க முடியாது. புராணங்களின் தும்புரு, நாரதர் ஆகிய முனிவர்களுடன் தொடர்புடையது தம்புரா. இவர்கள் வரலாற்று நாயகர்களாக இருப்பினும், அவர்களைப் பற்றி எவ்விதத் தகவல்களும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் தம்புரா நாரதர் கைகளில் காணப்படுவதால் இசைக்கு சுருதியின் முக்கியத்துவத்தை அறியமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமைப்பு**

பலாமரத்தில் செய்யப்படுகிறது. இது குடம், தண்டி, கழுத்துப்பகுதி என மூன்றாகப் பிரிக்கப்படுகின்றது. குடம் அரைவட்ட வடிவில் குடைந்தெடுக்கப்பட்டு, அதன் ஒரு முனையில் நீண்ட தண்டிப்பகுதி இணைக்கப்பட்டுள்ளது. குடத்தின் மேலுள்ள பகுதியில், ஒரு மெட்டு, நாதத்தை வெளிப்படுத்தும் நாதத்துளைகளும் உண்டு.

## 2. துளைக்கருவிகள் (Wind Instruments)

பாத சங்கிரகம் எனும் நூல், துளைக்கருவிகள் பன்னிரெண்டு என வகுக்கின்றது.

> "பூரிகை நாகசுரம் பொற்சின்னம் எக்காளை
> தாரை நவரி சங்கு வாய் வீணை – வீரியஞ்சேர்
> கொம்பு தித்தி காளை குழலுடன் ஈராறும்
> இன்பார் துளைக்கருவி யென்"[11]

இதில் காற்றை வாத்தியங்களுக்குள் செலுத்தி, அக்காற்றுப் பரிமாணத்தில் தேவையான அளவு அசைவுகளை உண்டாக்குவதன் மூலம் நாதத்தை உண்டாக்கி இசையை எழுப்புகின்றோம். இவை இரண்டு வகைப்படுகின்றது. 1. துருத்தியின் மூலமாக காற்றைச் செலுத்தி நாதத்தை உண்டாக்கி வாசித்தல், 2. வாசிப்பார் வாயினால் காற்றை ஊதி நாதத்தை உண்டாக்கி வாசித்தல். உ–ம் புல்லாங்குழல், நாகசுவரம் முதலியன.

### 1. புல்லாங்குழல்

இசைக்கருவிகளுள் குழலும் யாழும் பழங்காலத்திலிருந்தே சிறந்து விளங்குகின்றன எனத் தெரிகிறது. மிகப் பழமையானது குழல்தான், எனவேதான் "குழலினிது யாழினிது" என வள்ளுவரும் "குழல் வழி நின்றது யாழே" என இளங்கோவடிகளும் குழலை முதற்கண் கூறினர். கண்டப் பாடலிலும் யாழிலும் இசைக்க இயலாத மிகத் துரிதமான சங்கதிகளை குழலில் இசைக்க இயலும், இது கேட்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சிறப்புகள் பொருந்திய இசைக்கருவியாக குழல் விளங்கியதால் கண்ண பரமாத்மாவும் குழலைத் தமக்கு இசைக்கருவியாக தேர்ந்தெடுத்தார் போலும்.

பெரியாழ்வார்,

"சிறு விரல்கள் தடவிப் பரிமாறச்
செங்கண் கோடச் செய்ய வாய் கொப்பளிப்பக
குறுவெயர்ப் புருவம் குடிலிப்பக்
கோவிந்தன் குழல் கொடு ஊதின போது
பறவையின் கணங்கள் கூடு துறந்து
வந்து சூழ்ந்து படுகாடு கிடப்பக்
கறவையின் கணங்கள் கால் பரப்பிட்டுக்
கவிழ்ந் திறங்கிச் செவியாட்டகில்லாவே"[12]

என கண்ணன் குழலுக்கு பறவைகள், பசுக்கள், கன்றுகள் இசையின்பத்தை பருகிய விதத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

## குழலின் அமைப்பு

மூங்கிலில் குழல் அமைந்த காரணத்தால் "புல்லாங்குழல்" என்ற பெயர் உண்டாயிற்று. "வங்கியம்" என்ற பெயரும் உண்டு. புல்வகையில் செய்யப்பெறும் வேய்ங்குழல் இசைப்பிற்கும், இசை நயத்திற்கும் மிகவும் சிறந்தது.

வங்கியத்தின் நீளம் – 20 விரல்
சுற்றளவு – 4 ½ விரல்
துளையின் அளவு – நெல்லரிசி
துளைகள் – எட்டு உண்டு (இவற்றுள் ஒன்று முத்திரைத் துளை)[13]

## 2. நாகசுரம்

மங்கல நிகழ்ச்சிகள் எல்லாம் நாகசுவர இசையுடன் நடைபெறுவது மரபு. திருமணம், பொது நிகழ்ச்சி, இறை ஊர்வலம், கோயில் வழிபாடு போன்றவற்றில் வாசிக்கப்படும் துளைக்கருவிகளில் ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரலாறு**

துர்வாசக முனிவரின் சாபத்தினால் தேவேந்திர மகாராசாவின் ஆஸ்த்திகள் அனைத்தும் கடலுக்குள் சங்கமமாகி விடுகின்றன. தேவேந்திரன் மகா விஷ்ணுவிடம் முறையிடுகின்றார். இதன் காரணமாக மகாமேரு பர்வதத்தை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பினைக் கயிறாகவும் கொண்டு தேவர்கள் ஒருபுறம், அசுரர்கள் ஒருபுறமாக நின்று திருப்பாற்கடலைக் கடைகின்ற போது, ஸ்ரீ மகாலெட்சுமி அமிர்த குடத்தோடு பிரசன்னமாகின்றாள். தேவர்கள் புறம் அமிர்தம் கிடைக்கப் பெற்ற உத்வேகத்தில் வெற்றி முழக்கமாகப் பாம்பின் வாலையே கொம்பு போல் வாயில் வைத்து ஊதி சுயம் பிரகாசமாகிய நாதத்தை எழுப்பியதாகச் சொல்லப்படுகின்றது. ஆகவே நாகஸ்வரம் என்று அழைக்க இதுவும் ஒரு காரணமாக அமைகிறது.

**அமைப்பு**

நாகசுரம் கீழ்ப்புறம் விரிந்தும், மேல் நோக்கிக் கூம்பு வடிவமாகவும் உள்ளது. இதன் மேல் பகுதியின் மேல் அணைசு என்ற பகுதியும் கீழ்பகுதியின் கீழ் அணைசு என்ற பகுதியும் உள்ளன. உட்பகுதியில் வாசிக்க வேண்டிய ஏழு துளைகளும் ஓர் அங்குல இடைவெளியில் உள்ளன. இவற்றிற்கு நான்கு அங்குலம் கீழே ஒரு துளை இடப்பட்டுள்ளன. நாசுரம் பெரும்பாலும் ஆச்சா என்ற ஒருவகை மரத்தினால் உருவாக்கப்படுகின்றது.

**3. சங்கு**

தமிழக மக்கள் வழக்கில் இருந்த முற்காலக்கருவி சங்கு. இது இயற்கை தந்த இசைக்கருவி. பழந்தமிழ் இலக்கியத்தில் இது வளை என அழைக்கப்பட்டது.[14]

**சங்கிசையின் தோற்றம்**

சங்கு கடற்பாறையில் மோதி அடிபட்டு முனைமுறிந்து துளையுடன் கரையில் ஒதுங்கியிருக்கலாம். அந்தத் துளையில் காற்றுப்புகுந்து ஒலியை எழுப்பியிருக்கலாம். இந்த ஒலியைக் கேட்டு மனிதன் அதனை ஊதிப் பார்திருக்கலாம்.[15]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோயிற் சிற்பங்களில் சங்கின் அமைப்பு**

சங்கின் உயரம் 12 அங்குலமும், அகலம் 9 அங்குலமும் இருத்தல் வேண்டும். சங்கு வலப்பக்கம் சுழித்ததாகவோ, இடப்பக்கம் சுழித்ததாகவோ இருக்கலாம். அடியிலும், உச்சியிலும் பக்கங்களிலும் சுடர்களோடும், மேற்பகுதியில் சித்திர வேலைப்பாடுகளோடும் செய்தல் வேண்டும். இதனைக் கத்தரி முக ஹஸ்த முத்திரையில் இடது பக்கம் பிடித்தல் வழக்கு. சங்கின் உயரத்தில் முக்கால் பங்கு அகலம் கொண்டு அமைக்கும் போதுதான் அதன் அழகிய தோற்றத்தைக் காணலாம்.

**4. கொம்பு**

இது பித்தளையினாலோ, கொம்பினாலோ ' C ' என்ற வடிவத்தில் செய்யப்பட்ட ஒரு கருவி. திருமணங்கள், மத சம்மந்த ஊர்வலங்கள், சவ ஊர்வலம் இவற்றிற்கு கொம்பு ஊதப்படும். பஞ்ச வாத்தியம் என்றும் அழைக்கப்படும். ஐந்து கருவிகளுள் இதுவும் ஒன்று. சிறிய கொம்புக்கு திமிலி கொம்பு என்றும் பெரிய கொம்புக்கு பாரி கொம்பு என்றும் பெயர்.

**பெரிய கொம்பு**

'S' வடிவத்தில் இருக்கும். இது பாம்பைப் போல் உருவமுள்ளது. இக்கொம்புகள் உக்கிரமான தெய்வங்களைச் சாந்தப்படுத்துவதற்காக வாசிக்கப்படும். மழை வராமல் தடுக்கும் துர்தேவதைகளை விரட்டவும் இத்தகைய கொம்புகளை ஊதுவர்.

**5. மகுடி**

இதன் அமைப்பு மிக எளிதானது. அதன் மேல் பாகம் ஒரு காய்ந்த சுரைக்காயால் ஆனது. அதற்குள் ஊதப்படும் காற்று அங்கேயே சேகரிக்கப்படுகிறது. பிறகு அது கருவியின் கீழ் பாகத்தில் உள்ள மூங்கில், நாணல் அல்லது உலோக ரீட்களின் வழியாக திறந்து விடப்படுகிறது. சுரக்காயின் மேல் பாகத்தில் "ஒரு குழாய்". வெளியே தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பக்கத்தில் ஒரு திறப்பு இருக்கும். இதை தோலினாலோ, மூங்கிற் பட்டையினாலோ மூடி இருப்பார்கள். இதுதான் கருவியின் ரீட் ஆகும். இது துவாரத்தை விடப் பெரிதாக இருப்பதால் அதன் பக்கங்களிற் அடைத்துக் காற்று கட்டுப்படுத்தப்படும். காற்று வெளியே செல்லும் போது கீழேயுள்ள குழாய்களில் நுழைந்து ஒலி எழுப்பும். குழாய்களில் துளை இடப்பட்டிருக்கும். மகுடியின் இசை மக்களுக்கு மயக்கம் தரும். பாம்பு மகுடியின் இசைகேட்டு படமெடுத்தாடும்.

### 3. தோல் கருவிகள் (Skincovered instruments)

தோல் வாத்தியங்களும், கஞ்சக்கருவிகளும் பொதுவாக தாள வாத்தியங்களாகத்தான் உபயோகிப்படுகிறது. தோற்கருவிகளாவன — பேரிகை, படகம், இடக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, மிருதங்கம், தவில், கஞ்சிரா, உடுக்கை, தப்பட்டை, பெரும்பறை, சிறுபறை, குடமுழா,தக்கை, கணப்பறை, முழவு,முரசு போன்றவை அடங்கும். இவை தோலினால் செய்த முகங்களைக்கொண்டவை. கைகளினால் தட்டியும். குச்சியினால் அடித்தும் வாசிக்கப்படுகின்றன. அடியார்க்கு நல்லார் 30 வகையான தோற் கருவிகளை எடுத்துக்காட்டியுள்ளார்.

### 1. தவில்

தமிழகத்தில் மங்கல இசையாகப் போற்றப்படும் இசைக்கருவி தவில் எனப்படும். இது ஆதிகாலம் தொட்டே இருந்து வந்துள்ளது.[16]

### தவில் - பொருள்

குற்றமில்லாத வாத்தியம் என்பது பொருள். தவில் என்ற சொல்லை முதன் முதலில் அருணகிரிநாதரே குறிப்பிட்டுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமைப்பு**

பாலாமரத்தில் உருளை வடிவமாக உட்புறத்தில் குடைந்தெடுக்கப்பட்டு, இரு புறமும் தோலால் மூடப்படும். அவை வலந்தலை (தட்டு) இடந்தலை (தொப்பி) என அழைக்கப்படுகின்றன. தவிலின் இருபுறங்களிலும் பொருத்தப்படும் ஒலி எழுப்பும் தோற்பகுதிகள் வளைகளில் இணைத்துக் சுற்றப்படும். இதற்கு நல்ல மூங்கில்கள் உபயோகிக்கப்படுகின்றன.

**வலந்தலை** — வலது கை விரல்களால் வாசிக்கப்படும்.
**இடந்தலை** — குச்சியில் அடித்து முழங்கப்பெறும். குச்சி 12 அங்குல நீளமுடையது.

**தவிலின் வகை**

திமிரி, பாரி என நாகசுரத்தை போலவே உண்டு.

**திமிரி** — நீளத்திலும்,சுற்றளவிலும்,சற்று குறைவானது. அதிக ஒலி எழுப்பும்.

பாரி – சற்று பெரிதாக அமைந்தது. குறைவான ஒலியைத் தரக்கூடியது.

**தவிலின் நீளம்** – 15 1/2 அங்குலம் முதல் 24 அங்குலம் வரை

வாய்ப்பகுதி விட்டம் – 8 ½ அங்குலம், இடப்புறம் 9 அங்குலம்,

நடுப்பகுதி – 11 அங்குலம் முதல் 24 அங்குலம் வரை

**2. மிருதங்கம்**

தமிழக இசைக் கச்சேரிகளில் பிரதான தாளவாத்தியம். பாடுபவரின் பாடலுக்கு அனுசரணையாகவும், மிருதுவாகவும் வாசிக்கப்படுவதால் இது மிருதங்கம் என அழைக்கப்படுகிறது.

**மிருதங்கம் - பொருள்**

மிருத் என்றால் மண் என்றும் அங்கம் என்றால் உடல் என்றும் பொருள் கூறுவர். தண்ணுமைக் கருவியே பின்னால் மிருதங்கம் ஆனது என்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொன்மை

ஆதியின் ஊழிக்காலம் நெருங்கும்போது, உலகை உய்விக்கும் பொருட்டு சிவபெருமான் ஆனந்தத் தாண்டவம் ஆடிக்கொண்டிருந்தார். அப்போது பார்வதியின் உடலிலிருந்து தனித்து வெளியிடப்பட்ட மகா காளியானவள் சிவனாரை இகழ்ந்து பேசி தன்னோடு நாட்டியத்தில் போட்டியிடுமாறு கூறினாள். சிவன் ஆடிய ஊர்த்துவ தாண்டவத்தில், அவர் தனது ஆடலுக்கேற்ப தனது கையிலிருந்த டமருகத்தை இசைக்கிறார். அப்போது அங்கிருந்த முனிவர்களும்,தேவர்களும் அந்த டமருக ஒலி, அவரிடம் மிகுந்த ஆவேசத்தினை ஊட்டுவிப்பதை உணர்ந்து, அவரிடம் தாங்கள் ஆட ஏதுவான வகையில் ஒரு இசைக்கருவியை ஆக்கித் தருக என்று கேட்கின்றனர். அப்போது சிவன் தன் கையிலிருந்த அந்த ஓங்கார டமருகத்தை இரண்டாக முறித்து அதன் இரு முனைகளையும் மாற்றி, ஒன்று சேர்த்து ஓர் இசைக்கருவியாக படைத்து நந்தி பகவானிடம் தர அவர் அதை இசைக்கிறார். சிவனின் நடனத்தில் மிருது தன்மையைத் தோற்றுவித்தமையால் இது மிருதங்கம் எனப்பட்டது என புராண வரலாறு கூறுகின்றது.[17]

## அமைப்பு

பண்டைய காலத்தில் மண்ணில் செய்யப்பட்டது. தற்காலத்தில் பலாமரம்,கருங்காலி போன்ற மரங்களினால் செய்யப்படுகிறது. இதன் நடுப்பாகம் பருத்தும், இருபுறமும் குறுகியும் காணப்படும். நீளம் 23" 27" வரை. இடப்பாகம் 8 " வலப்பாகம் 7 " விட்டங்களையுடையது. வலந்தலை, இடந்தலை ஆகிய இரு பக்கங்களிலும் உள்ள மூட்டுத்தோலை இணைக்க ¼ அங்குல எருமை மாட்டுத் தோலினை வாராக உபயோகிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. பஞ்சமுக வாத்தியம்

இது பூசைக் காலங்களில் வாசிக்கப்படுகிறது. இது பித்தளை அல்லது செம்பினாலான ஒரு பெரிய பானை வடிவில் அமைந்துள்ளது. இதன் மேற்புறத்தில் ஐந்து முகங்கள் உள்ளன. இவை பசுத்தோலினால் மூடப்பட்டிருக்கும். பக்கத்திற்கு இரண்டாக நான்கு முகங்களும் நடுவில் ஒரு முகமும் காணப்படுகிறது. [18]

### 4. உடுக்கை (டமருகம்)

இசை நூல் மரபின்படி டமருகம், தோற்கருவி என்றும் புற முழவு வகையைச் சார்ந்த இசைக் கருவி என்றும் அறியக்கிடக்கின்றது.

"தமருகம் எரியும் கையின் தோற்றவன் காண்"[19]

இது துடி, என்றும் அழைக்கப்படும். கிண்ணங்களின் வாயை பசுமாட்டின் தோலால் மூடி அக்கிண்ணங்களின் அடிவாரங்கள் ஒன்றையொன்று நெருங்கி இருக்குமாறு அமைத்து கிண்ணத்தின் வாயில் உலோக வளையங்களைப் பொருத்தி, அதிலிருந்து தோல்வார்களால் அல்லது நரம்பால் வாயை இழுத்துக்கட்டி விறைப்பாக்கி அமைத்ததே உடுக்கையாகும் - உடுக்கையின் நடுப்பகுதி சுருங்கி இருக்கும். இவ்விடத்தில் இரண்டு கயிறுகளைக்கட்டி, அவற்றின் நுனியின் முடிச்சிட்டு அமைக்க வேண்டும்.

### 5. இடக்கை

உடுக்கை வேறு, இடக்கை வேறு. இடக்கை என்பது இடக்கையால் வார்க்கட்டுகளை அமுக்கிக் கொடுத்து முழக்கப்படுவது. அதனால் இடக்கை எனப் பெயர் பெற்றது. உடுக்கை மிகச் சிறியது. இடக்கை பெரியது.

### அமைப்பு

இடக்கைக்குரிய அளவுகள்

முகம் - 32 விரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுக்குண்டு – 16 விரல்

முகம் – 10 குண்டுப்பருமை

துளை – 18 விரல்

இடக்கைக்கு இரண்டு முகமும் கொண்டு மெல்லிய தோலால் போர்த்தப்படும், கயிறுகள் ஒவ்வொன்றும் மூன்று புரியிலே திரிக்கப்பட்டிருக்கும். இக்கயிறுகள் கருவியின் உடலிலிருந்து சற்று விலகியே கட்டப்பட்டிருப்பதால், வாசிப்பவர் அவற்றை தேவையானபடி கையினால் அழுத்த முடியும். அவ்விதம் அழுத்துவதன் மூலம் இருபுறங்களிலுமுள்ள தோல்களின் விசையில் மாறுதல்களைத் தோற்றுவித்து இனிய ஒலிவடிவங்களை வாசிக்க முடியும். இதுவும் புடைப்புச் சிற்பங்களில் உண்டு.

### 6. பறைகள்

பறைகளுக்கு புஷ்கரம் என்ற சாதாரண பெயரும் உண்டு. இது தோன்றிய வரலாற்றை பரத முனிவர் தமது நாட்டிய சாத்திரத்தில் ஒரு கதை மூலம் விபரிக்கிறார்.

### கதை

ஸ்வாதி என்ற முனிவர் தமது ஆசிரமத்தில் இருந்த குளத்தில் (புஷ்கரம்) நீராடச் சென்றார். அச்சமயம் இந்திரன் ஒரு பெரு மழையைப் பெய்யச் செய்தான். மழைத் துளிகள் குளத்திலிருந்த தாமரை இலைகளின் (புஷ்கரம்) மீது விழுந்தபோது தாளத்துடன் கூடிய இனிய ஒலிகள் பிறந்தன. அதை வியப்புடன் கேட்ட முனிவர் இன்னிசை காதில் ஒலித்துக் கொண்டேயிருக்க குடிசைக்குத் திரும்பினார். பின்னர் விசுவகர்மனின் உதவி கொண்டு அம்முனிவர் பணவம், தந்துரம் முதலிய பறைகளை நிர்மாணம் செய்தார்.

இந்த பறைகள் தாள வாத்தியங்களாக இருந்த போதிலும் துளைக் கருவி, தந்திக்கருவி வாத்தியங்களுக்கு இணையான அந்தஸ்தை வகிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மரத்தை வெட்டி அதன் உட்புறத்தை குடைந்து பறைக்கு வேண்டிய கட்டாக அதை உபயோகிப்பது பழைய வழக்கம். இதன் ஒரு பக்கத்தையோ, இரு பக்கங்களையோ தோலினால் மூடினால் ஒரு பறையாகும்.

தமிழ்நாட்டில் தம்மட்டை, அல்லது தப்பட்டை என்றும் அழைக்கப்படுகிறது.

## 7. கஞ்சரி (டாஃப் வகையைச் சேர்ந்தது)

பறைகளுள் சிறியது. வட இந்தியாவில் கஞ்சரி என அழைக்கப்படுகிறது. தோல் போர்த்திய இக்கருவியை உள்ளங்கையினாலும், விரல்களினாலும் வாசிப்பார்கள். கஞ்சரியில் சிறுசிறு தகடுகள் பொருத்தப்பட்டிருப்பதால் அதை வாசிக்கும் போது இனிய ஓசை பிறக்கிறது. கிருஷ்ணன் குழல் ஊத ராதை இதை வாசிப்பதாக சிற்பங்களில் காட்டப்பட்டிருக்கும்.

## 8. கஞ்சிரா

இக்கருவியை ஒரு கையினால் பிடித்துக்கொண்டு மற்றொரு கையினால் வாசிப்பார்கள், தென்னிந்தியாவில் இது கடத்திற்கு இணையான பக்கவாத்தியம். கஞ்சிராவிற்கு உடும்புத்தோலைப் பயன்படுத்துகின்றனர். இக்கருவிகளில் சுருதியை மாற்ற இயலாது

## 9. பேரி

13 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற மிகச் சிறந்த இசை நூல்களுள் ஒன்றான சங்கீத ரத்னாகரம், பேரியைப் பற்றி சுருக்கமான விபரம் தருகிறது. 65 செ.மீ நீளமுள்ள இக்கருவி செம்பாலானது. இரு முகங்களுள் ஒவ்வொன்றும் 25 செ.மீ குறுக்களவு கொண்டவை. ஒரு முகம் கையினாலும் மற்றொரு முகம் கோலினாலும் அடிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 10. பம்பை

இது உருளை வடிவப் பறைகள். இவற்றுள் பெரியவை டோல் என்றும் டோலக் என்றும் கூறுவர். தமிழ்நாட்டில் இதை பம்பை என்பர்.

## 4. கஞ்சக் கருவிகள் - கன வாத்தியங்கள் (Metal and Wood Instruments)

கடவுளை வழிபடும் போது கஞ்சக் கருவிகளால் ஒலிக்கப்படுகின்றன. கனவாத்தியங்கள் மண்ணாலோ, உலோகத்தாலோ அல்லது மரத்தாலோ ஆனவை. இவ்றறில் ஜால்ரா, கடம் போன்றவை உலோகத்தாலும், சிப்ளாக்கட்டை போன்றவை மரத்தாலும் ஆனவை. இவை தட்டியோ, உராய்ந்தோ அல்லது அடித்தோ ஒலி எழுப்பப்பட்டு வருகின்றன. இவை இசைக்குத் தகுந்த வகையில் தாள அமைப்பிற்கேற்ப வாசிக்கப்படுகின்றன.

### 1. தாளம் (ஜால்ரா)

தாளம் ஜால்ரா என்ற பெயராலும் அழைக்கப்படுகின்றது. பாடலை வரம்புக்குள் கட்டுப்படுத்தும் கரைகள் போன்றவை. இந்த கைத்தாளங்கள் இசை நயத்தோடு ஒலிக்கு கருவிகளைக் கொட்டி தாள நயம் பெருக்குபவை தாளவிசைக் கருவிகள்.

### அமைப்பு

ஒரு தட்டை உட்புறம் வளைத்தால் அது தாளம் ஆகி விடும். தாளங்கள் பித்தளையினாலோ, வெண்கலத்தினாலோ வார்க்கப்படும். நடுவில் துளை உண்டு. இரண்டு தட்டுக்களும் கயிற்றினால் இணைக்கப்பட்டிருக்கும். இவற்றில் வளையும், தட்டையான தாம்பாளம் முதல் மணியைப் போன்ற உருவம் வரை வித்தியாசப்படும். இவற்றிற்கு பற்பல பெயர்களும் உண்டு. ஜால்ரா, சல்லரி, கரதாளம், தாலி, தாளம், எலத்தாளம், பிரம்மதாளம், குழித்தாளம் முதலியன. பிரம்மதாளம் உருவத்தில் பெரிய தாளம். ஜஞ்ஜ், பிரத்தாளம், பிரமதாளம், போர்த்தால் முதலிய பெயர்களால் அழைக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. மணி

இஃது எல்லா திசைகளிலும் ஒலியெழுப்பி எதிரொலிக்கும் கருவி. பெரும்பாலும் இது கடவுள் வழிபாட்டில் தீபம் காட்டப்படும் போது பயன்படுத்தப்படும்.

### அமைப்பு

இஃது ஆறுவிரல் அகலமும், ஆறுவிரல் நீளமும் கொண்டு அமையும். இதன் மீது 6 விரல் நீளமும் ஒரு விரல் கனமும் கொண்ட காம்பு ஒன்று பொருத்தப்பட்டிருக்கும். அரைவிரல் கனமும் 3 விரல் நீளமுடைய நாக்கு இதனுள் பிணைக்கப்பட்டிருக்கும்.

## 3. சிலம்பு

நீள் வட்ட வடிவில் இடையில் சற்று உள்நோக்கி வளைந்த நிலையில் காணப்படும். உள்ளே சிறு கற்களைப் போட்டிருப்பர். அசைக்கும் போது உள்ளே இருக்கும் கற்கள் சிலம்பின் சுவர்களில் மோதுவதால் சிலம்பு ஒலிக்கும்.

சிற்பங்களில், சிவன் படிமங்களில், துர்க்கை படிமங்களில் திருப்பாதங்கள் அல்லது கைகளில் சிலம்பு காணப்படும்.

## 4. சிப்ளாக்கட்டை

மரப்பலகையின் ஓரத்தில் சலங்கை கட்டப்பட்டிருக்கும். இத்தகைய இருகட்டைகளால் ஆனது இக்கருவி. இதன்மேல் பகுதியிலுள்ள பிடி போன்ற பகுதியில் விரல்களை நுழைத்துப் பிடித்துக்கொண்டு அவற்றைத் தட்டி மோதச் செய்து ஒலியெழுப்புவர் [20] பாடும் போது இதை ஒலித்துத் தாளம் போட்டு கொள்வர். நுட்பமான தாள வேலைப்பாடுகளை இதன் மூலம் ஒலிப்பதன் வாயிலாக கேட்பவரை ஈர்க்கச் செய்யும்.

## 5. கோல்கள்

கோலாட்டத்தில் பயன்படுத்தும் கோல் எங்கும் காணப்படும் இசைக்கருவியாகும். வளையங்களைப் பொருத்தியோ அல்லது பொருத்தாமலோ மரக்குச்சிகளால் வர்ணம் பூசப்பட்ட கோல்களை ஒன்றின் மேல் ஒன்றை அடித்து மோதச் செய்வதால் இசை ஒலி கிடைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 6. தவண்டை

உடுக்கை அமைப்புடையது. உடுக்கையை விட அளவில் பெரியது. இருமுகக் கருவி. உடல் மரத்தால் ஆனது. இடையில் கயிறு அல்லது துணி சுற்றப்பட்டிருக்கும். கருவியைக் கழுத்தில் கட்டித் தொங்கவிட்டுக்கொண்டு வலது கையில் குச்சியைப் பிடித்துக்கொண்டு வாசிப்பர்.

### 7. தக்கை

இது இருமுகம் கொண்டது. உடுக்கைக் குடும்பத்தைச் சேர்ந்தது. பார்ப்பதற்கு உடுக்கை போன்று இருந்தாலும் நுட்பமான வேறுபாடு உண்டு. உடுக்கையைவிட பருமனாக இருக்கின்றது.

உடுக்கை, வலது கையால் தட்டி வாசிக்கப்படும். தக்கை வலது கையில் வளைந்த மூங்கில் குச்சியால் அடித்து வாசிக்கப்படுகிறது. மற்றபடி அமைப்பும் கையில் பிடித்திருக்கும் முனையும் உடுக்கையை ஒத்திருக்கின்றன.

இடையில் நாடாப்பட்டை ஒன்றைக் கட்டி அதன் இருமுனைகளையும் வாசிப்போர் இடக்கரத்தில் பிடித்துக் கொள்வதன் வாயிலாக இக்கருவி கைக்கு மேலே நிற்கும். அப்போது குச்சி கொண்டு அடித்து வாசிப்பார்கள்.

### 8. உறுமி

இது ஓர் இருமுகத் தோற்கருவி, ஒரு முகத்தில் வளைந்த குச்சி கொண்டு தேய்த்து ஒலி எழுப்புவர். இதன் ஒலி உறுமுவது போல் இருப்பதால் இப்பெயர் பெற்றது.

## இசைக்கருவிகளின் இசை - சிறப்புத் தன்மைகள்

கருவி இசையின் மூலம் நாம் இனிமையான இசையினை கேட்டு இன்புறலாம். பல்வேறு வகையான கருவி இசையின் மூலம் பல்வேறு இனிய இசையினை நாம் உணரமுடிகிறது. ஒவ்வொரு இசைக்கருவிக்கும் ஒவ்வொரு இசைச் சிறப்பு உள்ளது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதஸ்வரம் – மங்கலத்தன்மை பெற்றது

புல்லாங்குழல் – இயற்கையானது, மனதை வசீகரிக்கக் கூடியது.

வீணை – இதன் கானம் கேட்டால் இன்பம் மிகும்

வயலின், சாரங்கி – சோக உணர்வைக் கொடுக்கக்கூடியது.

எனவே சூழ்நிலைக்கேற்ப இசைக்கருவிகள் நமக்கு பயன்படுகின்றது.

மிகப்பழங்காலம் தொடக்கம் இறைவனின் கருவிகளாக,

சிவன் – டமருகம்

கிருஷ்ணன் – புல்லாங்குழல்

திருமால் – சங்கு

சரஸ்வதி – வீணை

நந்திகேஸ்வரர் – மிருதங்கம் இசைத்ததாக சான்றுகள் உள்ளன. கோவில் சிற்பங்களில் இசைக்கருவிகள் வாசிக்கும் சிற்பங்கள் உள்ளதைப் பார்க்கும்போது இசைக்கருவியின் முக்கியத்தைத் காணமுடிகிறது.

## குரலிசை, கருவியிசை

குரலிசையில் காட்ட முடியாத சுருதிகள், கமகங்களையும் கருவியிசை மூலம் தெளிவாக அறியலாம். இசை நுணுக்கங்களை, தத்துவங்களை, சுருதி பேதங்களை இசைக்கருவி மூலமே விளக்கிக் காட்ட முடியும். குரலிசை மாறலாம். ஆனால் கருவி இசை மரபுத்தன்மையானது மிகவும் சரியாக வாசிக்கும் தன்மையுடையது. கருவியிசை ஐந்து ஸ்தாயிகள், ஏழு ஸ்தாயிகள் வரை வாசிக்கமுடியும். கருவி இசை – எல்லோரும் பயிற்சி செய்தால் வாசிக்க முடியும். குரலிசை – குரல் வளம் உடையவர்கள் மட்டுமே பாடமுடியும். மேலும் குரலிசை நாட்டிய இசை, நாட்டிய நாடகங்களுக்கு கருவியிசை பெரும்பங்கு வகிக்கின்றது. இசைக்கு மொழி தேவையில்லை. உலகில் எந்த மக்களும் கேட்டு இன்புறமுடியும் என்பதை இசைச் சிற்பங்கள் விளக்கிக் காட்டுகின்றன எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்பு

1. முல்லைப்பாட்டு, 4
2. புறநானூறு, 229.14
3. பக்கிரிசாமி பாரதி.கே. வி; **இந்திய இசைக்கருவூலம்**, ப.383
4. சுவாமி விபுலாநந்தர், **யாழ்நூல்**, ப.34
5. **பஞ்ச மரபு** வெண்பா. 7
6. வெற்றிச்செல்வன், **இசையியல்**, ப64
7. மாணிக்கவாசகர், **திருப்பள்ளியெழுச்சி**, ப4
8. **திருமுறை**, 9.10.8
9. **திருமுறை**, 7.85.6
10. பக்கிரிசாமி பாரதி. கே.வி; **இந்திய இசைக்கருவூலம்**, ப.382
11. ஞானா குலேந்திரன், **பழந்தமிழர் ஆடலிசை**, ப.153
12. பெரியாழ்வார், **திருமொழி**, 282
13. இராம கௌசல்யா, **ஆலயவழிபாட்டில் இசைக்கருவிகள்**, ப42
14. பெருமாள். ஏ. என்; **தமிழர் இசை**, ப104
15. தனபாண்டியன். து. ஆ, **புல்லாங்குழல் ஓர் ஆய்வு**, ப.2
16. பக்கிரிசாமி பாரதி, **இந்திய இசைக்கருவூலம்**, ப.405
17. மேலது, ப.407
18. குடவாவில் பாலசுப்பிரமணியன், **குடமுழா**, ப.129
19. அப்பர் **தேவாரம்** 227–3
20. இராம. கௌசல்யா, மு.கூ.நூ, ப.108



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1.யாழ்



3.உடுக்கை



2.வீணை



4.தவில்



5.தவண்டை



7.தாளம்



6.தம்புரா



8.சிலம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



18. கொம்பு



19. கின்னரி



20. கோல்



21. இடக்கை



22. சிப்ளா கட்டை



23. பிரும்மதாளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



9.சங்கு



10. புல்லாங்குழல்



11.பறை





13.நாகசுரம்



14.மிருதங்கம்



15.மத்தளம்



16.மணி



17.மகுடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் மூன்று

## திருக்கோயிற் சிற்பங்களில் இசைக் கருவிகளின் தோற்றமும் வளர்ச்சியும் சங்க காலம் முதல் ஆரம்ப கால சோழர்கள் காலம் வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. திருக்கோயில் சிற்பங்களில் இசைக்கருவிகள் தோற்றமும் வளர்ச்சியும்

பண்டைக் காலந்தொட்டே வளர்ந்து வந்துள்ள கவின் கலைகளில் ஒன்று சிற்பக்கலையாகும். பல்லவர் காலத்திற்கு முன்பு பெரும்பாலும் மண்ணுருவங்களும், சுதையுருவங்களுமே செய்யப்பட்டன. கோயில் கட்டுவதற்குக் கருங்கல் பயன்படுத்தப்பட்ட பிறகுதான் சிற்பம் நிலைபேறடைந்த கலையாக உருவாயிற்று.

## 3.1. சங்ககாலம்

இக்காலக் கோயில்கள் மரவிட்டங்களையும், செங்கல் கட்டடங்களையும் கொண்ட சுவர் மேல் சுண்ணம் பூசப்பெற்றிருந்தன. கடியலூர் உருத்திரங்கண்ணனார் இடிந்து சிதைந்த செங்கற் கட்டடக் கோயில் ஒன்றைக் கூறுகின்றார்.

"இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
மணிப்புறாத் துறந்த மரஞ்சோர் மாடத்து
எழுதணி கடவுள் ----" (அகநானூறு 167)

### சோழன் செங்கணான்

சிவனுக்கும், திருமாலுக்கும் ஆக எழுபதுக்கு மேற்பட்ட கோயில்களைக் கட்டினான்.

"இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோளீசற்கு
எழில்மாடம் எழுபது செய்துலக மாண்ட
திருக்குலத்து வளச் சோழன்-----"

(திருமங்கையாழ்வார் பெரியதிருமொழி 6-6-8)

"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங் கோயில் எழுபதினோடெட்டும் மற்றுங்"

(திரு அடைவு திரு தாண்டகம், 6ம் திருமுறை)

என திருநாவுக்கரசரும், சோழன் செங்கணான் அமைத்த பெருங்கோயில்களைப் பாடுகின்றனர். இதனை இக்கால இலக்கியங்களிலேயே காணமுடிகின்றது. சங்ககாலத் தமிழர்கள் மண்ணாலும், மரத்தாலும், தந்தத்தாலுமே அழகிய சிற்பங்களை உருவாக்கினர் போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மண்ணீட்டாளர்" – மண் உருவங்களைச் செய்தனர். வரலாற்றுச் சிறப்பு மிக்க புகார், காஞ்சி, அரிக்கமேடு, கொற்கை போன்ற இடங்களில் அகழ்வாய்வுகள் நடந்தபோது கிடைத்துள்ள பல்வேறு மண் உருவங்கள் அக்காலத்துச் சிற்பங்களுக்கு தக்க சான்றுகளாகும்.

### அறச்சலூர் கல்வெட்டு

அறச்சலூர் எனும் இடத்திலுள்ள (சில இடங்களில் அரச்சலூர் எனவும் குறிப்பிடப்படுகிறது) இசைக் கல்வெட்டு, ஈரோடு மாவட்டம் என்னும் ஊரில் உள்ள நாகமலைக் குன்றில் கி.பி இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இசைக் குறிப்பைக் குறிப்பிடுகின்றது.

### பல்லவர் காலம் (550-850)

### மகேந்திரவர்மன் மண்டகப்பட்டு சாசனம்

"ஏதத் அனிஷ்டம் அத்ருமம் அலோஹம் அசுதம்
விசித்ர சித்தேந நிர்மாபிதந்ருபேண
பிரம்ம ஈசுவர விஷ்னு லக்ஷிதாயத நம்"

செங்கல், சுதை, மரம், உலோகமின்றி மும்மூர்த்திகளுக்குக் கோயிலெடுக்கப்பட்ட தகவல்களைத் தரும் முதலாம் மகேந்திரவர்மரின் மண்டகப்பட்டுக் கல்வெட்டுடன் அழியாத பொருட்களைக் கொண்டு கட்டடக்கலையுடன் சிற்பக்கலையும் ஆரம்பமாகின்றதை அறியலாம்.

### மகேந்திரவர்மன் - கோயில் இசைச் சிற்பங்கள்

### சீயமங்கலம்

தலைசிறந்த சீயமங்கல அவனிபாஜனன் கோயிலிலுள்ள நடராஜர் சிற்பம், சிவன் ஆடல்வல்லவனாக காட்சி தருகிறார். இவரது திருப்பாதங்களை கிண்கிணி ஓசையெழுப்புகிறது. பூத கணம் ஒன்று இருகைகளால் மத்தளம் வாசிக்கிறது.

### சிங்கவரம்

இங்குள்ள திரிபங்க துர்க்கை வலதுகாலை மகிஷத்தின் மீது வைத்துள்ளாள். எட்டுக்கரங்களில் மேல் உள்ள இரு கைகளுள் ஒன்றில் இசைக்கருவியாகிய சங்கு உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சி மலைக்கோட்டை

கங்காதரர் சிற்பம் அரிய படைப்பு. கங்காதரரை அடியார் நால்வர் வழிபடுகின்றனர். மேலே யாழோர் உருவம் காணப்படுகிறது.

## மகேந்திரவர்மன் குடுமியான்மலைக் கல்வெட்டு

"சித்தம் நமசிவாய" எனத் தொடங்கிப் பல்வகைப் பண்புகளையும் தாள வகைகளையும் விளக்கி, முடிவில் "இவை எட்டிற்கும் ஏழிற்கும் உரிய" என்று முடிந்துள்ளது.

## மாமல்லன் (நரசிம்மவர்மன்)

மகேந்திரவர்மனின் மகன் நரசிம்மவர்ம மாமல்லன் (கி.பி 630–668)[1] பாணிக்கோயில்கள் சிறப்பானவை. இவன் காலத்து மாமல்லபுரச் சிற்பங்கள் கலைக்கூடமாக விளங்கினாலும் இசைகருவிச் சிற்பங்கள் சோழர் காலத்துடன் ஒப்பிடும் போது குறைவாகவே உள்ளது. எனினும் குறிப்பிடத்தக்க இசைச்சிற்பங்கள் பிற்கால இசைச்சிற்பங்களுக்கு முன்னோடியாக அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## தர்மராஜ ரதம்

வடக்கிலொன்றும், தெற்கிலொன்றுமாய் இரண்டாக இருந்தபோதும் வடபுறத்தே தனித்தும், தென்புறத்தே துணையுடனும் வீணாதரர் காட்டப்பட்டிருப்பதால் காட்சியளவிலும் இரண்டு சிற்பங்களிலும் வெளிப்படும் இசையமைப்பு மாறுபட்டால் உணர்வளவிலும் மாறுபடுகின்றன. வீணை இரண்டு சிற்பங்களிலும் ஒன்று போலவே காட்டப்பட்டிருப்பினும் சிவபெருமான் அதை ஏந்தியிருக்கும் முறையிலும், வலக்கை தந்திகளை மீட்டும் பாவத்திலும் வேறுபாடுகள் உள்ளன. உணர்விலும் இவ்விரு சிற்பங்களுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு காட்டப்பட்டிருக்கிறது.

## திரௌபதை ரதம்

கருவறையின் பின்புறச் சுவரில் துர்க்கையின் மேலிருக்கைகளில் ஒன்றில் சங்கு உள்ளது.

Arasady Public Library
Municipal Council
Batticaloa



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வராக மண்டபம்**

அழகுமிக்க இம்மண்டபத்தில் ஆதிசேடனுக்கு முன் யாழ் ஒன்றுண்டு. இடப்புறம் நான்முகனை அடுத்து வீணையில் இசைபாடிப்போற்றும் நாரதரும் காணப்படுகின்றார்.

**மும்மூர்த்தி குகை**

மூன்றாவது அறையில் திருமால் சங்கு சக்கரமேந்தி நிற்கிறார். இக்குகையின் தென்புறப் பாதையிலே கொற்றவை எருமைத்தலை மேல் ஆழியும் சங்கும் கொண்டு அபயமுத்திரையோடு நிற்கிறாள்.

**ஆதிவராக மண்டபம்**

இங்கு ஆழியும் சங்கும் ஏந்திய திருமாலைக் காணலாம். இங்குள்ள கொற்றவையின் சிலையும் கண்ணைக் கவருகிறது. எண்கரம் பூண்ட இமயக்குமரியின் பல கரங்களுள் ஒன்றில் மணி காணப்படுகின்றது. இடது கரங்களில் ஒன்றில் சங்கு உள்ளது.

**திறந்தவெளிப் பாறைச் சிற்பம் (மாமல்லபுரம்)**

கின்னரர் யாழ் வாசிப்பதில் வல்லவர் என்று நிகண்டுகள் தெரிவிக்கும். அதற்கு ஏற்ப இங்கு கின்னரர்கள், யாழ் வாசித்துக் கொண்டும் தாளம் அடித்துக் கொண்டும் இசையெழுப்புகின்றனர்.

**ராஜசிம்மன்**

**காஞ்சி பெரிய கோயிற் சிற்பங்கள்**

பல்லவ சிற்பக் கலையில் மற்றுமொரு திருப்புமுனை இக் கோயில் ஆகும். கின்னரர்கள், இசைவாணர்கள், கலைஞர்கள் கைகளில் குழல், வீணை, முழவுகள் என இசைக்கருவிகள் காட்டப்பட்டுள்ளன. குழல், முழவு முதலிய இசைக் கருவிகள் ராஜ சிம்மேசுவரத்தில்தான் முதன்முதலாக காணக்கிடைக்கின்றன. ஒருமுக, இரட்டை முழவுகளும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணையின் பல பரிமாணங்களைக் காணமுடிகிறது. வீணையை, அமர்ந்து வாசிப்பவர்கள், சிற்பங்களில் பெரும்பாலாராக உள்ளனர். தாளமிசைக்கும் கணங்களும் உள்ளன.

## விமானம்

தென்கோடி விமானத்தில் முகப்புச் சுவரின் இறைவனின் ஊர்த்துவ தாண்டவக் கோலத்திற்கு கணங்கள் குடமுழவும், சிரட்டைக் கின்னரியும் வாசிக்கின்றன. சிரட்டைக் கின்னரியும் முதன்முதலில் தோன்றியது ராஜசிம்மேசுவரத்தில் தான்.

தாராசுரத்தில் காணப்படுவது போல் சில சென்டிமீட்டர் அளவுள்ள சிற்பங்கள் சில உண்டு. ஒருவர் குடமுழா வாசிக்கிறார். மற்றொருவர் அதற்கு ஆடுகிறார். இருவர் அமர்ந்து, வீணை வாசிக்கும் இசைக்காட்சி, பார்வையாளர் புடை சூழ்திருப்பது போல் படைக்கப்பட்டுள்ளது.[2]

## திருச்சிராப்பள்ளி திருப்பட்டூர்

இங்கும் ராஜசிம்மன், கைலாசநாதர் கோயில் எடுத்துள்ளான்.[3] இங்கு ஊத்துவர் கோலத்தில் டமருகம் வைத்துள்ளார். கணுக்காலில் கிண்கிணி. கீழே இசைக்கலைஞர்கள் இருவர் உள்ளனர். ஒருவர் ஒரு முக முழவுகள் இரண்டை அருகருகே இருத்தி இயக்க, மற்றொருவர் சிரட்டைக் கின்னரியின்[6] மீட்டலில் மெய்மறந்துள்ளார்.

## பாண்டியர் கால இசைக்கருவிச் சிற்பங்கள் (கி.பி.590 - 800)

இங்குள்ள திருமால் கோயிலில் உள்ள பாம்பின் மீது துயிலுகின்ற பள்ளிகொண்ட பெருமானின் சிற்பம் மிகவும் எழில்வாய்ந்தது. பெருமானின் பின்புறத்தில் பெரிய அளவிலான புடைப்புச் சிற்பத் தொகுதி காணப்படுகிறது. இதில் நாரதர் யாழையும், தும்புரு வீணையையும் தாங்கி நிற்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருப்பரங்குன்றம்

குழல் ஊத, குடமுழா முழங்க இக்கோயிலில் சதுரங்கம் ஆடும் பெருமானும் அவரின் வலப்புறத்தில் கணங்களெல்லாம் காண அன்னை சிவகாமி ஆடியகாலும் அதிற் சிலம்போசையும் கொண்டு விளங்க மலைமகளைச் சூழ்ந்து நந்தி குடமுழா முழங்க குள்ளச் சிறுகணங்கள் குழல் ஊதக் காட்டியிருக்கும் சிற்பம் அற்புதமானது.

### கழுகுமலை வெட்டுவான் கோயில்

தட்சணாமூர்த்தி — மத்தளம் வாசிக்கும் தென்முகக் கடவுளின் சிற்பம் பாண்டியர் கலையின் தனித்தன்மையை அடையாளம் காண உதவுகிறது.[4] திருமால் சங்குடன் தேவகணங்கள் இன்குழல் எடுத்து, இருகரம் அசைத்து குறுகிவாய்மடக்கி, குழல் ஊத அவ்விசைக்கேற்ப மற்றொரு கணம் மத்தளம் கொட்டுகிறது.

### திருப்பத்தூர் வீணாதாரர்

இச்சிற்ப படிவம் திருப்பத்தூர் கற்றளிநாதர் கோயிலிலுள்ள சப்தமாதர் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.[5] முன்கரங்கள் இரண்டும் மார்புடன் அணைத்து வாசிக்கும் நிலையில் உள்ளது.

பல்லவர் காலத்தில் சிற்பங்கள் கோயிற் சுவர்களிலேயே புடைப்பாகச் செதுக்கப்பட்டன. ஆனால் சோழர் காலத்தில் சிற்பங்கள் தனியே செய்யப்பட்டு அவற்றுக்கெனச் சுவரில் அமைந்த கோட்டங்களில் பொருத்தப்பட்டன. இங்கு கட்டடமும் சிற்பமும் சமநிலை வகிக்கின்றன. இக்காலக் கோயில்களைக் காணும் போது கட்டடமும் தெரிகிறது. அதிலிருந்து தனித்தொரு அழகுடையதாய் சிற்பங்களும் தெரிகின்றன. பல்லவர் காலத்தில் கட்டடமும் சிற்பம் போல் காட்சியளிக்கின்றது என்பர் திரு. இரா நாகசாமி

### 3.2 ஆரம்பகாலச் சோழர் முதல் இராஜராஜ சோழன் வரை

பல்லவர் காலச் சிற்பக்கலையானது பல சோதனைகளைத் தாண்டி நடைபெற்றது. பல்லவர்கள் காலத்தில் வேரூன்றிய சிற்பக்கலை சோழர்களது காலத்தில் பல்வேறு பகுதிகளிலும் பல்கிப் பெருகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோயில்களில் தாங்குதளம்,துணைதளம், தூண்கள், சுவர்கள், கூரைகள், ஆரங்கள் மற்றும் கிரீவம் போன்ற அத்தனை பகுதிகளிலும் சோழ மன்னர்கள் விருப்பத்திற்கேற்ப, சிற்பாச்சாரியார்கள் தங்கள் கைவண்ணத்தை காட்டியுள்ளனர்.

ஆகமங்கள், புராண இதிகாசங்கள், சிற்ப நூல்களுக்கேற்ப சோழ சிற்பிகள் இறைத்தோற்றங்கள், தேவர்கள், அசுரர்கள், கணங்கள், முனிவர்கள், அரசமரபினர், மனித உருவங்கள், விலங்குகள், பறவைகள், ஊர்வன, தாவரங்கள் என எதையும் விடாது சிற்ப வடிவில் சித்தரித்துள்ளனர்.

விஜயாலய சோழருடன் தொடங்கி மூன்றாம் ராஜேந்திர சோழருடன் முடிவு பெறும் ஏறத்தாழ நானூறு ஆண்டுகளைக் கொண்டது. சோழப்பெருவேந்தர் காலம். தமிழ்நாட்டில் மலர்ந்த கோயிற்கட்டக்கலை வளர்ச்சியை இரு பிரிவாக பிரிக்கலாம்.

1. முதலாம் இராஜராஜனின் இராஜராஜேசுவரத்துக்கு முற்பட்ட கோயில்கள்
2. இராஜராஜேசுவரத்துடன் தொடங்கி, திருபுவன கம்பகரேசுவரத்து கோயில்கள்.

## முதலாம் இராஜராஜனுக்கு முற்பட்டகாலச் சோழரது சிறப்பு மிக்க இசைச்சிற்பங்கள்

### விஜயாலயசோழன்

சோழர் கலை வளர்ச்சிக்கு முதல் வித்திட்டவர் விஜயாலயன். இவ்வரசனின் பெயர் கொண்டு விளங்கும் புதுக்கோட்டையிலுள்ள நார்த்தாமலை என்னும் விஜயாலய கோயிற் சிற்பங்கள் சோழர்களின் முதற்கால கலைவளர்ச்சிக்கு வித்திட்டது என்றால் மிகையாகாது.

### புதுக்கோட்டை அருங்காட்சியகம்

கையிலே வீணையேந்தி கல்லும் கவிபாடும் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் இசை மீட்டி நிற்கும் இக் கோயிலின் வீணாதர தட்சணாமூர்த்தி உருவம், புதுக்கோட்டை அருங்காட்சியத்தை அலங்கரித்து இன்றும் இன்பராகம் பாடிக்கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பராந்தகன்

புள்ளமங்கை பிரம்மபுரீஸ்வரர் ஆலயச் சிற்பங்கள் இவனது அரிய கலைப் படைப்பாகும். தாங்கு தளம்கொண்ட பாதங்களில் இடம் பெற்றிருக்கும் ஒவ்வொரு சிற்பமும் முற்கால சோழர் கால, உளி வண்ணம் பேசும் சிற்ப அற்புதங்கள் ஆகும்.

## ஆடலரசனும் இசைச் சிற்பங்களும்

சிவனின் தண்டபக்ஷம் எனும் ஆடற்கலைச் சிற்பமானது தமிழ்நாட்டில் இரண்டு திருக்கோயில்களில் தான் காணக்கிடக்கிறது.[6]

இச்சிற்பத்தில் சிவன் வலக்கால் ஊர்த்துவ நிலையில் காணப்பட இடது முன் கை வேடிக்கையாய் அதன் மீது படரவிட்டு, துடியுடன் சடாமகுடமாய் இறைவன் ஆடும் இந்த கரணத்திற்கு சிரட்டைக் கின்னரியுடன் ஒரு கணமும் குடமுழவுடன் மற்றொரு கணமும் இசை சேர்க்கின்றன.

## பொன்செய்நல்துணை ஈசுவரன்

சீவக சிந்தாமணியின் யாழ்ப் போட்டியைத் சிந்தரிக்கும் சிற்பம் குறிப்பிடத்தக்கது. வலப்புறம் ஆடவர் இருவர் அமந்திருக்க இடதுபுறம் பெண்கள் உள்ளனர். இருவருக்கும் இடையே திரை உள்ளது. இது சீவக சிந்தாமணி சுட்டும் பளிக்கொளி மணிச்சுவர் எழினியாகலாம். யாழ் வாசிக்கும் ஆண் வடிவத்தை ஜீவகனாகவும், உடனுள்ள வடிவத்தை அவர் நண்பர் புத்திசேனனாகவும், யாழ்வாசிக்கும் பெண்ணைக் காந்தருவ தத்தையாகவும் கொள்ளலாம். காந்தருவ தத்தைக்கு அருகே பேடியான வீணாபதியும் உடன் இரு தோழிகளும் காட்டப்பட்டுள்ளனர்.[7]

## கோரங்கநாதர் கோயில்

இசையாசிரியருடன் கூடிய ஆடல் அணங்குகளை கரணக்கோலங்களில் இங்கு காணமுடிகிறது. தாளம், உடுக்கை, ஒருமுக முழவுகள், குழல் முதலியவை இசைக்கருவியாக காட்டப்பட்டுள்ளன. இசைக்கலைஞர்கள் இங்கு பெரும்பாலும் பெண்களாகவே உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடும்பாளூர்

கொடும்பாளூர், புதுக்கோட்டையில் 35 கி.மு தொலைவில் குடுமியான்மலை – மணப்பாறைச் சாலையில் உள்ளது. தற்போது கொடும்பாளூர் மூவர் கோயிலும், முசுகுந்தேஸ்வரர் கோயிலும் இப்பகுதியை ஆண்ட வேளிரின் பெருமைக்குக் கட்டியங் கூறிக்கொண்டிருக்கின்றன.

மூவர் கோயில் பூதிவிக்கிரகேசரி, தனதுபெயரிலும், தனது மனைவியர் வரகுணவாட்டி, கற்றளை பிரட்டியார் ஆகியோரின் பெயராலும் மூன்று கோயில்களைக் கட்டினான் என இங்குள்ள கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. எனவேதான் இக்கோயில் மூவர் என அழைக்கப்படுகிறது. இக்கோயில் உள்ள கட்டட அமைப்பும், சிற்பங்களும் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. மூன்று கோயில்களில் (தெற்கு வடக்கு வரிசையில் ஒரே மாதிரியான மூன்று கோயில்கள்) வடக்குப் பக்கத்திலிருந்த கோயில் இடிந்து அழிந்து விட்டது. (அதிஷ்டானம் மட்டுமே உள்ளது) தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய இடங்களில் கட்டப்பட்ட மிக உயரமான கோயில் விமானங்களின் கட்டுமான அமைப்பு, சிற்பங்களது அமைப்புப் பணிக்கு கொடும்பாளூர் மூவர் கோயில் விமானம் முன்னோடியாக திகழ்கிறது. இச்சிற்பங்களின் அங்க அமைப்பு, அளவு, பரிமானங்கள் மனித உடற்கூற்றோடு ஒத்திருப்பது சிறப்பாகும். இங்குள்ள வீணாதரர் சிற்பம் அழகுவாய்ந்தது.

## கீழையூர்த் தென்வாயில் ஸ்ரீகோயில்

இக்கோயில் விமானங்களில் உள்ள பூத வரிகள், அனுபவித்துப்பாடுமாறு இரு கணங்கள் காட்டப்பட்டுள்ள நிலை, ஆச்சரியக்காட்சியை கண்முன் நிறுத்துகின்றன. இங்குள்ள இசைக்கருவிகளுள் குடமுழா, ஊது கொம்புகள், தாளங்கள், குழல்கள், வீணைகள், ஒருமுகமுழவு, சிரட்டைக்கின்னரி என எண்ணற்ற இசைக்கருவிகள் இங்குள்ள சிற்பங்களில் காணமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருநாகேஸ்வரம்**

கும்பகோணத்திலுள்ள கோயில்களில் மிகவும் பழமையானதாகக் கருதப்படுவது நாகேஸ்வர சுவாமி கோயிலாகும். இறைவன் நாகேஸ்வரர். அம்மன் பெரிய நாயகி. இது தஞ்சையை ஆண்ட ஆதித்த சோழன் காலக்கோயிலாகும்.[8] சோழமன்னர்களுக்கு முன்பு ஆட்சி செலுத்திய பல்லவ மன்னர்களின் கட்டடக்கலை, சோழமன்னர்கள் கட்டிய கற்றளிகளிலும் ஓரளவு பின்பற்றப்பட்டுள்ளது. ஆதித்த சோழன் காலம் கி.பி 871 – 907 வரை என்பதே டாக்டர் மகாலிங்கம் என்பவரது கருத்தாகும்.[9]

**இசைச் சிற்பங்கள்**

நடராஜர் – வலது மேல்கையில் உடுக்கையுடன் காணப்படுகிறார்.

ஸ்ரீ சிவசக்தி – பிறையணியம்மன் சன்னதி நோக்கி நின்ற நிலையில் உள்ளார். இரு கைகளுடன் காணப்படுகிறார். அதில் ஒரு கை அபயகரமாகவும் ஒரு கை சங்கை ஏந்தியுள்ளதாகவும் காணப்படுகிறது.

**மகாபைரவர்**

சமபங்க ஆசனத்தில் தலையில் தீச்சுவாலையுடன் இடது கீழ்க்கை கபாலத்துடன் வலது மேல் கை உடுக்கையுடன் திகழ்கிறது.

வைஷ்ணவி – கருடவாகனமும் நீலநிறமும், ஆறு கரங்களுள் ஒரு கரம் சங்கு கொண்டு காணப்படுகிறது.

**ராஜகோபுரம்**

ஆடவல்லான், நாயன்மார்களுடன், ஒரு பெண் இசை மீட்டும் காட்சி காணப்படுகிறது.

திருஞானசம்பந்தர் கையில் பொற்றாளத்துடன் காணப்படுகின்றார்.

கௌமாரி – ஆறுமுகங்களுடன் பன்னிரு கரங்கள் கொண்டவளாக இடது பக்க கரம் ஒன்றில் மணி காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரண்டாம் பிரகார கோபுரம்**

விஷ்ணு, சிவன் சிற்பங்கள் உண்டு. புராண காட்சிகளை சித்திரித்துக் காட்டுகின்றன. விஷ்ணு சங்கு சக்கரதாரியாக காட்டப்பட்டுள்ளார்.

மூலஸ்தான விமானம் – வடபுறத்தில் நெடுங்குழல் வாசிக்கும் இசைக்கலைஞன் ஒருவனின் சிற்பம் அழகுற அமைந்துள்ளது.

**அடிக்குறிப்பு**

1. Michael Lockwood, **Mamallapuram**,p.11
2. கலைக்கோவன், இரா; **கோயில்களும் சிற்பங்களும்**, ப.98
3. தமிழ்நாடு பாட நூல் நிறுவன ஆசிரியர் குழு, **தமிழ்நாட்டு வரலாறு**, ப.349
4. மேலது, ப.409
5. வள்ளி சொக்கலிங்கம், **திருப்பத்தூர்**, ப.30
6. நளினி .மு; **கோயில்களும் சிற்பங்களும்**, ப.175
7. மேலது,175
8. கந்தசாமி. ப; **தமிழ்நாட்டின் தலவரலாறுகளும் பண்பாட்டுச் சின்னங்களும்**, ப.115
9. Mahalingam.T.V; **The Nageswaraswami Temple – Kumbakonam,** P.16


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் நான்கு

# இராஜராஜசோழன் தொடக்கம் மூன்றாம் குலோத்துங்கசோழன் கால இசைச் சிற்பங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சோழர் காலம்

"தஞ்சையில் மாபெரும் கோயிலைத் தோற்றுவித்த இராசராஜன் காலத்திலிருந்து ஒரு மாறுதலைக் காண்கின்றோம். இராசராசன் கருங்கல்லால் வானளாவும் கட்டடத்தை எழுப்பினான். அவனது கவனம் முழுவதும் கட்டடக்கலையின் முழு வீச்சையும் கொண்டுவருவதில் தலையாயதாக நின்றன. அவன் கட்டுவித்த கோபுரங்களையும், விமானங்களையும் ஏராளமான சிற்பங்கள் அலங்கரித்துள்ளன.

### தஞ்சாவூர்

சோழநாடு என்றும் சோழ மண்டலம் என்றும் அழைக்கப்பெற்ற ஒரு பரந்த நாட்டின் தலைநகரமாக விளங்கிய ஊரே தஞ்சையாகும். தண் + செய் என்பதே தஞ்சையாயிற்று. குளிர்ந்த நிலப்பரப்பு என்பதே இதன் பொருள். காவிரி நதியின் புதுப்புனலால் வளம் பெற்ற ஊர் என்பதால் (தண் + செய் + ஊர்) தஞ்சாவூராயிற்று.

இவ்வூர் பற்றிய தொன்மையான குறிப்புகள் திருச்சிராப்பள்ளி மலையுச்சியில் காணப்பெறும் பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணுவின் (கி.பி 555 – 590) கல்வெட்டிலும் திருநாவுக்கரசர் பாடிய திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்திலும் உள்ளன.

ஏறத்தாழ கி.பி 850 இல் விஜயாலய சோழன் முத்தரைய மன்னனை வென்று. தஞ்சையைக் கைப்பற்றி, சோழ நாட்டை தலைநகரமாக்கினான்.

விஜயாலய சோழன் தொடக்கம் ஆதித்தன் பராந்தகன், கண்டராதித்தன், அரிஞ்சயன், சுந்தரச்சோழன், ஆதித்த கரிகாலன், மதுராந்தக உத்தமசோழன், இராஜராஜன், இராஜேந்திரன் ஆகிய பெருமன்னர் காலம் வரை 176 ஆண்டுகள் தஞ்சை, சோழப் பேரரசின் தலைநகரமாக விளங்கிற்று. [1]

### இராஜராஜனின் பெருவெற்றிகள்

1. சேரமன்னன் பாஸ்கர ரவிவர்மனை வெற்றி கொண்டமை
2. வேங்கிநாடு எனும் கீழை சாளுக்கியர்களை வென்றமை. (ஆந்திர மாநிலம்)
3. இராஷ்டிர கூடர்களின் மைசூர் பகுதி
4. நுளம்பபாடி எனும் பெங்களூர்
5. பெல்லாரி பகுதிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. குடகுநாடு
7. சேரநாட்டுக் கொல்லம்
8. ஒரிசா மாநிலத்துக் கலிங்கம்
9. மகாராஷ்டிர மாநிலங்கள்
10. பாண்டிய நாடு
11. இலங்கை(ஈழம்)
12. அரபிக் கடலிலுள்ள லட்சத்தீவு, மாலைத்தீவு, தென்கிழக்காசிய நாடுகள் யாவும் இராஜராஜசோழனால் வெற்றி கொள்ளப்பட்டன.

**செல்வம்**

வெற்றிகொள்ளப்பட்ட நாடுகளிலிருந்து பெருஞ்செல்வம் குவிந்தது. மக்களுக்கு மன்னன் செல்வத்தை வாரி வாரி வழங்கினான். மக்கள் வாழ்க்கை அமைதியாக இருந்தது. ஆதலால் ஆலயங்களில் கவின்கலைகள் வளர்ந்தன.

**இராஜராஜனின் இறைபற்று**

தஞ்சையில் சிவபெருமானுக்கு கட்டிய கோயில் சாதாரணக் கோயில் அல்ல மிகப்பெரிய கோயில். படைபலத்தால் ஏற்படும் பெயர் என்றும் நின்று நிலவாது என்பதை அவன் உணர்ந்து இருக்க வேண்டும்.

இராஜராஜன் என்ற பெயரை இன்றளவும் நாம் நினைவில் கொண்டு பாராட்டுகின்றோம், அது அவன் அடைந்த வெற்றிகளை எண்ணியல்ல கீழ்த்திசை நாடுகளில் புலிக்கொடி நாட்டியதற்காகவல்ல லட்ச தீவுகளை வென்றதற்காகவல்ல. வெற்றிகள், யுத்தகளங்கள்,பெயரை என்றும் நிலைக்க வைக்காது என்பதால் பெரிய கோயிலைக் கட்டினான்.

பேராசிரியர் கல்கி அவர்களின் பொன்னியின் செல்வனைப் படித்தவர்கள் அருண்மொழி வர்மன் (இராஜராஜசோழனின் இயற்பெயர்) சோழ அரியனை ஏறிய வரலாற்றை அறிவர்.

இவன் வீரன் என்று நினைப்பதை விட சிவபெருமான் திருவடிகளை எப்போதும் நினைக்கும் குணமுடையவனாக இருந்திருக்கின்றான் என்பதே நினைவுக்கு வருகின்றது. இவன் சிவபாத சேகரன் என்ற பெயரையும் பெற்றிருக்கின்றான். உலகத்தில் சைவத்தின் பெருமையை நிலைநாட்டி அனைவரையும் (இன்றும், என்றும்) இறை நினைப்பில் ஆழ்த்தும் விதத்தில் பெரிய கோயிலைக் கட்டியுள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருங்கற்களே இல்லாத தஞ்சை பூமியில் கற்களாலான பெரிய கோயில் கட்டியது பொறியியல் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு, சிற்பக் கலை அற்புதத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. இவை என்றும் அவன் புகழ்பாடும்.

## 4.1 தஞ்சைப் பெருங்கோயில்

தஞ்சையில் உள்ள பெருங்கோயில் மிகப்பொருத்தமான முறையில் பெரியகோயில் என்றும் (பிருகத் ஈஸ்வரம்) முதலாம் இராஜராஜசோழ மன்னன் கட்டியதால் இராஜராஜேஸ்வரம் என்றும் அழைக்கப்படுகிறது. தமிழர்களின் சிற்ப, கட்டுமான கலை மரபில் உள்ள கட்டடக் கட்டுமானப்பணி, சிற்பம், ஓவியம் போன்ற அதனுடன் தொடர்புடைய எல்லாக் கலைகளிலும் ஒரு சேர ஒரே இடத்தில் சாதனைகளை இக்கோயில் நிகழ்த்தியுள்ளது.

அற்புதமாக வேலைப்பாடுமிக்க கடவுளரின் சிற்பங்கள் ஒவ்வொரு மாடத்திலும் இடம்பெற்றுள்ள புராணக் கதைத் தொடர்புடைய படிமங்கள் இருபக்கங்களிலும் அமையுமாறு சுருக்கமான குறிப்புக்களுடைய புடைப்புச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன.[2]

### சிற்பங்களில் இசைக்கருவிகள்

### கேரளாந்தகன் திருவாயில் (1வது கோபுரம்)

இராஜராஜன் கி.பி 988 இல் கேரள மன்னன் (சேர நாடு) பாஸ்கர ரவிவர்மனுடன் போர்தொடுத்து வெற்றி பெற்றதன் நினைவாகச் சூடிய கேரளாந்தகன் என்ற விருதுப் பெயரினையே இக்கோபுரத்திற்கு சூட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.[3]

கேரளாந்தகன் திருவாயில் ஐந்து அடுக்குகளுடன் கூடிய கோபுரமாகும். நான்கு அடி நீளம் 3அடி அகலம் 40 அடி உயரத்துடன் ஒரே கல்லில் ஆன இரண்டு நிலைக்கால்களைக் கொண்டுள்ளது. இக்கோபுரத்தில் காணப்பெறும் சுதை உருவங்களில் சோழர்காலச் சிற்பங்கள் உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகாசதாசிவமூர்த்தி**

ஐந்து தலைகள் பத்து கரங்களுடன் பத்மாசனத்தில் அமர்ந்துள்ள இவ்வுருவம் ஓர் அரிய சிற்பமாகும். சதாசிவ மூர்த்தி கரம் ஒன்றில் உடுக்கை காணப்படுகின்றது.

**பூதகணங்கள் (அதிஷ்டானப்பகுதி)**

ஒரு சிற்பத்தொகுதியில் நான்கு பூதங்கள் இசை வாசிப்பதில் மூழ்கியுள்ளன. இருவர் மத்தளம் கொட்டுகின்றனர். கருவியை இடது கைகளால் இருவரும் சேர்ந்து ஒலி எழுப்புகின்றனர். வலக் கைகளால் உற்சாகமாகத் தட்டுவதற்கு முனைகின்றனர். (இந்நிலையை கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம், திருபுவனம் கோயில்களிலும் காணலாம்.) இரண்டு பூத கணங்கள் தாளம் போடுகின்றன. (படம் – 1)

**இசை மீட்டும் பெண் (மேற்கு)**

யாழ் மீட்டும் ஒரு அழகிய பெண்ணை, மேற்குப்பகுதி கோபுரத்தில் காணலாம். (படம்–2)

**இராஜராஜன் திருவாயில் (2வது கோபுரம்)**

இக்கோபுரம் 40 அடி உயரமுள்ள இரண்டு ஒற்றைக்கல் மலைக்கால்களைக் கொண்டு விளங்குகின்றது. அதிஷ்டானத்தில் சிவபுராணக் கதைகளின் சிற்பத்தொகுப்புக்கள் உள்ளன. உமாமகேஸ்வரர் – பெரிய மகாநாசியில் மகேஸ்வரர் (சிவன்) உமையுடன் இருக்கும் சிற்பம் அற்புதப் படைப்பாகும். சிவன் உடுக்கை ஏந்தியுள்ளார். (படம் – 3)

**வீணை வாசிக்கும் அழகிய சிற்பம்**

தெற்குப்புறத்தில் அழகிய தேவ மகளிர் வீணையில் இலயித்துக் நிற்கின்றாள். அவளது அழகிய முகம் இசையில் அமைதிபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகசுரம் வாசிக்கும் பூதங்கள்

சிறிய நாகசுரக் கருவிகளை பூத கணங்கள் இசைகின்றன. இவ் நாகஸ்வர வடிவம் பிற்கால நாதஸ்வரத்தின் முன்னோடியாகவுள்ளது. (படம் – 4) தாளம், மத்தளம் ஆகிய கருவிகளை, நடனத்திற்கு இசைக்கும், சிற்பத் தொகுதியும் உண்டு. (படம் – 5) அழிந்து கொண்டிருக்கும் இச்சிற்பம் பாதுகாக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

## நந்தி மண்டபம்

16 கால் மண்டபத்தில் மிகப்பெரிய நந்தி உள்ளது. இது 19½ அடி நீளம் 8½ அடி அகலம் 12 அடி உயரம் உடையதான ஒரே கல்லில் வடிக்கப்பெற்றது. இந்த நந்தி மண்டபம் நாயக்கமன்னனர்களால் உருவாக்கப்பட்டது. தூண்களில்

1. ரிஷி ஒருவர் பறையொலி எழுப்புகின்றார் – முகம் சிதைந்துள்ளது. (படம் – 6)
2. ஆட்டத்துடன் பறையொலி எழுப்பும் ரிஷி (படம் – 7)
3. நடனமாது உடுக்கை போன்ற அமைப்புடையதான தாளக் கருவியுடன் (படம் –8) இவை அனைத்தும் அழகிய படைப்பாகும்.

**4. கருவறை** : 13 அடி உயரமுடைய லிங்கத்திருமேனி உண்டு. லிங்கத்தின் மேற்புறத்தில் உள்ள கற்சிற்பத்தில் சந்தியா தாண்டமூர்த்தி உடுக்கையுடன் ஆடும் ஆட்டம் கண்கொள்ளாக் காட்சியாகும்.

## தட்சிணமேரு எனும் ஸ்ரீ விமானம்

ஸ்ரீ இராஜராஜேஸ்வரமுடையார் எனும் பிரகதீசுவரப் பெருமான் கோயில் கொண்டு திகழும் நெடிதுயர்ந்த ஸ்ரீ விமானத்தின் பெயர் தட்சணமேரு.[2] தரையிலிருந்து 216 அடி உயரமுடையது. பீடம் முதல் ஸ்தூபித்தளம் (கலசம்) வரை கருங்கற்கொண்டு கட்டப்பெற்றது.

இராஜராஜசோழ மன்னனால் நிறுவப்பெற்ற கலசம் கோயிலில் உள்ள அவனுடைய கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளதற்கேற்ப செம்பால் உருவாக்கப்பட்டு அதன் மேல் பொன் முலாம் பூசப் பெற்றதாகும்.[4]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விமானம் (தெற்கு)**

நடராஜர் - தண்ணுமைக் கருவியிசைக்கு ஆடவர் உற்சாகமாக ஆடும் சிற்பக் காட்சி காணப்படுகிறது. ஆடல் சிற்பத் தொகுதியில் வீணை வாசிக்கின்றனர். காரைக்காலம்மையார் தாளம் ஒலிக்கின்றார். (படம் - 9)

**வீணாதர தட்சணாமூர்த்தி**

வீணையை ஏந்தி ஆடல் புரியும் நிலையில் சிவனார் காணப்படுகின்றார்.

**மேற்கு**

சங்குடன் விஷ்ணு காணப்படுகின்றார்.

**வடக்கு**

**சங்கு ஊதும் பூதம்**

அதிஷ்டானத்தின், வடக்கு பக்கத்தில் மைய உச்சிப்பகுதியில், கருவறையின் தளத்திலிருந்து ஓடிவரும் அபிஷேக நீரை வெளியேற்றுவதற்காக, பெரிய அளவிலான நீர் வெளியேற்றுத் தூம்பு நீட்டிக் கொண்டுள்ளது. இரண்டு சுவர்களின் அடிப்பகுதிகள் வழியேயும், இடையில் உள்ள சாந்தார நடைபாதை வழியேயும் உபபீட மேடையின் மீது, சங்கு ஊதிய வண்ணம் அமர்ந்த நிலையில் உள்ள பூதகணம் ஒன்றின் தலையின் மீது, அந்த பெரிய பிரநாளம் ( நீர்த்தூம்பு) அமைந்துள்ளது. (படம் -10)

**சண்டீகேசுவரர் ஆலயம்**

கோயிலின் மாளிகைக் காவலரான சண்டீகேஸ்வரருக்குரிய, சதுர விமானம் அமைக்கப்பட்டுள்ளது. உலகிலே இதுவே மிகப்பெரிய சண்டிகேஸ்வர ஆலயமாகும். இக்கோயிலின் அதிஷ்டானப் பகுதியில் தெற்குப் புறத்தில் ஆடல் மகளிர் ஒருவருக்கு, மத்தளம் ஒலிப்பவரும், தாள ஒலி எழுப்புவரும் தங்களை மறந்த நிலையில் இசை எழுப்புகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சிற்பங்களின் முகங்கள் சிதைந்துள்ளன. (படம் 11) பூதங்களில் இருவர் மத்தளம் கொட்ட, இருவர் தாளம் போடுகின்றனர். இதே கருவியிசையினை தெற்கு புற வெளியேறும் வாசல் பகுதிகளிலும் காணமுடிகின்றது.

சண்டிகேஸ்சுவர் திருமுன் படிக்கட்டில் ஒரு பெண், இடக்கை எனும் இசைக் கருவியைக் கொண்டு இசைக்கின்றார். இவ் இடக்கையை தோளில் தொங்க விட்டு வலக்கையினால் இசைக்கும் விதத்தில் காணப்படுவது இக் கோயிலின் சிறப்பாகும். (படம் – 12)

## முருகன் கோயில்

பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் காணப்பெறும் முருகன் கோயில் பிற்காலத்தைச் சேர்ந்தது. மிகச் சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட தூண்கள் காணப்படுகின்றன. இரண்டு ரிஷிகள் (தோற்கருவி) இறைவனுக்கு ஆடிக்கொண்டே பறையொலி இசைக்கின்றனர். (படம் – 13) விமானத்தின் பூதகணம் ஒன்று சங்கினை முழங்குகின்றது. (படம் – 14)

## பெரிய அம்மன் சந்நிதி

தெற்கு நோக்கிய அம்மன் கோயில் (பிருகந்நாயகி) 14ம் நூற்றாண்டில் கட்டப்பெற்றது. இசைக்கருவிச் சிற்பங்கள் பல உண்டு.

1. காலாந்தகர் வடிவத்தில் எட்டுக்கரங்களில் ஒன்றில் மணி
2. நீளமான சங்கினை முழங்கும் பூதம் (படம் – 15)
3. வீணையிசை வழங்கும் தேவ மகளிர் (படம் – 16)

புடைப்புச் சிற்பங்களாக பெரிய நாயகி அம்மனுக்கு இசை முழக்கம் செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாசனங்கள்

உண்மைகளை உள்ளவாறே புலப்படுத்திக் காட்டும் சிறந்த சாதனங்கள் சாசனங்கள். சோழமன்னர்கள் தங்கள் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற நிகழ்வுகளைக் கோயில் கற்சுவரிலும், படியிலும், தூணிலும், கற்பாறைகளிலும் செப்புத்தகட்டிலும் பொறித்துள்ளார்கள்.

## சாசன வரிகள்

1. குழல் இசைக்க மூவரும் (வரி 415 – 417)
2. உடுக்கை வாசிக்க இருவரும் (வரி 422 – 423)
3. கொட்டி மத்தளம் இசைக்க இருவரும் ( வரி 431– 432)
4. வீணை இசைக்க மூவரும் (வரி 424 – 425)
5. முத்திரைச் சங்கு ஒத மூவரும் (வரி 433 – 435)
6. பக்கவாத்தியம் இசைக்க ஐவரும் (வரி 436 – 440)

மேற்கூறிய யாவரும் ராஜராஜ சோழ மன்னனிடம் நிவந்தம் பெற்று சேவை செய்ததாக இக் கோயில் கல்வெட்டு எடுத்தியம்புகின்றது.

மாமன்னன் இராஜராஜன் காலத்தில் திரு எருக்கத்தம்புலியூரில் வாழ்ந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் பரம்பரையில் வந்த பெண்மணி ஒருவரால் பதிகங்களுக்குப் பண்ணடைவு வகுக்கப்பட்டன. தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் பதிகப் பண்களை முறையாகப்பாடுவதற்கு பிடாரர் (ஓதவார்கள்) நாற்பத்தெண்மரோடு உடுக்கை வாசிக்க ஒருவனும் கொட்டி மத்தளம் வாசிக்க ஒருவனுமாக ஐம்பதின்மருக்கு நிவந்தங்கள் வழங்கித் தேவாரப் பாடல்களும் பண்ணிசை முறையும் சீராகக் காக்கப்பட்டன என்பதைக் கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தஞ்சாவூர் பெரிய கோயில் அருங்காட்சியகச் சிற்பம்

நீண்ட பெரிய வீணையை முழங்கால்களை மடக்கி நின்று வாசிக்கும் சிற்பம் அற்புதமானது. இது வித்தியாசமான வேறு எங்கும் காண முடியாதவாறு காணப்படுகின்றது. வீணையின் தண்டின் முடிவு பாம்பின் தலை போன்றுள்ளது.

### இலண்டன் அருங்காட்சியகச் சிற்பம்

சோழருடைய சிவன், பார்வதி அழகிய புடைப்புச் சிற்பத் தொகுதி ஒன்று இங்கு உண்டு. இறைவன், இறைவியைச் சூழ்ந்து கின்னர்கள், தேவ மகளிர், தேவ கணங்கள் சூழ்ந்து பல்வேறு இசைக்கருவிகளை முழங்குகின்றன. (www.wikipedia.com)

### 4.2. கங்கைகொண்ட சோழீஸ்வரம்

பெருமைமிக்க தந்தையின் திறமைமிக்க மைந்தனாக கி.பி. 1012 முதல் 1044 வரை நல்லாட்சி புரிந்தவன் முதலாம் இராசேந்திரன். இவன் தாய் வானவன் மாதேவி என்னும் திருபுவனமாதேவி ஆவாள். இம் மன்னன் மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளாம் திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவனென்று கல்வெட்டு குறிப்பிடுகிறது. மதுராந்தகன் என்பது இவன் இயற்பெயர். பழையாறை என்னும் முடிகொண்ட சோழபுரத்தில் முடி சூட்டப்பெற்ற அந்நாள் முதற்கொண்டு இராசேந்திரன் என்ற அபிஷேகப் பெயர் வழங்கலாயிற்று.

### வேறு பெயர்கள்

பரகேசரி, உத்தமசோழன், பண்டிதசோழன், கங்கை கொண்ட சோழன், விக்கிரமசோழன், முடிகொண்ட சோழன், சோழேந்திர சிம்மன், கடாரங்கொண்டான், பஞ்சவன் மாராயன் முதலிய பல்வேறு சிறப்புப் பெயர்களும் உண்டு. பேரழகு வாய்ந்த இவனை சிவபெருமான் நெற்றிக்கண் காணாத மற்றுமோர் மன்மதன் என்று திருவாலங்காட்டுச் செப்பேடு தெரிவிக்கின்றது.[5]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடநாட்டுப்போர்

வடநாட்டுப் படையெடுப்பே இப்பேரரசனின் வெற்றிப் பெருமிதத்தை திக்கெட்டும் பாறைசாற்றுவதாக அமைந்து இருக்கிறது.

## கோயிலின் அமைப்பு

கங்கை கொண்ட சோழேச்சரம் என்னும் பெரிய இக்கோயில் ஊரின் நடுவே கிழக்கு நோக்கி ஆறு ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இரண்டு நுழைவாயில்கள் உண்டு. திருச்சி – சிதம்பரம் சாலையிலிருக்கும் வடக்கு வாயிலும், மொட்டைக் கோபுரமாக காட்சி அளிக்கும் கிழக்கு வாயிலும் உள்'ளே செல்லும் இரு வழியாகும்.

இவ்வாயிலைத் தாண்டி நாம் உள்ளே வந்தால், பரந்த புல்வெளி கொண்ட 584 அடி நீளமும், 372 அடி அகலமும் கொண்ட வெளிப்பிரகாரம் தெரிகின்றது. இதன் கனம் 4 அடி ஆகும். இத்திரு மதிலை ஒட்டிய இரண்டு நிலைகளைக் கொண்ட திருச்சுற்று மாளிகையில் எஞ்சிய ஒரு பகுதியே வடக்கு வாயிலாக இப்பொழுது காணப்படுகின்றது.

## மகாமண்டபம்

பிரதான கோயிலுக்குச் செல்ல தெற்கிலும், வடக்கிலும் படிக்கட்டுகள் உள்ளன. வாயிலை அடுத்து உள்ளே சென்றால் நீண்டு செல்லும் மகாமண்டபத்தைக் காணலாம். இம்மகாமண்டபத்தின் அதிட்டானம் (Basement) பழமையானது. 153 கற்றூண்களைக்கொண்டு 175 அடி நீளமும் 95 அடி அகலமும் கொண்டு மகாமண்டபம் விளங்குகின்றது.

## விமானம்

8 அடுக்குகளை உடையது. 180 அடி உயரமுடையது.

## கருவறை

மூலமூர்த்தி சிவலிங்கம். பெருவுடையார் ஒரே கல்லால் ஆனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஏனைய சந்நிதிகள்

சுப்பிரமணிய சந்நிதி, விநாயகர் சந்நிதி, தென்கைலாயம், துர்க்கையம்மன் சந்நிதி, பிரகன் அம்மன் சந்நிதி, சண்டேஸ்வரர் சந்நிதி என்பன அழகிய சிற்பங்களைக்கொண்டு காணப்படுகின்றன.

### சிற்பங்களில் இசைக்கருவிகள்

இக்கோயிலில் இசைக் கருவிகளைத் தாங்கி, வாத்தியங்கள் வாசிப்பது போன்ற பல சிற்பங்கள் காணப்படுகின்றன. இராசேந்திரன் காலத்தில் இசை, நாடகம். நடனம் போன்ற கலைகள் வளர்ந்துள்ளன என்பதும் அதற்கு பல இசைக் கருவிகள் உபயோகத்திலிருந்தமையும் பல இசைக்கருவிச் சிற்பங்கள் சான்றாக உள்ளன.

இராமாயணம், மகாபாரதம், புராணங்கள், இந்துமதத்தில் சிறந்த இலக்கியப்படைப்பாக கருதி மக்கள் மத்தியில் அதனை போதித்து இருக்கின்றனர். அதனை தெளிவுபடுத்தும் வகையில் சிற்பங்கள் சிற்பசாத்திரங்களுக்கு அமைய காணப்படுகின்றது.

### விமானம்

இங்குள்ள விமானம் தஞ்சைப் பெருங்கோயிலைப்போல நிழல் பூமியில் விழாதவாறு இருத்தப்பெற்றுள்ளது. தஞ்சைப் பெரிய கோயிலில் விமானம் ஆண்மையின் கம்பீரமாக காணப்பட்டால் கங்கை கொண்ட சோழீஸ்வர விமானம் சற்றே சாய்ந்த நிலையில் (பெண்மையின்) பெண்மை மிளிர்கின்ற வகையில் கட்டடமும், சிற்பங்களும் உள்ளன.

### பூதகணங்கள்

விமானத்தின் நான்கு பகுதிகளிலும் பூதகணங்கள் பல்வேறு இசைக்கருவிகளுடன் பல்வேறு செயற்பாடுகளில் தொடராக இடைவெளியில்லாமல் இயங்குமாறு அமைக்கப்பட்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் விமானத் தொடர்ச் சிற்பங்கள் செதுக்கப்பட்ட காலத்து வரலாற்று விடிவிளக்காய் அமைந்துள்ளது. கோயில் பிரகாரத்தின் மேல் பகுதிகளைத் தாங்கும் பூத கணங்கள் பல்வேறு வகையான மத்தளங்கள், ஊது கொம்புகள், குழல்கள், தாளங்கள், ஒருமுக முழவுகள், சங்குகள் போன்ற இன்னோரன்ன இசைக்கருவிகளை இசைக்கின்றன.

கோயிலில் ஒவ்வொரு கணமும் தெய்வீக உணர்வுதான் குறிக்கோளாக மேலோங்கி இருக்க வேண்டும் என்பதை இப்பூத கணங்கள் உணர்த்துகின்றன போலும்.

### தெற்கு விமானம்

### ஆடவல்லானும் இசைக்கருவிகளும்

கருவறையின் தெற்குப் புறச் சுவரிலே விமானத்தில் ஆடவல்லானின் அபூர்வ சிற்பம் தனிப்பண்புகளைக் கொண்டது. ஆடவல்லான் தாண்டவத்தைக் கண்டுகளிக்க விநாயகரும் முருகனும் தம்தம் வாகனங்களில் வந்திறங்கி உள்ளனர். அண்ணல் ஆடும் ஆனந்த தாண்டவத்தை காளையின் மீது சாய்ந்த நிலையில் ஆனந்தமாக ரசித்துக்கொண்டேயிருக்கின்றாள் பார்வதி. பக்கத்தில் காளியும் ஆடுகின்றாள். காலடியில் கணங்களும் ஆடுகின்றன. பிருங்கி முனிவர் தாண்டவக் கோலத்தை வியப்புடன் ரசிக்கின்றார். கின்னரர், காந்தவரும் பறந்து வந்து கொண்டிருக்கின்றனர் ஆடலைக்காண. இவ் ஆட்டத்திற்கு நந்தி குடமுழாவாசிக்கின்றார். காரைக்காலம்மையார் நடராஜனின் அடியில் இருந்து எலும்புருவான தனது கோலத்துடன் பக்தியாக இருகைகளினாலும் உள்ள தாளத்தைக் கொட்டி ஐயனைக் காண்பதையே வாழ்வின் லட்சியமாகக் கொண்டிருக்கின்றார். ( படம் - 17) 2ம் தளத்தில் உடுக்கையுடன் நடராஜர் நடனமாடுகின்றார்.

### காரைக்காலம்மையாரும் சேக்கிழாரும்

சோழர் சபையில் அமைச்சராகப் பணியாற்றிய சேக்கிழார் பெருமான் தினம் ஆலய தரிசனத்திற்கு வந்தபோது தாளத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைக்காலம்மையார் இருக்கும் சிற்பத்தைக் கண்டு. மெய்மறந்திருக்க வேண்டும் என நினைத்து, தனது பெரிய புராணத்தில் பாடும்போது,

"இறைவா நீ ஆடும் போது
உன் அடியின் கீழிருக்க.."

என்று கயிலையங்கிரியில் சிவபெருமானிடம் அம்மையார் வேண்டிக் கொண்டதாக குறிப்பிட்டிருக்க வேண்டும் என்று தொல்பொருள் ஆய்வாளர் டாக்டர் நாகசாமி கருத்துத் தெரிவிக்கிறார்.

### வீணா கானம்

மகாநாசியில், தட்சிணாமூர்த்தி வீணையை கையிலேந்தி வாசித்துக் கொண்டிருக்கிறார். பக்கத்தில் நான்கு முனிவர்கள் இறைவன் இசை கானத்தை அள்ளிப் பருகுகின்றனர். 2வது தளத்திலும் தட்சிணாமூர்த்தி வீணையுடன் காணப்படுகிறார்.

### விஷ்ணு

சங்குடன் விஷ்ணு காணப்படுகின்றார். விஷ்ணுவிற்கு கீழ் உள்ள பூத கணங்கள் சங்கை ஒலிக்கச் செய்கின்றன.

### துர்க்கை

துர்க்கையின் எட்டுக் கைகளில் ஒன்று உடைந்துள்ளது. ஒரு கையில் சங்கு உள்ளது.

### பிச்சாடனார்

இறைவன் ஒரு கையில் உடுக்குடன் விளங்குகின்றார். கோஷ்டத்தின் கீழ் ஒரு பூதகணம் சங்கினை முழங்க இன்னொரு பூதகணம் குழலூதுகின்றது. மூன்று கணங்கள் இசைக்கு ஆட்டம் போடுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விநாயகர் சிற்பம்**

தெற்கு கோஷ்டமொன்றில் நடனவிநாயகர் சிற்பம் ஒன்றுண்டு. விநாயகர் நடத்திற்கு பூதகணங்களுள் ஒன்று சங்கு ஊத, ஒரு கணம் தாளம் போட இன்னொரு கணம் விநாயகரின் ஆட்டத்துடன் ஆடுவதில் ஈடுபட்டுள்ளது. ( படம் – 18)

**சிறப்பு**

நடன விநாயகர் சிற்பம் தட்டி ஒலியெழுப்பும் போது "ஸ்வரங்கள்" பிறக்கின்றன என்பதை கண்டு பிடித்துள்ளனர் இன்றைய ஆராய்ச்சியாளர்கள். ஆதலால் நடன விநாயகர் சிற்பம் இரும்புக்கம்பியினால் பாதுகாக்கப்பட்டுள்ளது.

ஏழு நடனமாடும் பெண்கள் இசைக்கருவிகளுடன் உள்ளனர். வயிற்றிற்கும் இடது முழங்கையின் இடையில் இடுக்கையை வைத்து வலக்கை விரல்களால் இருவர் தாளவாத்தியத்தை (பறை போன்ற ஒரு வாத்தியத்தை) வாசிக்கின்றனர். இருவர் மத்தளம் கொட்டுகின்றனர். இதில் ஒரு பெண் இருகைகளாலும் தட்டி ஒலி எழுப்ப மற்றொரு பெண் இடக்கையால் மத்தளத்தை பிடித்து வலக்கையால் தட்டுகின்றாள். (படம் – 19)

**மேற்கு விமானம்**

முதல் தளத்தில் கங்காதரமூர்த்தியை சுற்றி பலவித இசைக்கருவிகளை வாசிக்கின்றன பூதகணங்கள்.

**விஷ்ணு**

ஸ்ரீதேவி, பூதேவியுடன் விஷ்ணு சங்கை வைத்துக்கொண்டிருக்கின்றார்

**மூன்றாம் தளம்**

சிறிய நாசி கோஷ்டத்தில் கண்ணன் குழலை ஊதி ஆன்மாக்களைப் பரவசப்படுத்துகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு கோபுரம்

விமானத்தின் மூன்றாவது கோஷ்டத்தில் யானையில் ஆறுமுகன் வருவதாக காட்டப்பட்டுள்ளது. ஒரு கையில் மணி ஒலித்துக்கொண்டிருக்கின்றது. கோமுகையை தாங்கும் சிவகணம் நீளமான சங்கினை ஒலித்துக்கொண்டிருக்கிறது.

## பதினாறுகையுடைய துர்க்கை

மூன்றாவது தளத்தில் பதினாறு கைகளையுடைய துர்க்கையின் ஒரு கையில் சங்கு, மணி காணப்படுகின்றது.

## ஆதிவராக மூர்த்தி

ஆதிவராக மூர்த்தி சங்குடன் காணப்படுகின்றார்.

## ஞானசரஸ்வதி

கருவறையிலிருந்து வடக்கு நோக்கி வெளியேறும் வாசலுக்கு வலப்பக்கத்தே காணப்படும் ஞான சரஸ்வதியின் ஒரு கையில் மணி உள்ளது. ஞான சரஸ்வதியின் கீழ் இசைக்கருவிகளை முழங்கிக் கொண்டிருக்கின்றனர் மகளிர் இருவர். அழியாத நிலையில் இசைக்கருவிகள் காணப்படுகின்றது.

## பெரியநாயகி (பிரகன்) அம்மன் சன்னதி

வெளிச் சுற்று அடித்தளத்தில் இசைக்கருவிகளுடன் ஆடல் சிற்பங்கள், தொகுதி தொகுதியாக உள்ளன. துல்லியமாக தெரியும் இசைக்கருவிகள் காணப்படுகின்றன. சில இசைக்கருவிகள் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. சில இசைக்கருவிகள் அழிந்து கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்க்கையம்மன் சந்நிதி

வெளிப்புற சுவர் முழுக்க இசைக்கருவிகளுடனான ஆடல்மகளிருக்கு இசைக்கருவிகள் இசைக்கும் சிற்பங்கள் நிறைய உள்ளன. சில சிற்பங்களில் உள்ள இசைக்கருவிகள் தெளிவாக தெரியும் வண்ணம் காணப்படுகின்றன. மத்தளம், குழல், ஒருமுக முழவு, சங்கு, பறை முதலான பல இசைக்கருவிகள் உள்ளன. அநேகமான இசைக்கருவிச் சிற்பங்கள் அழிந்த நிலையில் உள்ளன.

## தென்கைலாயம்

பிள்ளையாரை சுற்றி, தலையில் மத்தளத்தை வைத்து ஆடும் பூதகணத்தைக் காணலாம். இதே போல் நடராஜர் ஆட்டத்திற்கு இசைக்கருவிகளைத் கொட்டும், பூதகணங்களைக் காணலாம். தட்சிணாமூர்த்திக்கு இடப்புறத்தில் மகளிர் தண்ணுமை, தாளம், பறை போன்றவற்றை இசைக்கின்றனர்.

## மேற்கு

சுற்றுச்சுவர் அடித்தளத்தில் பல இசைக் கருவிகள் உள்ளன. இசைக்கருவிகளுடனான ஆடற்சிற்பங்கள் அழிந்த நிலையில் காணப்படுகின்றன.

## முகமண்டபம்

பெரிய நந்தியை அடுத்து உள்ள முகமண்டபத்திலுள்ள சிறிய நந்தியின் இடதுபுறம் மங்கையர் அறுவர் இசைக்கருவிகளோடு நடனமாடுகின்றனர். (படம் - 20)

தெற்குப் பகுதியில் உள்ள இசைக்கருவிச் சிற்பதொகுதி அழிந்து கொண்டிருக்கின்றன. (படம் - 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மகாமண்டபம் (தூண் மண்டபம்)

ஏழாவது தூணில் (வலப்புறம்) ஒரு பெண் வீணை வாசிக்கின்றாள். இப்பெண்ணின் பாதங்கள் கண்ணன் குழலூதும் நிலையில் காணப்படுகின்றன. இப்பெண் வீணையுடன் நின்ற கோலத்தில் தன்னை மறந்து வாசிக்கின்றாள். இந்த பெண் தேவலோக மகளிராக இருக்கலாம்.

### 10 வது தூண் (வலதுபுறம்)

பாம்பாட்டியின் மகுடி இசைக்கு மயங்கிய பாம்பு தன் தலையை மேலே தூக்கி ஆடுகின்றது.

### 7 வது தூண் (இடதுபுறம்)

மத்தளம் கொட்டும் தெய்வ மகளிர் இறைவனுக்கு உபச்சாரம் செய்கின்றாள்.

### கருவறை (மேற்கு நோக்கிய சிற்பங்கள்)

கருவறைக்கு உள்ளே உள்ள அர்த்த மண்டபத்தில் (கருவறையில் உள்ள இறைவனை நோக்கிய வண்ணம்) சுவரில் பல புடைப்புச் சிற்பத் தொகுதிகள் காணப்படுகின்றன.

ஒரு சிற்பத்தொகுதியில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமணம் நடக்கின்றது. அதற்கு பூத கணங்கள் சங்கு, மத்தளம் கொண்டு இன்னிசை ஒலிக்கின்றன. கருவறையை நோக்கி இறைவனுக்கு இன்னுமொரு தொகுதியில் சங்கு, மத்தளம், பறை, யாழ் இசைத்துக்கொண்டிருக்கின்றன பூதகணங்கள்.

### பறை

"பறையொடு.............................. ஆடினான் காண்"[6]

"படுவெண் துடியும் பறையும் கறங்கப் பரமன் ஆடுமே......"[7]

எனும் பாடல்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்ப இங்கு பறை ஆடலுக்கு ஏற்ற தாளக்கருவியாக பயன்பட்டது தெரிகின்றது.

### இராவணனும் கயிலை மலையும்

இராவணன் கைலைமலையை பெயர்க்கின்றான். அங்கே இறைவன், இறைவி வீற்றிருக்கின்றனர். நடனம் ஆடுகின்றனர் சிலர். சிலர் இசைக்கருவிகளை முழுங்குகின்றனர். சாமகானம் பாடி இறைவனை வசப்படுத்துவதற்கு முன் நடைபெற்ற நிகழ்ச்சிகளை இச் சிற்பத்தொகுதி எமக்கு விளக்கி நிற்கின்றன.

### அர்ச்சுனன் தவம்

அர்ச்சுனன் ஒற்றைக் காலில் நின்று தவம் செய்கின்றான். இதற்கு கீழ் உள்ள பூத கணங்கள் சங்கை முழங்குகின்றன.

### கருவறை முன் உள்ள மேற்தளம் (கிழக்கு நோக்கி)

கருவறை மேற்தளத்தில் இசைக்கருவிகள் அதிகமாக காணப்படுகின்றன. மங்கையர் நடனத்திற்கு சில மகளிர் இசைக்கருவிகளை இசைத்துக்கொண்டிருக்கின்றனர். அதாவது மத்தளம், உடுக்கை, பறை போன்ற தாளக்கருவிகள் கருவறையின் இருபுறமும் உள்ளன.

### நவரக்கிரக பீடம்

மகாமண்டபத்தின் வடகிழக்கு மூலையில் அமைந்திருக்கின்றது. இது சதுரமான பீடம் ஒன்றில் அமைந்த தாமரை மலரின் தோற்றம் கொண்டது. மேல் தளத்தில் எண்திசைகளையும் நோக்கிய எட்டுக் கிரகங்களின் மூர்த்தங்கள் உள்ளன. அடித்தளமானது ஏழு குதிரைகள் இழுத்துச் செல்லும் இரதம் போல உருவாக்கப்பெற்றுள்ளது. உலகத்தில் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட நவகிரக பீடம் அமைந்துள்ள சிறப்பு கங்கைகொண்ட சோழிச்வரத்தையே சாரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான சிறப்பினைக் கொண்ட பீடத்தை சுற்றிலும் சங்கு வாசிக்கும் பூதங்கள் தாங்கிக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## சுப்பிரமணியர் சந்திதியில் திருஞானசம்பந்தர்

இச்சந்நிதி மகாமண்டபத்தில் உள்ளது. வள்ளி, தெய்வயானையுடன் ஆறுமுகப்பெருமான், மயிலுடன் நின்ற கோலத்தில் காணப்படுகின்றார். இங்கு ஆறுமுகப் பெருமான் அருகில் ஞானசம்பந்தரைக் காணலாம். சின்னஞ்சிறு பாலகன் வடிவில் பொற்றாளம் பொருந்திய திருக்கரங்களால், சீர்காழியில் மூன்று வயது குழந்தையாய் அன்னையின் ஞானப்பால் அருள்ஞானம் பெற்ற அற்புதத்தோற்றம் உள்ளது.

## திருஞானசம்பந்தர் பெற்றாளம் பெற்ற வரலாறு

சம்பந்தர் திருக்கோலக்காவை அடைந்தார். "மடையில் வாளை பாய மாதரார்" என்ற பதிகத்தைக் கைகளினால் தாளம் போட்டுக்கொண்டு பாடும் பொழுது குழந்தை கைவலிக்கத் தாளம் போடுவதைக் கண்ட இறைவனார் மனம் கசிந்துருகினார் போலும். பொற்றாளம் ஒன்று இறையருளால் சம்பந்தப்பெருமான் கரங்களில் வந்தது. அதில் பஞ்சாட்சரமந்திரம் எழுதப்பட்டிருந்தது. பொன்னாலாகிய அத்தாளத்திற்கு ஓசை கொடுத்தாள் திருக்கோலக்காவில் உள்ள ஓசை கொடுத்த அம்பிகை. அதிலிருந்து ஓசை கொடுத்த நாயகியானாள். அத்தாளத்தைக் தட்டிக்கொண்டு பாடுவதைக்கேட்ட தும்புரு, நாரதர் போன்ற விண்ணகத்தார் இசைவாணர்கள் மலர்மாரி பொழிந்தனராம். இந்நிகழ்ச்சியை பின்னாளில் சுந்தரர்,

"நாளும் இன்னிசை யால் தமிழ் பரம்பும்
ஞானசம்பந்த னுக்குல கவர் முன்
தாளம் ஈந்தவன் பாடலுக் கிரங்கும்
தன்மையாளனை....."

என திருக்கோலக்கா பதிகத்தில் குறிப்பிடுகின்றார். இதனை நினைவூட்டுகின்றது தாளத்துடன் இருக்கும் சம்பந்தப் பெருமான் திருமேனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நந்தி

மூலவரின் சந்நிதிக்கெதிரே 15 அடி நீளமும் 8 அடி அகலமும் 11 அடி உயரமும் உடையதாய் கருங்கற்களால் கட்டப்பெற்று சுதை வேலைப்பாடு கொண்ட பிரமாண்டமான தோற்றத்தோடு விளங்கும் நந்தியின் கழுத்தைச் சுற்றி இன்னிசை தரும் மணிகள் கயிற்றில் கோர்க்கப்பட்டு அழகாக தொங்கிக் கொண்டிருக்கின்றன. (படம் – 22)

## 4.3 தாராசுரம் இராஜராஜ சோழீஸ்வரம் (ஐராவதேசுவரர் கோயில்)

தமிழக வரலாற்றில் பழங்கால பழமையுடைய பெருநகரமாகவும் பிற்காலச் சோழப் பேரரசின் தலைநகரமாகவும் விளங்கிய பழையாறை என்கின்ற மாநகரின் ஒரு பகுதியாக விளங்கியது இன்றைய தாராசுரம் ஆகும். பல கோடிச் சிற்பங்கள் கொண்ட பெருங் கோயிலாகவும், கல்லெல்லாம் கதை சொல்லும் கலைக் கோயிலாகவும், சிற்பக் களஞ்சியமாகவும் தாராசுரம் கோயில் உள்ளது. இக் கோயில் கும்பகோணத்திலிருந்து மேற்கே 2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

## இரண்டாம் ராஜராஜசோழன்

இரண்டாம் ராஜராஜசோழ மன்னனால் (கி.பி 1146 – 1173) கட்டப்பட்ட இராஜராஜசோழீஸ்வரம்[8] எனப்படும் ஐராவதேசுவரர் கோயில் (தஞ்சை மாவட்டம்) பிற்காலச் சோழர்கள் உருவாக்கிய முழுவதும் கல்லாலான, விமானங்களை உடைய, அளவில் பெரிய கோயில் ஆகும். இவை கி.பி.13ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பிற்காலப் பாண்டியர்களால் சோழர்கள் ஆட்சியிலிருந்து அகற்றப்படுவதற்கு முன்னர் கட்டப்பட்டவை ஆகும். சிற்பங்கள் இல்லாத இடமே இல்லை என்ற அளவிற்கு இரண்டாம் இராஜராஜனின் கலை ஆர்வத்தை புலப்படுத்தி, பிருகதீஸ்வரர் கோயில் விமானங்களை விடவும் அளவில் சிறியனவையாக இருந்த போதிலும் சாளுக்கிய ராஷ்ரகூடர் தாக்குதலினால், சில புதுமைகளை வெளிப்படுத்தி, வடிவமைப்பில் சில வேறுபாடுகளைக் கொண்டு நிற்கின்றன.[9]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயில் அமைப்பு

இக் கோயில் 23 மீட்டர் அகலமும் 63 மீட்டர் நீளமும் கொண்டவையாகும். இத் திருக்கோயில் முன்மண்டபம், மன்னரின் சிறப்புப் பெயரைத் தாங்கி "இராச கம்பீரன் திரு மண்டபம்" என்றழைக்கப்படுகிறது. இராச கம்பீரன் திருமண்டபம், இரத வடிவில் காணப்படுவதால் இரத மண்டபம் எனவும் அழைக்கப்படுகிறது. முதற் குலோத்துங்கன் ஆட்சிக்காலத்து மேலைக் கடம்பூர் ஆலய விமான இரதம் போன்ற தோற்றம் கொண்டது, சோழர் காலத்திலிருந்த இத்தகு இரதம் போன்ற அமைப்பு முறை விசயநகர மன்னர் காலத்தில் உதித்த ஆயிரங்கால் மண்டபத்திற்கு முன்னோடி எனலாம்.[10] நூற்றுக்கால் அமைத்த பெருமை சோழருக்குத்தான் உண்டு.

தாராசுரத்து இராஜராசேச்சுரம் தென் இந்திய கட்டக்கலை வரலாறு மட்டுமல்ல சிற்பக்கலை வரலாற்றிலும் ஒரு சகாப்தத்தின் தொடக்கமாய் இருப்பது குறிப்பிடத்தக்கது.

திருக்கோயிலின் முகப்புத் தோற்றத்தில் காணப்படும் இரதகோபுரம் கம்பீரத் தோற்றத்துடன் திகழ்கிறது. இதில் இடம்பெற்றுள்ள சிற்பங்கள், புராண நிகழ்வுகளை நிலை நிறுத்துகிறது. இக் கோபுரத்தை ஒட்டியே சுற்றுச் சுவரும், திருச்சுற்று மாளிகையும் இடம் பெற்றுள்ளன.

## கலைகள்

இசைச் சிற்பங்கள் இங்குள்ள மண்டபத்தூண்கள், கோயிற் கருவறை வெளிப்புற அதிஷ்டானம், சுற்றுப்பிரகார மதில் உட்புற அதிஷ்டானம் என்பனவற்றில் எண்ணிறைந்த இசைக்கருவிச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

இவ்விசைக்கருவிகளின் துல்லிய வடிவங்கள், அதனோடு தொடர்புடைய வரலாற்றுக்கதைகள், தத்துவ சமூக சிந்தனைகளுக்கு பெருவிருந்தாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கோயிலின் சிறப்பம்சங்கள்

இக்கோயில் பிருகதீஸ்வரர் அமைப்பை அப்படியே ஒத்துள்ளதெனினும் அளவிற் சிறியது, இருந்தாலும் மாடங்களிலுள்ள சிற்பங்கள் முழுமை உடையதாகவும் பருமனாகவும் மிக்க அழகுடன் உள்ளன. ஐந்து தள விமானத்தின் சுவர், பத்ர, கர்ண பகுதிகளிலும் சிற்பங்களுடன் கூடிய தேவகோட்டங்களையும் கொண்டுள்ளது. சிற்பங்களால் இழைக்கப்பட்ட ஒரே சோழர் கோயில் என இதைக் கூறலாம்.

### கருவறை

கருவறை, குளத்தில் பூத்த தாமரை மலரைப் போன்றும் குளக்கரையில் எரியும் அகல்விளக்குச் சிற்பங்கள் போன்றும் உள்ளன. விமானம் 80 அடி உயரங் கொண்டது.

### கல்லின் தன்மை

சுவர் மாடங்களிலும், மாளிகை நடைபாதைகளிலும் உள்ள அளவில் பெரிதான உருவச் சிற்பங்கள் கருமையான, மெருகேற்றப்பட்ட தீக்கல் வகையைச் சார்ந்த புதுமாதிரியான கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. இது கோயிலின் முழுக் கட்டுமானத்தில் பயன்படுத்தப் பட்டுள்ள கருங்கல்லிலிருந்து மாறுபட்டது. தூண்களின் வடிவமைப்பு, சிற்பக்கற்களின் சிறப்பு, சிற்பங்களின் செழிப்பு முதலியவற்றில் புதிய பதிவுகளைச் செய்ததெனலாம்.

### 63 நாயன்மார் வரலாறு

புராணத்திலுள்ளபடி சைவநாயன்மார் அறுபத்து மூவரின் வரலாறும், விமானச் சுவர்களின் அடிப்பாகத்தில் குறுக்காகச் செல்லும் இடுப்பணி போல சிற்பவடிவங்கள் வரிசையாகச் செதுக்கப்பட்டுள்ளன.

கோடிச் சிற்பங்கள் கொண்ட கோயில் மட்டுமல்ல எண்ணற்ற இசைக்கருவிகளுடன் கூடிய சிற்பங்களைக் கொண்டுள்ள ஒரே கோயில் இதுவே எனலாம். விஜய நகர காலத்து கலைப்பாணிக்கு தாராசுரத்து படிமங்கள் முன்னோடியாக அமைந்தன எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் ராஜராஜனால் கட்டப்பட்ட இக்கோயிற் சிற்பங்களைக் காண்பதற்கு உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் வருகிறார்கள். இக்கோயில் பல கோணங்களில் பலவகைத் தனிமுத்திரைகளைப் பதித்து நிற்கின்றன.

## இசை தரும் படிக்கற்கள்

ஆலயத்தின் பலிபீடம் ஏறும் படிகள் சிறப்பு வாய்ந்தவை. அந்த படிக்கற்களில் ஒரு சிறிய கற்களைக் கொண்டு தட்டினால் கர்நாடக இசையின் அடிப்படை சுரங்களான ச, ரி, க, ம, ப, த, நி, ச் என்ற நாதம் ஒலிக்கும். உலகத்தில் இவ்வித இனிய மங்கல ஓசையை எழுப்பும் கருங்கற்களைக் காண்பதென்பது முடியாத காரியம்.

இந்தக் கற்படிகளின் சங்கராபரண இராகத்தில் சுரங்கள் ஒலிக்கின்றன. " எல்லாவற்றிற்கும் மேலே உள்ள கற்படியின் ஒலியை தார சட்ஜம் என்று வைத்துக் கொண்டால் ச், நி, த, ப, ம, க, ரி, ச என்னும் சங்கராபரண இராக சுரங்கள் கிடைக்கின்றன. இந்தப் படிகள் "பாடும் படிகள்" என அழைக்கப்படுகின்றன. (படம் – 22A)

## இராஜ கம்பீர மண்டபத்துச் சிற்பங்கள்

கோயில்கருவறை, அர்த்தமண்டம், இராஜ கம்பீர மண்டபம் ஆகியவை தேர் போல் காட்சியளிக்கிறது. இதனை இழுத்துச் செல்லும் குதிரை, யானை ஆவேசத்துடன் சீறிப்பாய்ந்து செல்லும் சிற்பத்தின் காட்சி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. இதன் முன்னும் பின்னுமுள்ள படிவரிசைகள் யானைகளால் தாங்கப்படும் கைப்பிடிச் சுவர்களைக் கொண்டுள்ளன. இந்த அற்புத சித்திரக் கூடத்தை பார்க்கவரும் வெளிநாட்டுப் பயணிகள் கூட வியந்து பார்த்துச் செல்கின்றனர்.

இராஜ கம்பீர மண்டபத்தில் 108 தூண்களில் உள்ள கருங்கல்லாலான புடைப்புச் சிற்பங்கள் இசைச் சிற்பங்கள் பற்றி ஆய்வு செய்வோருக்கு புதுமையானதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்ப நுணுக்கங்கள் நிறைந்த கலைச்செல்வங்கள், அணுஅணுவாக ரசிக்க வேண்டியவை, பார்த்துப் பார்த்து நயக்கத்தக்கவை.

## சிவன் பார்வதி திருமணம்

மண்டபத் தூண் ஒன்றில் சிவன் பார்வதி திருமண விழாவின் போது காளைமாட்டு வாகனத்தில் மாப்பிள்ளை திருக்கோலத்தில் சிவன் அழைத்து வரப்படுகின்றார். சிவனுக்கு பெருமை சேர்க்கும் வண்ணம் நிழற்குடை பிடிக்கப்பட்டு, சங்கு, கொம்பு போன்றவை வாசிக்கப்பட்டு இசைவாணர்கள் தங்களுடைய இசைக்கருவிகளை இசைக்க, அதற்கேற்றவாறு மகளிர் நடனமாட, பூதகணங்களும் ஊர்வலத்தில் வருவது போன்ற காட்சி சிற்பமாக தத்ரூபமாக உள்ளது. (படம் – 23)

## நடன மகளிரும் இசைக்கருவிகளும்

உடல் வளைத்துக் கண் சிமிட்டும் ஆடலரசிகளின் தோற்றம் காண்போரை கலகலத்துப் போகச் செய்யும். இருமகளிர் ஆட்டத்திற்கேற்ப இசையமைக்கும் மகளிர், ஆடிக்கொண்டே இசைக்கருவி மீட்டும் மகளிர் போன்ற பல புடைப்புச் சிற்பங்கள் ஏராளம்.

அரம்பையரையும் தோல்வியுற வைத்திடும் நடனக்கோலம் காட்டி கண்ணுக்கும், சிந்தனைக்கும் இவை கலைவிருந்து வழங்குகின்றன.

"தைவரு மகரவீணை
தண்ணுமை தழுவித் தூங்க
கைவழி நயனம் செல்ல
கண்வழி மனமும் செல்ல
ஐயனுண் இடையார் ஆடும்
ஆடக அரங்கு கண்டார்" (கம்பராமாயணம் – பால காண்டம் – மிதிலைக் காட்சி பாடல் 8)

என கவிச்சக்கரவர்த்தி கம்பரின் காப்பிய வரிகள் நம் சிந்தனையில் சிந்துபாடுகின்றன.

இன்னோர் தூணில் சிறிய அளவில் புல்லாங்குழல் இசைக்கும் கண்ணனின் அழகிய வடிவம் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொங்கு நறுங்குழலார்களோடு
குழைந்து குழலினி தூதி வந்தாய்..."

என்று குலசேகர ஆழ்வார் பாடும் பாடலை ஞாபகப்படுத்தி நிற்கின்றன. குழல், கருவிகள் ஒல்லியாகவும், நீளமாகவும் காணப்படுகின்றன. கருவி ஒரு சமயம் இடப் பக்கமாகவும் மற்றுமோர் சமயம் வலப்பக்கமாகவும் பிடித்து இசைக்கப்படுகிறது. (படம் – 24)

நீளமான சங்கு ஊதும் சிவகணங்கள் தூண்களில் நிறைய உண்டு. வீணை, தாளம், உடுக்குடன் நடனமாடும் பெண்கள், மற்றும் வீணையுடன் சிவன் காணப்படுகின்றார்.

**இராஜ கம்பீர மண்டப வெளிச்சுவர் (வடக்கு)**

கோலாட்டம் ஆடும் பெண்களின் கைகளில் அழகிய, கோல்கள் இசையெழுப்புகின்றன.

சிற்பங்களின் நாகசுரக் கருவிகள் உயரத்தில் குறைவாகக் காணப்படுகின்றன. குறைவாக உள்ளதில் ஆதார சுருதி அதிகமாக இருக்கும். சிற்பங்களின் காணப்படுவது திமிரிவகை எனவும் தற்பொழுது பெருவழக்கதிலுள்ளது பாரி வகை எனப்படும் நாகசுரம்.[12] என ஞானா குலேந்திரன் ஆடலிசையில் கூறியுள்ளார்.

**கோயில் விமானம் - வடக்கு**

விமானத்தின் வடக்குப்புற அடித்தளத்தில் தோற்கருவிகளை இசைப்போர் இருவரைக்கொண்ட சிற்பங்கள் காணப்படுகின்றன. இருவரின் இசைக்கேற்ப ஆடல் மகளிர் ஆனந்தமாக நடனம் புரிகின்றார்கள். (படம் – 25)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் வீணையை மீட்டி சாமகானம் பாடி இறையருள் பெற்றான். இவன் கைலை மலையை பெயர்க்கும் புடைப்புச் சிற்பத் தொகுதி அற்புதப் படைப்பாகும். (படம் – 26)

### விமானம் (தெற்கு)

தெற்கு விமானச் சுவர்ப்பகுதியில் சங்கு ஊதும் பூதகணங்கள், தாளம், வீணை, புல்லாங்குழல், சிலம்பு, உடுக்கை இசைக்கும் இசைவாணர்கள் புடைப்புச் சிற்பங்களாக உள்ளன.

கையிலே வீணையேந்தி இசைமீட்டும் நாயகனாக காட்சி தரும் கோலம்தான் வீணாதர தட்சிணாமூர்த்தி. சப்த ஸ்வரங்களின் நாயகன் நாதன் தரும் எழில் மிகு காட்சியை இங்கு காணலாம்.

### மேற்கு

விஷ்ணு, புல்லாங்குழல் இசைக்கும் கோலத்துடன் காணப்படுகின்றார். சுவர்ப்பகுதியில் பெண்கள் உடுக்குடன் காணப்படுகின்றனர்.

### அர்த்தமண்டப வெளிச்சுவர் - தெற்கு

இங்கு பல இசைக்கருவிகளுடனான சிற்பங்கள் காணப்படுகின்றன. ஆன்மீகப் பாடல்களைச் செவிக்குணவாக அருளிய அறுபத்து மூன்று நாயன்மார்களின் தெய்வ மணங்கமழும் வாழ்க்கை நிகழ்ச்சிகள் புடைப்புச் சிற்பங்களாகத் தத்ரூபமாக வடிக்கப்பட்டுள்ளன.

### அநாய நாயனார்

பெரியபுராணத்தில் சிவபக்தியில் சிறந்து விளங்கிய அநாய நாயனார் எவ்வாறு அமுதூட்டும் குழலிசை இசைத்து இறைத்தொண்டு புரிந்தார் என விவரிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாய நாயனார் சிவன் திருவடிகளை உள்ளத்தில் நினைத்த வண்ணம் தமது குலத்தொழிலாகிய பசுக்காத்தலை செய்து வந்தார். ஒரு நாள் இடையர்கள் பசு நிரைகளை சூழ்ந்து கொண்டு செல்ல அநாயநாயனார் கையில் கோலும், வேய்குழலும் கொண்டு ஆநிரை காக்கும்படி காட்டிற்கு சென்றார். அவ்விடத்தில் நீண்ட பூங்கொத்துக்களைத் தாங்கிக் கொண்டு சிவபிரானைப் போல நிற்கின்ற ஒரு கொன்றை மரத்திற்குச் சமீபத்திலே போய் நின்றார். அந்தக் கொன்றை மரம் மனத்துள்ளே எப்பொழுதும் கண்டு கொண்டிருந்த சடையிற் கொன்றைமாலை சூடிய சிவபெருமானைப் போல் அவருக்குத் தோன்றியது. அதனைக் கண்டு உள்ளம் உருகினார். அன்பு உள்ஊறிப் பொங்கிய அமுத இசைக் குழலோசையில் சிவபெருமானது திருவைந்தெழுத்தினையும் அமைத்து வாசிக்கத் தொடங்கினார். நூல் விதிப்படி அமைந்த வங்கியம் என்னும் வேய்ங்குழலில் தனித்துளையில் மணியதரம் பொருந்த வைத்து ஏழிசை முறைப்படி, இசையிலக்கணம் எல்லாம் அமையச் செய்து, திருவைந்தெழுத்தை உள்ளுறையாகக்கொண்ட குழல் இசை ஒலியை எம்மருங்கும் பரம்பினார். அது கற்பகப்பூத் தேனும் தேவாமிர்தமும் கலந்து வளர்ப்பது போல எல்லா உயிர்களுள்ளும் புகுந்து தேக்கிற்று.[13]

## இசை வயப்பட்ட உயிரினங்கள்

அநாய நாயனாரின் இசையில் புல்மேய்ந்த பசுக் கூட்டங்கள் அசையவிடாமல் அநாயனாரை அடைந்து உருக்கத்திலே மெய்மறந்து நின்றன. பால் குடித்துக் கொண்டிருந்த கன்றுகளெல்லாம் குடிப்பதை மறந்து, இசைகேட்டுக்கொண்டு நின்றன. எருதுகளும் மான் முதலிய காட்டு மிருகங்களும் மயிர் சிலிர்த்துக் கொண்டு அவர் சமீபத்தில் வந்தன. ஆடுகின்ற ஒரு மயில் சிலிர்த்துக் கொண்டு அவர் சமீபத்தில் வந்தது. ஆடுகின்ற மயில் கூட்டங்கள் ஆடுதலையொழித்து அவர் பக்கத்தை அடைந்தன. பலவகைப்பட்ட பட்சிகளும் மனம் உருகிச் சென்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவும், மயிலும், புலியும், மானும் தத்தமது பகைமையை மறந்து ஒன்றுகூடி வந்து குழலிசையை மெய்மறந்து கேட்டன. இடையர்கள் தங்களது தொழிலை மறந்து கானத்தைக் கேட்டுக் கொண்டு நின்றனர். கின்னரர்களும், தேவர்களும் அமுதமெனப் பொழிந்த இன்னிசையைக் கேட்டு விமானங்களிலேறிக் கொண்டு வந்தனர்.[14] அநாயநாயனார் இசைத்த குழலிசை மையத்தை நிறைத்தது. வனத்தையும் தன் வசமாக்கியது. இறைவனும் ஆடுதலாம் இவ்விசையின் வசப்பட்டவராய், அநாயநாயனாருக்கு காட்சியளித்து அவரை ஆட்கொண்டார்.

"எடுத்தகுழல் கருவியினில்
எம்பிரான் எழுத்தஞ்சும்...."

என சேக்கிழார் பெரியபுராணத்தில் கூறுவதற்கேற்ப இங்கு கதை கூறும் வகையில் சிற்பத் தொகுதியாக வடிக்கப்பட்டுள்ளன. (படம் – 27)

## நுட்பமான கிழக்குத் திருச்சுற்று

ஆறு கால்களும் ஒரு தலையும் கொண்ட நடனமாதுவின் கடினமான கரணநிலைகளுக்கேற்ப, துடி, தோல்கருவிகளின் நுட்பமான ஜதிக்கோவைகள் முழங்குகின்றன. இசைக்கருவிகளை வைத்துக்கொண்டுள்ள மகளிரும் ஆட்டத்தை ஆடுகின்றனர். இச்சிற்பம் பார்ப்போர் கண்ணையும் கருத்தையும் கவருவதாகவும் விசித்திரமாகவும் விளங்குகின்றது. (படம் – 28)

## மேற்குத் திருச்சுற்று

மேற்குத் திருச்சுற்று வெளிப்புற மதிலின் அடித்தளத்தில் குழல், வீணை ஆகிய பண்ணிசைக் கருவிகளோடு குமிழ்த்தாளமும் தட்டையான தாளமும் துடியும் இணைந்து இசைக்கப்படுகின்றன. இவ்விசைக்கு ஆடல் மகளிர் ஆடுகின்றனர். இது பல்லியக் கூட்டுசைச் சிற்பமாகக் காணப்படுகிறது.

ஆடல் மகளிருக்கும் பக்க இசையாக குழலும் வீணையும் இதே சுற்றுப் பிரகாரத்தில் காணப்படுகின்றன. மதில் அடித்தளத்தில் இன்னு மோரிடத்தில் இருவர் தாளக் கருவியிசைக்கு மகளிர் ஒருத்தி இசைக்கு மயங்கி ஆடுகின்ற சிற்பம் அனைவரையும் இசையின்பம் பருக அழைப்பது போலுள்ளது. இன்னுமொரு சிற்பத்தொடரொன்றில் ஆடல் மகளிர் நடுவில் நின்று ஆடுகிறாள். இருபுறமும் இரு ஆண்கள் தோற்கருவிகளை இசைக்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடல் மங்கையின் அமைப்பும் இசை எழுப்பும் முறையும், மங்கையின் இடப்புறத்தில் இருக்கும் கருவியின் அமைப்பிலும் வாசிக்கும் முறையிலுமிருந்து வேறுபட்டுக் காணப்படுகிறது. முன்னையது இரு கைகளாலும் இசையெழுப்பும் தண்ணுமை போலவும் மற்றயது இடது கையைக் கருவியின் வாரினுள் இறுக்கி வைத்துக் கொண்டு கருவியின் வலது பக்கத்தில் இசை பெருக்கும் ஒருவகை முழவு போலவும் தெரிகிறது.

## தெற்குத் திருச்சுற்று

நீளமான சங்கினை ஊதிடும் பூதகணங்கள், புல்லாங்குழல் இசைக்கும் கண்ணன், தாளம், தண்ணுமை, வாசிக்கும் இசைவாணர்களை வரிசையாக தனது கைவண்ணத்தில் காட்டியிருக்கின்றான் இதை ஆக்கிய சிற்பி, இரண்டாம் இராஜராஜனால் உருவாக்கப்பட்ட இக்கோயிலின் இத் திருச்சுற்று சிற்பங்கள் பல அழிந்தும் சில அழியும் நிலையிலும் உள்ளன.

## நந்தி

நந்தி இருக்கும் படிகளில் கூட இசைக்கருவிகள் (தோற்கருவி) வாசிக்கும் கலைஞர்களும் சங்கு ஊதும் பூதகணங்களும் வரிசையாக காணப்படுகின்றன. (படம் – 29)

## பெரியநாயகி அம்மன் சன்னதி

அருள்மிகு இராசராசேச்சுரம் என்னும் ஐராவதீஸ்வரம் ஆலயத்தின் வடக்குப் பகுதியில் கிழக்குத்திசையை நோக்கி தனிக்கோயிலாக அருள்மிகு தெய்வநாயகி அம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது.

கல்வி, செல்வம், வீரம் ஆகிய இவ்வரிய சிறப்பினைத் தன்னை வழிபடும் திருக்தொண்டர்களுக்கு வரையாது வழங்கும் முப்பெருந்தேவி என்று போற்றப்படும் பெருமை வாய்ந்தவர் அருள்மிகு தெய்வநாயகி அம்மன் ஆவார். விமானம், கோபுரம், திருச்சுற்றுடன் பிரகார அணியுடன் முன் மண்டபமும் சிறப்பான வேலைப்பாடும் காணப்படுகிறது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இங்கு முக மண்டபத்தின் அதிஷ்டானச் சுவரில் இசைக் கருவிகளுடனான சிற்பங்கள் உள்ளன.

தோற்கருவிகளான மத்தளம், பறை போன்ற கருவிகளை இசைத்து ஆடும் வண்ணம் சிற்பங்கள் உள. வடக்கில் தம்புரா போன்ற இசைக்கருவி ஒன்றை பெண் வாசிக்கின்றாள்.

கோயில் விமானத்தில் நான்கு பக்கங்களிலும் வயலின் போன்ற அமைப்பில் வீணையிசைக்கும் இசை மாதர்கள் இசைமீட்டும் காட்சி அற்புதமானது. குழலூதும் கண்ணன் போன்ற இன்னோரன்ன சிற்பங்களும் காணப்படுகின்றன.

## அருள்மிகு துர்க்கையம்மன்

வல்லமை மிக்க அதிகாரச் செருக்குப் படைத்த கொடியவன் எவ்வளவுதான் கொடிகட்டி வாழ்ந்தாலும் அவர்கள் ஒரு நாள் தர்மத்தின் முன் தண்டனைக்கு உரியவர்கள் என்பதை விளக்குவதின் உண்மைத் தத்துவம் கொண்ட தேவியின் நான்கு கரங்களில் சக்கரம், வில், அம்புடன் இசைக் கருவியான சங்கும் காணப்படுகிறது. பாதங்களில் சிலம்பும் உண்டு.

## தஞ்சாவூர் அருங்காட்சியகம்

பெரும்பாலான சிற்பங்கள் இங்கிருந்து அகற்றப்பட்டு தஞ்சாவூரிலுள்ள கலைக் கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

### 1. கங்காள மூர்த்தி (கற்சிற்பம்)

தோளின் மேலே கங்காளம் அமைந்திருக்கிறது. அருகில் இரண்டுக்கு மேலாக கணங்களின் வடிவம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதுவரை காணப்பெறாத கங்காளமூர்த்தி வடிவங்களில் இதுவே மிகவும் பெரியது. கூர்ம புராணத்திலே காணப்படும் வர்ணனைக்கு ஏற்ப பலவிதமான இசைக்கருவிகளை ஒலிக்குங்கோலத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. பிச்சாடனர் (கற்சிற்பம்)

கையில் உடுக்கையுடன் காணப்படுகின்றார். இவ் உடுக்கையை ஏந்தி நிற்கும் பாணி மன்னனின் கலை ரசனையாகவோ அல்லது சிற்பியின் கலை ரசனையாகவோ இருக்கலாம். இடக்கையின் இடுக்கில் உடுக்கையை மார்புடன் அணைத்தவாறு வலக்கையால் தட்டும் பாணி மகத்தானது.

## 3. கஜசம்கார மூர்த்தி (கற்சிற்பம்)

இது மிகவும் அழகு வாய்ந்தது. எட்டுக்கரங்களுடன் கஜமுகாசுரனை வதைக்கின்றார். வலது மேல் கையில் உடுக்கை காணப்படுகிறது.

## 4. சிவகணங்கள் (கற்சிற்பம்)

1. தாள இசைக்கருவிகளைக் கையில் கொண்டு வரிசையாக நின்று இசைக்கும் சிற்பங்கள் காணப்பெறுகின்றன. (எண் 65 – 69ல் இடம் பெற்றுள்ளன.)
2. தண்ணுமைக் கருவியை இசைக்கும் சிவகணம் காணப்படுகின்றது.
3. ஒரு பக்கத்தில் கைவிரல்களால் வாசித்தும் மறுபக்கத்தில் சிறிய கோல் கொண்டு வாசித்தும் இசையெழுப்பும் முழவுக் கருவியுடன் சிவகணம் காணப்படுகிறது.

## 5. சித்ரசேனன், நாரதர் (கற்சிற்பம்)

குடத்துடன் விளங்கும் வீணையைச் சித்ரசேனனும் யாழ்க்கருவியை நாரதரும் இசைக்கின்றனர். (சிற்ப எண் – 48)

இவை இரண்டும் அருகருகே அமைந்த சிற்பக்காட்சிகளாக இங்கு காணப்படுகின்றன. குடம், மேற்பலகை, தண்டியுடன் விளங்கும் வீணைக் கருவியை சித்ரசேனனும், யாழ்க்கருவியை நாரதரும் இசைக்கும் சிற்பக் காட்சி யாழ், வேறு வீணை, வேறு என்பதை சுட்டிக்காட்டுகிறது. (படம் – 30)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கோயில் அருங்காட்சியகம்

இசைப்பிரியனான இறைவனே ஞானசம்பந்தருக்கு பொற்றாளம் பெறச் செய்த அற்புதக் கோலத்துடன் கையில் பொற்றாளம் இசைக்கும் பாணியில் அமைந்துள்ளது. (படம் – 31)

### குடமுழா இசைக்கும் சிற்பம்

குடமுழா இசைக்கும் சிற்பம் நிழற்படம் எடுத்து கோயில் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் கோயிலில் காணப்படும் இதே சிற்பம் அழிந்த நிலையில் தெளிவில்லாமல் காணப்படுகிறது. (படம் – 32) எனவே அழிந்து போகும் அனைத்துச் சிற்பங்களும் கட்டாயமாக பாதுகாக்கப்பட வேண்டிய பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

## 4.4 திருபுவனம் கம்பகரேஸ்வரர்

பொன்னிநதி புனல்மல்கி பெருவளம் கொழிக்கும் புண்ணியம் பெற்றது. சோழநாடு இந்நாட்டில் சோழ மன்னர்களால் எடுப்பிக்கப் பெற்ற கோயில்கள் பலவாகும். எனினும் நான்கு கோயில்கள் முழுவதும் கருங்கல்லாலான கட்டட, சிற்ப சிறப்புக் கொண்டன. அதனுள் சோழ மன்னரது பெருமைக்கும், புகழுக்கும், சிற்ப நுணுக்கத்ததிற்கும், நிலைக்களனாய் இன்றும் சிறப்புற்று விளங்குவனவற்றுள் திருபுவனம் கம்பகரேஸ்வரர் திருக்கோயிலும் ஒன்றாகும்.

### தலமும் இருப்பிடமும்

இத்தலம் தஞ்சாவூர் மாவட்டம் திருவிடை மருதூர் தாலுக்காவில் இரயில்வே நிலையத்திற்கு மேற்கில் ஒரு கல் தொலைவிலுள்ளது. கும்பகோணத்திலிருந்து 6 கி.மீட்டர் தூரத்தில் உள்ளது.

### தலப்பெயர்கள்

திருபுவனேசுரம் (திரிபுவன வீரபுரம்) என்பதே இத்தலத்தின் பழைய புராணப் பெயராகும். திருபுவன ஈச்சரமுடைய தேவர் என இவ்வூர்க் கோயிலிலுள்ள கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. இப்பெயர் இப்பொழுது திருபுவனம் என்று மருவி வழங்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவேயின்றி விவவனம், திரிபுரவனம், தேவ சேத்திரம், நிம்பாண்டிய ஷேத்திரம்[15] என்று வேறு பல பெயர்களும் இத்தலத்திற்கு உண்டு.

## மூன்றாம் குலோத்துங்கசோழன்

பிரகதீஸ்வரர் கோயில் விமானங்களை விட திருபுவன கம்பரேஸ்வரர் அளவில் சிறியனவாக இருந்த போதிலும் சாளுக்கிய ராஷ்டிரகூடர் தாக்குதலினால் சில புதுமைகளை வெளிப்படுத்தி உருவாக்கிய முழுவதும் கல்லாலான விமானங்களை உடைய அளவில் பெரிய கோயிலாக விளங்குகின்றது.[16]

## மூன்றாம் குலோத்துங்க சோழ மன்னன் (கி.ப. 1178 - 1223)

வடநாடு சென்று பெற்ற வெற்றிப் பொருட்களைக் கொண்டு திருபுவனம் திருக்கோயிலைக் கட்டினான்.[17] இதை இத்திருக்கோயில் கல்வெட்டும் உறுதி செய்கின்றது.

## கல்வெட்டுக்கள்

இத்திருக்கோயிலில் 7 கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகளை அரசாங்கக் கல்வெட்டுத்துறையினர் படியெடுத்துச் சென்றுள்ளனர். அவைகளின் சுருக்கங்கள் அத்துறையினர் வெளியிடும் ஆண்டு அறிக்கையில் (Annual reports on south Indian Epigraphy) வெளிவந்துள்ளன.

இதன்படி 197வது எண்ணுள்ள கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்கன் வெற்றி பெற்ற இடங்களிலிருந்து கிடைத்த பெரும் பொருட்களைக் கொண்டு திருபுவனத்தில் கோயில் கட்டியமையையும், இக்கோயில் அவனது முன்னோர்கள் கட்டிய கங்கை கொண்ட சோழபுரம், தஞ்சைக் கோயிலை ஒத்ததாகவே கட்டப்பட்டமையையும் தெரிவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூர்த்தி

இறைவன் திருப்பெயர் கம்பகரேசுவரர். தமிழில் "நடுக்கம் தீர்த்த பெருமான்" என்பது பொருள். இத்தல அம்மையார் ஸ்ரீ அறம் வளர்த்த நாயகியார்.

## தலப்பெருமை

அசுவகிரீவன், விருஷபக்கிரீவன், வியாளக்கிரீவன், பிரமன், தேவர்கள், இலக்குமி, வரகுண பாண்டியன், பிரகலாதன், திருமால் ஆகியோர்களது நடுக்கத்தை தீர்த்து அருள் பாலித்ததால் நடுக்கத்தை (பயத்தை) நீக்கிய பெருமானுக்கு 3ம் குலோத்துங்க சோழன் தன் வெற்றிக்கு அறிகுறியாக எடுப்பிக்கப்பெற்றது இத்தலம்.

நரசிம்ம வடிவு கொண்டு உலகத்தை நடுங்கச் செய்த விஷ்ணுவின் அகங்காரத்தை அடக்கி சரபேஸ்வரர் வடிவம் தாங்கியது. சுரகோஷன் எனும் வேடனுக்கு அருள்புரிந்தது வருணன் பூசித்தது. சித்திராதன் வழிபட்டு அருள் பெற்றது[18] இத் திருத்தலம்.

## கோயில் அமைப்பு

திருக்கோயில், ஊரில் நடுவே கிழக்கு நோக்கி இருக்கின்றது. இதற்கு முதற் கோபுரமாகிய திருத்தோரணத் திருவாயில், இரண்டாம் கோபுரமாகிய திருமாளிகைத் திருவாயில், அர்த்த மண்டபத் திருவாயில் என்னும் மூன்று முக்கிய வாயில்கள் இருக்கின்றன. எனவே, தெய்வப்பாக்கிழாராகிய சேக்கிழார் பெருமானால் திருத்தொண்டர் புராணத்தில் குறிப்பிடப்பெற்றுள்ள மூன்று திருவாயில்களும் இக்கோயிலுக்கு அமைந்திருக்கும் பெருஞ்சிறப்பு ஆகும். அவைகளன்றி அர்த்த மண்டபத்தின் தென்பகுதியில் ஒன்றும், வடபகுதியில் ஒன்றும் ஆக இருவாயில்களும் பிறவும் இருக்கின்றன. முதற்கோபுரம் ஏழு நிலைகளுடன், இரண்டாம் கோபுரம் மூன்று நிலைகளுடன் கூடிய வாயில்கள் இக்கோலுக்கு அழகு பெறச் செய்கின்றன. தற்போது இராஜகோபுரத்தில் 300 சுதைப் பொருட் சிற்பங்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோயிலுக்கு இரு திருச்சுற்றாலைகள் (பிரகாரங்கள்) இருக்கின்றன. அவற்றுள் முதல் திருச்சுற்றாலையைச் சூழ்ந்து திருச்சுற்றுமாளிகை ஒன்று இருக்கின்றது. இம்முதல் திருச்சுற்றாலையின் நடுப்பகுதியில் நடுக்கந் தீர்த்த பெருமான் எழுத்தருளியிருக்கும் கோயில் இருக்கின்றது.

கருவறை (Central shrine) அர்த்த மண்டபம், மகாமண்டபம் என மூன்று பகுதிகளையுடையது. கருவறை விமானம் தஞ்சை இராஜராஜேச்சரம், கங்கை கொண்ட சோழேச்சரம் இவைகளின் விமானங்களை ஒத்தது ஆகும். இவ்விமானம் அறிவானந்த வடிவமானது என்று இவ்வூர்த் தலபுராணம் கூறுகின்றது. முதற் சுற்றாலையின் வடபகுதியில் அம்மையார் கோயிலும், அதன் கீழ்பால் சரபேசர் திருக்கோயிலும் இருக்கின்றன. இரண்டாம் திருச்சுற்றாலையில் வசந்த மண்டபமும், யாகசாலையும் எழில் பெற அமைந்திருக்கின்றது.

## இன்றைய நிலை

தரும புர ஆதீனத்தின் இருபத்தேழு தேவ தானங்களில் ஒன்றாக விளங்குவது இவ்வாலயம். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் அருளாட்சிக் காலத்தில் திருப்பணி செய்யப்பெற்றது. 6-9-1963 இல் மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 26 வது குருமகா சந்திதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிய ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளாட்சிக் காலத்தில் பெரும் பொருட் செலவில் பல்வேறு திருப்பணிகள் செய்யப்பட்டு 27-1-2008 மீண்டும் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

## திருபுவனச் சிற்பங்களில் இசைக்கருவிகள்

தாராசுரத்து புடைப்புச் சிற்பங்கள் போலவே இங்கும் சிற்பத் தொகுதிகளைக் காணமுடிகின்றது. தாராசுரக் கோயில் சிற்பங்களை அடியொற்றியே இங்குள்ள புடைப்புச் சிற்பங்கள் உருவாக்கப்பட்டிருந்தாலும் சிறப்பு மிக்க விமானம், கோபுரத்தின் வளர்ச்சியின் பிரகாரம் உள்ள சிற்பங்களில் இசைக்கருவிகள் கூடுதல் அளவில் புராணம் கதைகளை விளக்கும் சிற்பங்களாக இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**விமானம் - முதல் தளம்**

**வடக்கில்** - விஷ்ணு சங்குடனும், சிவன் ஊர்த்துவதாண்டவத்தில் உடுக்கையுடனும் காணப்படுகின்றார்.

**மேற்கில்** - நடராஜர் உடுக்கையை ஒலித்துக்கொண்டே ஆடிக்கொண்டிருப்பதைக் காணலாம். இறைவனின் சதுர தாண்டவத்தில் எட்டு கரங்களில் ஒன்றில் இசைக் கருவியான உடுக்கை காணப்படுகிறது.

**தெற்கு** - வீணையைக் கையிலேந்தி வாசித்துக் கொண்டிருக்கும், வீணாதார தட்சணாமூர்த்தி சிற்பம் அற்புதமானது. அத்துடன் சரஸ்வதியும் கையில் வீணை வைத்து வாசித்துக்கொண்டிருக்கிறாள். வைரவர் சிற்பத்திலும் உடுக்கை காணப்படுகிறது.

**இரண்டாவது தளம்**

**கிழக்கு** - விஷ்ணு நின்ற கோலத்துடன் சங்கை வைத்திருக்கிறார்.

**வடக்கு** - சங்குடன் விஷ்ணு விளங்க உடுக்கையுடன் சிவன் தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கிறார்.

**ஹரிகர வடிவம்**

ஹரிஹர வடிவம் என்பது திருமாலும், சிவனும் சேர்ந்த வடிவம். இவ்வடிவத்தில் இடது புறத்தில் கறுப்பு நிறமாகவும், வலது புறத்தில் பவளம் போன்றதாகவும் இருக்கவேண்டும். இடதுபுறம் உள்ள விஷ்ணுவின் மேல் கையில் சங்குடன் இருக்குமாறு அமைத்தல் வேண்டும் என்று ஶ்ரீ குமாரர் சிற்பரெத்தினம் கூறுவதற்கேற்ப அமைக்கப்பட்டுள்ளது.

**மேற்கு** - சங்குடன் விஷ்ணு இருக்கிறார். சிவன் உடுக்கையுடன் ஆடுகின்றார்

**தெற்கு** - பிச்சாடன உருவத்தில் உடுக்கை காணப்படுகின்றது. கஜசம்கார மூர்த்தி வடிவமும் காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூன்றாவது தளம் :** விஷ்ணு சங்குடன் விளங்குகின்றார்.

**நான்காவது தளம் :** நாகத்துடன் கூடிய உடுக்கை காணப்படுகிறது. விமானத்தின் நான்கு மூலைகளிலும் பூத கணங்கள் தாம் எப்பொதும் விழிப்புடன் இருப்பதைக் காட்டும் விதத்தில் சங்கின் ஓசையை எழுப்ப ஆயத்தமாகும் வண்ணம் உள்ளன.

## ஆறாவது தளம்

மச்ச அவதாரம் எடுத்த விஷ்ணு வடிவம் காணப்படுகிறது. மேல்பகுதி விஷ்ணு வடிவமும் கீழ்பகுதி மீன் வடிவமுமாக இருக்கும். நான்கு கரத்தின் மேல்ப் பகுதியில் உள்ள கரத்தில் சங்கை வைத்துள்ளார். கூர்ம அவதாரம், கீழ்ப்பகுதி ஆமை வடிவம். இற்கும் கையில் சங்கு உண்டு.

**உபபீடம்** - கருவறைச் சுவர்கள்

**வடக்கு** - பெண்கள் இசை வாத்தியங்கள் முழங்குகின்றனர். பூதகணம் ஒன்று சங்கு ஊத மத்தளம் வாசிக்கும் பூத கணங்கள் காணப்படுகின்றன. மற்றுமொரு சிற்பத்தொகுதியில் ஒரு பெண்ணும் ஒரு முனிவரும் மத்தளத்தைக் கொட்டுகின்றனர்.

## மேற்கு

நாட்டிய மாது நடனமாடுகின்றாள். அதற்கு ஒரு பெண் வீணையை மீட்டிக்கொண்டிருக்கிறாள். இன்னுமொரு பெண் புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருக்கின்றாள். வேறொரு பெண் மத்தளம் வாசித்துக்கொண்டிருக்கிறாள். இன்னுமொரு புடைப்புச் சிற்பத் தொகுதியில் இசைக் கருவிகளை வாசித்துக் கொண்டிருக்கும் பெண்கள் கூட்டத்தை காணலாம். பூத கணங்கள் சங்குகளை முழங்குவது போன்ற சிற்பங்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. முனிவர்கள் மத்தளம் வாசிப்பது போலவும் நிறைய புடைப்புச் சிற்பங்களில் காண்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தெற்கு

மத்தளம் வாசிக்கும் பெண் ஒருத்தியும், யாழ் வாசிக்கும் பெண் ஒருத்தியும், காணப்படுகின்றனர். இன்னொரு புடைப்புச் சிற்பத் தொகுதியில் புல்லாங்குழல் இனிமையாக வாசித்துக் கொண்டிருக்கும் பூரிப்பில் திழைத்திருக்கின்றாள் ஒரு பெண்.

### தெற்கு (அர்த்த மண்டபம்)

ஒரு பெண்ணின் ஆட்டத்திற்கு முனிவர் மத்தளம் வாசிக்கிறார். இன்னொரு பெண் மத்தளம் கொட்டுகிறாள். நடனமாடிக்கொண்டே ஒரு பூதம் நீளமான சங்கினை ஊத இன்னுமொரு பூதம் வலக்கையில் குச்சி கொண்டு இசையெழுப்ப ஓங்குகின்றது. (படம் – 33)

### கருவறை அர்த்த மண்டபம் வடக்குச் சுவர்

இங்கு அமைத்துள்ள தேவகோஷ்டத்தின் கருவறை வாயில் படிகளில் பூதகணங்கள் சங்குகளை முழங்கிக்கொண்டிருக்கின்றன.

### அம்பாள் சந்நிதி

பூதமங்கையர் சங்குகளை முழங்குவதற்கு ஆயத்தமாக கைகளில் வைத்துக்கொண்டிருக்கின்றனர். (படம் – 34)

### அருள் வளர்த்த நாயகி

தர்மசம்வர்த்தனி வாயிலில் சிவன் – பார்வதி திருமணக் காட்சி இடம் பெறுகின்றது. அதற்கு நாரதர் ஒரு கையில் தம்புராவும் மறுகையில் சிப்ளாக்கட்டையுடன் காணப்படுகின்றார். சரஸ்வதி வீணை வாசிக்கின்றாள். நந்தீஸ்வரர் மிருதங்கத்துடன் காட்சிதருகின்றார். (படம் – 35)

### நந்தி மண்டபம்

மகளிர் உடுக்கை வாசிப்பது போல் உள்ள சிற்பங்கள் அழகானவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோபுரம் - 1 வது கோபுரம்**

கோபுரத்தின் வாயில் தூண் வரிசையில் குழல், வீணை வாசிக்கும் அழகிய புடைப்புச் சிற்பங்கள் உண்டு. (படம் – 36)

**சுதைப்பொருட் சிற்பங்கள்**

**மேற்கு** - நாரதர் தம்புரா இசைக்க, கிருஷ்ணர் புல்லாங்குழல் வாசிக்க அதற்கேற்ப சரஸ்வதி வீணை வாசிக்கின்றாள்.

**கிழக்கு**

நடராசர் ஆடலுக்கு சரஸ்வதி வீணை வாசிக்கும் சிற்பங்கள் நாரதர், தம்புரா வாசிக்கும் சிற்பங்களைக் காணலாம். (படம் – 37)

**இரண்டாவது கோபுரம்**

தெற்கு – கல்லால் மரத்தடியில் சிவன் வீணாதரராக வீணையுடன் காட்சி தருகின்றார். நந்திகேஸ்வரர் மிருதங்கத்துடனும், நாரதர் தம்புராவுடன், இணைந்து வாசிப்பது போல் தத்துரூபமாக காட்டப்பட்டுள்ளது. (படம் – 38) புல்லாங்குழல், மத்தளம் வாசிக்கும் அற்புதமான சிற்பங்கள் இக்கோயிலில் உண்டு.

**முகமண்டபம்**

முகமண்டப வாயில் சுவரில் மத்தளம் வாசிக்கும் சிற்பம் உண்டு.

**இசைக்கருவிகள் உள்ள செப்புத் திருமேனிகள் (சோழர் காலம்)**

தமிழகத்தில் பன்னெடுங்காலமாக வளர்ந்து வந்தள்ள கலைகளில் உலோகப்படிமக்கலையும் ஒன்று. சிற்ப நூல்களில் இவற்றைச் செய்வதற்குரிய முறைகளும், பிற தொழில் நுட்பக் கருத்துக்களும், தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இச் சாத்திரங்களைப் பின்பற்றித் தமிழக சிற்பிகள் இடைக் காலத்தில் செய்த எத்தனையோ தெய்வப் படிமங்கள் உலகில் பல பகுதிகளிலுள்ள அருங்காட்சியகங்களுக்குச் சிறப்பளிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செப்புப் படிமங்களில் இசைக்கருவிகள்

சோழர்களின் காலம் செப்புத் திருமேனிகளின் பொற்காலம் என்பதற்கு மாறுபட்ட கருத்துக்கள் இல்லை. உலகப்புகழ் பெற்ற நடராசர் உருவங்களே இக்காலத்துப் படிமக்கலையின் உயர்வினைக் காட்டப் போதிய சான்றுகளாகும். சைவசித்தாந்தத்தின் உட்பொருளை விளக்கும் ஆனந்தத் தாண்டவமே அனைவரின் கருத்தையும் கவர்வது. பிரான்சு நாட்டுத் தலைசிறந்த சிற்பியான ரேடின் (Redin) என்பவர் நடராஜ உருவத்தின் சிறப்பினைப் பாராட்டியுள்ளார். ஆனந்த குமாரசாமி நடராஜர் வடிவம் (Dance of Shiva) எனும் நூலில் நடராஜ வடிவத்தினை சிறப்பித்துள்ளார். அத்துடன் ஒப்பீட்டளவில் பல்லவர், பாண்டியர், விஜய நகர, நாயக்க மன்னர் ஆகியோரின் காலங்களை விட சோழர்காலத்திலேயே அதிக அளவில் செப்புப் படிமங்கள் உருவாக்கப்பட்டன என்றும் சோழர்களின் காலமே வெண்கலப் படிமக்கலையின் பொற்காலம் என்று கூறுவர்.

இலங்கையிலும் சோழர்காலத்திற்குரிய நடராசரின் வெண்கலப் படிமங்கள் அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டு கொழும்பிலுள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய நடராஜரின் சிற்பங்களில் இசைக்கருவியான உடுக்கை காணப்படுவது சிறப்பானது. தாளத்துடன் கூடிய எலும்புருவான காரைக்காலம்மையார் செப்புத் திருமேனியும் உண்டு.

## பிட்சாடனவடிவம்

இறைவன் தாருகாவனத்து ரிஷிகளின் கர்வத்தை அடக்க எடுத்த வடிவமே இது. இவ்வடிவத்தில் ஒரு கரம் துடியினை ஏந்தியிருக்கும். பொற் பாதங்களிலே ஓசை எழுப்பும் வீரக்கழல் அணிந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்யாண சுந்தரர்**

சிவன், பார்வதி திருக்கல்யாணத்தை விளக்கும் கோலம் கலியாணசுந்தரர் படிமம், மகாவிஷ்னு உமாதேவியின் சகோதரனாகத் தோன்றுவார். அவரது ஒரு கரத்தில் சங்கு விளங்கும். கோனேரிராச புரத்திலும் இதனைக் காணலாம்.

**வைரவர்**

இறைவன் தக்கனது யாகத்தை அழிக்க எடுத்த வடிவம். இக்காலத்தில் வைரவருக்குரிய வெண்கலப் படிமத்தில் எட்டு கைகளுடன் காணப்படும். இக்கரங்களில் ஒன்றில் உடுக்கையும் இன்னொரு கரத்தில் மணியும் காணப்படும். பாதங்களில் மணிகள் பொருந்திய வீரக்கழல் காணப்படும். திருவெண்காடு சுவேதாரண்ய சுவாமி கோயிலிலும் இதனைக் காணலாம்.

**வீணாதர தட்சணாமூர்த்தி**

தஞ்சை பெரிய கோயிலில் வீணை நாதத்தை எழுப்பிய வண்ணம் காட்சி தருகின்றன. இசைகேட்ட நாகம் போல் காலின் கீழ் முயலகன் கிடக்கிறான். புன்முறுவல் காட்டி இசை மீட்டும் காட்சி என்றும் யாவரின் மனவெழுச்சிக்கும் தூண்டுகோலாகும்.

**வீணாதர பிக்ஷாடனர்**

பிக்ஷாடனர் வடிவத்தில் வீணையேந்தியிருக்கும் நிலை. இதனை மேருப்பள்ளம் வலப்புரிநாத சுவாமி கோயிலிலும் காணலாம்

**திருஞானசம்பந்தர்**

இறைவனிடம் பொற்தாளம் பெற்றவாறு படிமங்கள் வார்க்கப்பட்டுள்ளன. கங்கைகொண்ட சோழபுரத்திலும் இதனைக் காண்கிறோம்.

**சேரமான் பெருமான் நாயனார்**

கையில் வீணையேந்தி சேரமான் பெருமான் நாயனார் ஆன்ம கீதம் இசைக்கிறார். ஆத்தூர் சோமநாதேசுவரர் கோயிலிலும் இச்சிற்பங்களைக் காணலாம்.

சோழர்கால சிற்பங்கள், தமிழகப் பண்பாடு, கலாசாரத்தின் பிரதிபலிப்பாகும். இலக்கியக் காலக் கண்ணாடி. சிற்பங்கள் கலங்கரை விளக்கமாகும். தமிழரின் பண்பாட்டை உலகறியச் செய்பவை சிற்பங்கள். அதை கலைவல்லுனர்கள் உலகிற்கு அறிமுகம் செய்கின்றனர். நாம் கலைவளம் காப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புகள்

1. குடவாயில் பாலசுப்ரமணியம், **தஞ்சை பெரியகோயில்**, ப.3
2. சீனிவாசன். கே.ஆர்; **தென்னிந்தியக் கோயில்கள்**, பக்.146 - 147
3. குடவாயில் பாலசுப்ரமணியன், மு.கூ.நூ, ப.1
4. சீனிவாசன். கே.ஆர், மு.கூ.நூ, ப.148
5. சுந்தரேசன் .என்; **கங்கைகொண்ட சோழபுரம்**, ப.5
6. சம்பந்தர் **தேவாரம்**, 262 - 2
7. **மூத்த திருப்பதிகம்**, 2 - 9
8. சீனிவாசன் .கே. ஆர், மு.கூ.நூ, ப.152
9. வேலுச்சாமி சுதந்திரன். ஆ, **சிந்தைக்கினிய சிற்பக்கலை**, ப.71
10. பத்மநாதன் .சி, **கோயில்களும் சிற்பங்களும்**, ப.199
11. தனபாண்டியன் . து. ஆ, **புல்லாங்குழல் - ஓர் ஆய்வு**, ப27
12. ஞானாகுலேந்திரன், **ஆடலிசை**, ப.47
13. சுப்பிரமணிய முதலியார். சி. கே, **அநாயநாயனார் புராணம்**, ப.1238
14. ஆறுமுகநாவலர் உரை நடை, **அநாயநாயனார் புராணம்**
15. **திருபுவனத் தலவரலாறு**, ப.9
16. சீனிவாசன். கே. ஆர், மு.கூ.நூ, ப.152
17. மேலது, ப.152
18. **திருபுவனத் தலவரலாறு**, திருக்கோயில் வெளியீடு, ப.11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



8



9



10



11



12



13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


32


33


34


35


36


37


22 A


38

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் ஐந்து

## இசைக் கருவிகள் – தத்துவவியல் பார்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. இசைக்கருவிகள் - தத்துவப் பார்வை

தமிழ் நாட்டைவிட - செல்வம் படைத்த நாடுகள் உலகத்தில் இருக்கின்றன. லட்சுமி தேவியின் அருள் நமக்கு அருள் பாலித்துக் கொண்டு வருகிறது. ஆனால் கலைமகளின் கடாட்சமோ பூரணமாய் இருந்து வருகிறது. உலகில் உள்ள கலைவாணர்கள் தமிழ் நாடுதான் கலைக்கே பிறப்பிடம் என்று கூறுகின்றனர். சிற்பம் என்று எடுத்துக்கொண்டால், தமிழ் நாட்டின் கோயில்களிலும் கோபுரங்களிலும் அவை அழகாக மின்னுகின்றன.

மக்களின் உள்ளகத்தில் கருக்கொண்டு எழும் கருத்துக்களை பொதுவாக இருபெரும் வகையினவாகப் பிரிக்கின்றனர் உலகச் சான்றோர்.

ஒரு வகை - அறிவியற் கருத்துக்கள்

மற்றொருவகை - கலையியற் கருத்துக்கள்

அறிவியல் - எந்த ஒன்று அறிவால் அளந்து அறியப்படுகிறதோ அது அறிவியல் தத்துவம்.

கலையியல் - எந்த ஒன்று உணர்வால் அளந்தறியப்படுகிறதோ அது கலையியல் தத்துவம்.

அறிவியல் - இருக்கும் உண்மையை அறிந்தவாறு அப்படியே சொல்லும். கலையியல் - உள்ளத்திற்குப்படுவதை உணர்ந்தவாறு சொல்லும். கலையியலும் அறிவியலும் ஒன்றுக்கொன்று தேவையான அளவு வேறுபடவே செய்யும். ஆனால் வேறுபடும் இரண்டும் உண்மையாகவே உள்ளத்தில் தோன்றும். அறிவுக்கண்களால் பார்க்கும்போது அறிவியல் உண்மையாக தெரியும். உணர்வுக்கண்களால் பார்க்கும் போது கலையியல் உண்மையெனத் தெரியவரும்.[1]

### கீழைநாடு, மேலைநாடுகளின் கலைத் தத்துவம்

இந்தியக் கலைகளின் தத்துவம் - மகிமை, உபயோகம், கடைப்பிடிக்க வேண்டிய முறை இவைகளைப் பற்றிய அபிப்பிராயங்கள், நமக்கும் மேல்நாட்டவர்க்கும் முற்றிலும் முரணானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம் அழகு வாய்ந்ததென நாம் மதித்துப்பாராட்டும் ஒரு பொருள் அவர்களுக்கு கொடூரமானதாய்ப் புலப்படலாம்.

மேல் நாட்டவர் – சாதாரணமாகத் தங்கள் சௌகரியங்களுக்கும், வாழ்க்கைக்கும் தேவையான கைத்தொழில்களையும் கலைகளின் பகுதியாகவே மதிக்கின்றனர்.

தினசரி வாழ்க்கை முறைகளுக்கு – உபயோகப் படாததாகவும், அவர்களது பௌதிக மத வாதத்திற்கு இணங்காததுமான கலைகளை அவர்கள் பொருட்படுத்துவதில்லை.

கீழைநாட்டில், சர்வ வல்லமையுள்ள பரம்பொருளை – அடையத் தேவையான கர்மம், பக்தி, ஞான மார்க்கம் ஆகிய மூன்று வழிகளையும் நமது கலைகள் வெகு தெளிவாக உருவகப்படுத்தியுள்ளன.

ஆத்மபிரத்திய சுஷீகரணம் – (Self Realization) செய்வதற்கு நிதர்சனமான உருவமுள்ள பொருள் அவசியமானது என்பது நம் மதத்தின் முக்கியமானதோர் கொள்கை. நிர்வாண நிலையடைவதற்கு இசை, நிருத்தியம் முக்கிய சோபனங்களாகும்.

கலையின் உயர்ச்சிக்கு உரைகல் அக்கலையைப் பார்த்துக் கணிக்கும் கண்களே ஆகும். இதற்காகவே கோயில்களில் சிற்பங்களில் இசைக்கருவிகள் உட்பட சகல இறைவடிவங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

கலை வல்லான் முதலில் ஒரு வியக்தியையோ பொருளையோ, உருவகப்படுத்திக் கொண்ட பின்னரே தான் – அதை கலையில் புகுத்திச் சிறப்புறச் செய்கிறான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வித மானசீக உருவகமே ஒரு யோகாப்பியாச முறையாகும். புராண இதிகாச காவியங்களில் இவ்வித மனோபாவனைக்கும் பல உவமைகள் இருக்கின்றன.

நமது நாட்டுப் புராதனக் கலைத் தொழில்களும் கலைப்பயிற்சியும் தெய்வ வழிபாட்டுக்கு ஏற்றதும் மத சம்பந்தமானதுமாகவே இருக்கும்.

தெய்வீகத்தின் மகாத்மிகத்தை உருவகப்படுத்தி மக்களை நல்வழி நடக்கச் செய்வதே வலித கலைகளின் நோக்கம்.

இறைப்பக்தியில்லாமலிருந்தால் – நமது நாட்டின் உயரிய கேள்விச் சுடருக்கே ஒளியெனத் திகழும் காஞ்சி, எல்லோரா, மகாபலிபுரம், தஞ்சை, மதுரை போன்ற கோயில்களும் இன்னும் பல குகைகள் மண்டபங்கள், பலி பீடங்களும் கட்டப்பட்டிருக்க முடியாது.

தெய்வபக்தி, சத்தியம், நல்லொழுக்கம், சகோதரபாசம் போன்ற விழுமியங்களை அதிகரிக்க சிற்பங்களை ஊன்றிக் கருத்திற் கொள்ளும் போது கிடைக்கின்றன.

படிப்பு வாசனையேயில்லாது இசைக்கலை பயின்றவனும், சிற்பக்கலை பயின்றவனும் ஒரு பக்தி காரணமாகத்தான் கலையில் நிபுணத்துவமடைகிறான். அதனாலேயே அக்கலை அழியாது நிலைத்து நின்று வருகிறது.

லலித கலைகளின் உண்மையான அந்தரங்க இரகசியங்கள் மேல்நாட்டாருக்கு விளங்குவதில்லை. ஆனால் இன்று சுற்றுலாப் பயணிகள் வருகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது மட்டுமல்ல அவர்கள் அவற்றை பார்த்து பிரமிப்படையச் செய்யவைக்கின்றது நமது சிற்பக் கலைகள்.

**இறைவனே கலைகளின் மூலம் :**

சமயம் உணர்த்தும் உயர்ந்த தத்துவப்பொருட்கள் கண்ணையும், கருத்தையும் கவரும் அழகிய சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுக் கோயில் மூர்த்தங்களாக இடம்பெற்றுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனே எல்லாக்கலைகளின் தோற்றத்திற்கும் மூலமானவன் எனச் சித்திரிக்கும் நாதாந்த மூர்த்தம், இவற்றில் முதன்மையானது. ஏழிசையாய், ஏழ்நரம்பின் ஓசையாய், இசையின் பயனாய், ஓசை ஒலியெலாமாய், இசையின்தத்துவமாய் விளங்கும் இறைவனின் ஆனந்த தாண்டவமூர்த்தம், ஐந்தொழில் தத்துவத்தை அதாவது படைத்தல், காத்தல், அழித்தில், அருளல், மறைத்தலை எடுத்துக் காட்டுகிறது. இக் கூத்து இசையிலே ஆரம்பிக்கின்றது. ஆடவல்லானின் கையில் இருக்கும் உடுக்கை எனும் இசைக்கருவி படைத்தல் தத்துவத்தை விளக்குகிறது.

## உடுக்கையும் (துடி) உலகப் படைப்பும்

சிவபெருமானுடன் பிரிக்கமுடியாத தொடர்புகொண்ட வாத்தியம் டமரு எனப்படும் உடுக்கையாகும். நடனம் முடிந்தவுடன் நடராஜப்பெருமான் சனகர் முதலிய யோகிகளை காப்பாற்றவும் அருவமான தம்மை வெளிக்காட்டவும் உடுக்கையை ஒலிக்கச்செய்தார்.

உடுக்கையில் பேச்சுக் கலையைத் தவிர இசைக் கலையின் சகல சுரங்களும் அடங்கியுள்ளன. ஆகவே டமருவின் ஒலி அனைத்திற்கும் ஆதியான ஒலித்துடிப்பென்பது தெளிவாகின்றது. இக்கருத்து தந்திர சாரம் எனும் நூலில் முக்கிய இடம் பெறுகிறது.[2]

**தந்திரசாரம்** - "உடுக்கை பிந்து நாத சமன்ய சிருஷ்டியின் அறிகுறி" எனச் சுட்டுகிறது. இவ்வுடுக்கை அகர, உகர, மகரங்களில் உகரத்தின் நிலை என்பர். அகரமாகிய பரத்தையும் மகரமாகிய மாயையையும் உகரமாகிய உடுக்கை பிணிக்கின்றதென்பர். உடுக்கையின் இருபக்க வட்டத் தோற்பரப்புக்கு இரு பாலூமாய் உகரமாகிய தண்டம் என்னும் தட்டும் பகுதியை தட்டும்போது எழுப்பும் சுழல் வட்ட ஓசை அலைகளே நாதப் பிரம்ம ஒலிகள் என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானின் வலக்கையில் துடி என்னும் உடுக்கை பற்றி

"உடுக்கையில் பிறந்தது ஓசையில் சுழலே" – (சாத்தனாரின் கூத்த நூல்)

"தோற்றம் துடியதனில் தோயும் திதி யமைப்பில்" (உண்மை விளக்கம்)

என்றும் திருவைந் தெழுத்து முறையில், உடுக்கை சிகரமாகவும், சிருஷ்டியின் அதிபதியான சிவத்தைக் குறிக்கும். இதனை "சேர்க்கும் துடி சிகரம்" என்பார் மனவாசகங்கடந்த தேவர்.

"உடுக்கையில் எழும் ஓங்கார ஓசையாகிய நாதப்பிரம்மமே தோற்றத்திற்கு முழுமுதல்" – சுவாமி சுவாகானந்தர்

"நாதம் விந்துவின் நிலையைப் பெற்றுள்ளது. விந்துவில் அடங்கியுள்ள தோற்ற வித்துக்களை நாத ஒலி தட்டியெழுப்புகிறது."

படைப்பின் உதயகால நிகழ்ச்சிக்குத் துணையாவது அத்துடியோசை. துடி ஒரு தாள வாத்தியம்[1] காலப் பிரமாணத்தின் இயக்கம், இறைவனின் படைப்புகள் அனைத்தும் காலப் பிரமாணத்தில் இயங்கி வருவதை காட்டுவதுடன் இது இறைவனது கையகத்தில் என்பதையும் குறிக்கின்றது.

நாதம் நின்றால், பிரபஞ்சம் ஒடுங்கிவிடும். நாதத்தின் வழி சீவன் உயிர்புறுகிறது. உடுக்கையும் தீயகலும் பிரம்ம பகல். இரவின் சின்னம் என்பதும் உண்டு என ராவ் கூறுவதை ஸ்ரீ நடராஜ தத்துவத்தில் டாக்டர் வை. தட்சணாமூர்த்தி குறிப்பிட்டுக்காட்டியுள்ளார்.

அண்ட சராசரங்கள் அவன் இயங்கும் சீவன்கள் அனைத்தும் துடியோசைக்கேற்ப எங்கும் நடமிடுகின்றன. இறைவன் தனது துடியொலியால் உலகனைத்தையும் அழைத்து தனது இடது காலைத் தூக்கி அபயம் அளித்து ஆனந்த தாண்டவம் செய்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நர்த்தனம் தீர்ந்ததும் நடனத்தின் இராசராசராகிய சிவன் சனகாதி சித்தர் காணும் பொருட்டு தன் கையிலுள்ள உடுக்கையை பதினான்கு முறைதட்ட அதிலிருந்து பதினான்கு சிவ சூத்திரங்கள் தோன்றின" எனக் கூத்த நூல் இயம்புகின்றது.

## தாந்திரிக மயம்

தாந்திரிக மயம், இறைவனது துடியோசையில் சப்தஸ்வரங்களில் இசையோசைகள் எழுந்தன எனக் கூறுகின்றது. துடி ஆகாயத் தத்துவத்தின் சின்னம் என்றும், அதனின்று அதன் ஒசையினின்றே பிற நான்கு பூதங்களும் தோன்றின என்ற கருத்தும் உண்டு. ஆகாயத்தின் தோற்றம் ஓசையில் உதிக்கிறது என்பதே இதன் உட்கிடை.

## தாளமும், காலத்தின் அளவும்

தாளமே இசையனைத்துக்கும் அடித்தளம், தாளம் இன்றேல் அனைத்தும் கூளம். தந்தை – தாளமாகும். தாய் – பண்ணாகும். இறை பாடலுக்கு தாளமே அனைத்திற்கும் அடிப்படை. "கொட்டாட்டுப் பாட்டாகி நின்றானை" என்று கொட்டினை முதலில் கூறிய பின்னர் ஆடல், பாடலை நிறுத்தியுள்ளார் சுந்தரர்.[3] தாளம் என்ற இசைக்கருவி இசைக்கு அடித்தளம் போன்றது. தாளத்தின் ஒசையே முதலில் தோன்றிய ஓசை. இதனால் "ஒசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்றார் அப்பர்.

தாளம் என்பது காலத்தை அளந்து நிறுத்துவது. காலத்தின் கட்டளவுகள் கொண்டது. தாளம் உலகம் சுற்றுதலில் உள்ளது. குருதி ஓட்டத்திலும், நரம்புத் துடிப்பிலும் நெஞ்சத் துடிப்பிலும் உள்ளது. சூரியனின் செலவும், உலகம் சுற்றுதலும், காலத்தின் அளவு கொண்டது (கணம்) எனவே உலகெல்லாம் ஆள்கிறது. "சென்று விட்ட காலம் மீள வராது" எனும் தத்துவத்தை புகட்டி நிற்கிறது. கணங்களின் அளவிலே கொட்டிச்செல்லும் பறையைச் சங்க காலத்தில் கணப்பறை என்று கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போன்றதே துடி. கொட்டும் பறை துடிப்பறை என்றானது. காலத்தின் அளவை (கணம்) காட்டவே ஆலயச் சிற்பங்களில் உள்ள அளவிடமுடியாத கணங்கள் தாள இசைக்கருவிகளுடன் காணப்படுகின்றது எனக் கொள்ளலாம்.

## தாளத் தெய்வயியல் (தாள உறுப்புகளுக்குத் தெய்வங்கள்)

தாள உறுப்புக்கள் துடி, துரிதம், இலகு, குரு, புலுதம், காகபதம் என்பவையாகும்.

துடி – வருணன்

துரிதம் – துர்க்கை

இலகு – மாயோன்

குரு – இந்திரன்

புலுதம் – பிரமன்

காகபதம் – ஆகாயம் அல்லது வாயு பகவான்

## சிற்பங்களில் காணப்படும் உலோகத் தாளக் கருவியின் உறுப்புகளும் தெய்வங்களும்

1. கை விரல் பத்து – உடன் பிறந்த பாண்டவத் தேவர்கள்
2. மேல்வட்டம் கீழ்வட்டம் – சோமன் ஆகிய சந்திரன், அருக்கனாகிய சூரியன்
3. குமிழ்கள் – சரஸ்வதி, இலக்குமி
4. துளை – வாயுபகவான்
5. கயிறு – வாசுகி எனும் பாம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சமுகவாத்தியமும், சிவனின் பஞ்ச முகங்களும் (குடமுழா)

பஞ்சமுக வாத்தியங்களுக்கு ஐந்து முகம் உண்டு. பஞ்ச முக வாத்தியத்தின் ஐந்து முகங்களும் சிவபெருமானின் பஞ்சமுகங்களாகக் கருதப்படுகின்றன.

நடுவில் - ஈசானம்

வடக்கில் - வாமதேவம்

கிழக்கில் - தற்புருடன்

தெற்கில் - அகோரம்

மேற்கில் - சத்தியோஜாதம்[4]

## நாகசுரமும், ஓங்கார நாத ஒலியும்

நாகசுர கானம் வசியம் மிகுந்தது. ஓம் எனும் மங்கல ஓங்கார நாத ஒலியே இவ்வசியத்தின் மூல காரணம்.

இதன் மேலணைசு - ஆகாயமெனவும்

கீழணைசு - பிருத்திவியெனவும்

(சீவாளி கொறுக்கைத்
தட்டை என்னும் நாணற்
புல்லினால் ஆனது) - சிதம்பரம் எனவும்

வெளிவரும் நாதம் - சிவம் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

மேலும் இறைவழிபாட்டில் முதலிடம் பெற்றுவிளங்கும் நாகசுரத்திற்கும், தெய்வங்களுக்கும் உறவு ஏற்படுத்த நமது முன்னோர்கள் இறை பக்தியை ஒவ்வொரு இடத்திலும் வெளிபடுத்தியுள்ளனர். அதற்குச் சான்று இக்குழற் கருவியின் ஒவ்வொரு உறுப்போடும் ஒரு தெய்வத்தை அல்லது தேவதையைத் தொடர்புடையதாக்கி கூறுகின்றன இசை நூல்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கீழணைசின் அடி வட்டம் | – | சூரியன் |
| கீழணைசு | – | பூமி, சக்தி |
| மேலணைசு | – | ஆகாயம், சக்தி |
| மேல்சுற்று | – | அஷ்டநாகங்கள் |
| மேலிடுசில் | – | சந்திரன், வாயு |
| மேல்சிறுதுளை | – | சக்தி |
| உட்பெருந்துவாரம் | – | விஷ்ணு |
| கெண்டை (செப்புத் தகடு) | – | பிரம்மா, அக்னி |
| சீவாளி | – | சிதம்பரம் |
| சீவாளிச்சரம் | – | தேவர்கள், வாசுகி |
| கிண்ணா | – | இந்திரன் |
| அரசு | – | ஈசன் |
| ஔவு (உளவு) | – | திருமால், இந்திரன் |
| குச்சில் | – | முருகன் |
| முதல்துணை | – | ஈசன் |
| இரண்டாம் துளை | – | கௌரி |
| மூன்றாம் துளை | – | திருமால் |
| நான்காம் துளை | – | அகத்தியர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஐந்தாம் துளை | – | பிரம்மன் |
| ஆறாம் துளை | – | இந்திரன் |
| மற்ற ஆறு துளைகள் | – | ஆறு சாத்திரங்கள் |
| நாதம் | – | ஜோதி, சிவன் |
| ஏழு துளைகளின் ஒலி | – | சப்த கன்னியர்[5] |

## தவிலும், இறை சக்தியும்

தவில் சிவா அர்ப்பணமாகக் கருதப்படும் ஒரு கருவியாகும். இதனாலேயே அண்டமாகவும், நாதமாகவும், ஓம் என்ற பிரணவ ஒலியாகவும் கருதுவர். தவிலில் கழியைப், பிரம தண்டம்" எனப் பெயரிட்டனர். கோயில் உற்சவ காலங்களில் சிவாச்சாரியார் தவிலைப் பிரம தண்டத்தால் வாசித்து இறைவழிபாடு இயற்றுவர். சிவனுக்கு அணிவித்த பூமாலையை தவில்காரருக்கு அணிவிப்பது இவரையும் இறைவனாகக் கருதுதலாகும்.

## மணியும், இறை நாத உணர்வும்

உலகின் ஒலியே முதல் தோற்றம். ஒலியின் வடிவம் ஓம். இதுவே மூலமந்திரம். எனவே மணி ஒலியை உணர்த்தும் சின்னமாகும். இஃது இறைவனின் மந்திர ஒலிவடிவைக் குறிப்பதாயிற்று. நாத தத்துவத்திற்கு இறைவனே தலைவன் என்பதை உணர்த்தத் தெய்வீகப் படிமங்களில் அடையாளப் பொருளாகக் கொள்ளப்படுகிறது.[6] ஆறு கரங்களாக, எட்டுக்கரங்களாக இறைவடிவங்கள் முறையே ஆறுமுகன், துர்க்கை போன்ற தெய்வங்கள் கைகளில் உள்ள மணி, சிற்பங்களில் இடம் பெறுதலைக் காணலாம். மார்க்கண்டேயனுக்காக யமனை அழிக்க சிவன் எடுக்கும் கால சம்காரத்தில் ஒரு கையில் மணி உள்ளது. எல்லா ஆலயங்களிலும் மணி உலோகச்சிற்பமாக காணப்படுவதும் இறைநாத உணர்வை காட்டும் தத்துவமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீரக்கழலும், பழவினை அறுத்தலும்**

இது கயிற்றில் கட்டிய சிறுமணி, இது கண்டை எனவும் பெயர் பெறும். இது போர் வீரர்களது வெற்றிச் சின்னம். இதனை கெண்டைக்காலில் அணிந்து கொள்வர். நடராஜப் பெருமானின் காலில் கட்டப்பட்டிருக்கும் வீரக் கழல் தத்துவப் பொருளுடையது. உயிர்களின் பழவினைகளை அறுப்பது வேகங்கெடுத்தாண்டு வீடுபேறளிக்கும் வேந்தன் சிவபெருமான் என்பதை இஃது உணர்த்தும்.[7]

**சங்கும், ஆக்கத் தொழிலும்**

விஷ்ணு மூர்த்தம் பிடித்திருக்கும் சங்கிற்கு பாஞ்சஜன்யம் என்று பெயர். சங்கிலிருந்து ஓங்கார ஒலி எழுப்புவதால் இஃது ஆக்கத் தொழிலைக் குறிக்கும் சின்னமாகும். இச் சங்கு ஐம்பூதங்களுள் ஒன்றான வானத்தை குறிக்கும் என்பர் ஒரு சாரார். இசைக்கருவியாகிய சங்கு இறைவடிவங்களது ஆயுதங்களாகக் கொள்ளப்படுகின்றது இதனால் இதற்கு மனித உருவம் அளிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி சங்கானது பெண்ணாக காட்டப்படுகிறது.[8]

**யாழும், கொடியவர்களை அழித்தலும்**

தமிழ்நாட்டில் ஆதியாழ் என்ற முதல் யாழ் இருந்தது. பூவுலகிலேயே முதல்யுகம் என்று கருதப்படும் கிருதயுகத்தில் கொடியவர்களான அரக்கர்களை அடக்க இது வாசிக்கப்பட்டது என்று புராணங்கள் கூறுகின்றன.[9]

**மத்தளமும், ஓசைகளின் படைப்பும்**

"நான்முகனார் மத்தளம், சல்லி திருமாலாம் என்னும் போது மத்தளத்தை, நான் முகன் என்றும் அழைப்பர். நான்முகன் பல உலகங்களைப் படைப்பது போல், மத்தளம் பலவோசைகளைப் படைப்பது. அதனால் மத்தளம் நான் முகன் எனப்பட்டது. [10] சிவனார் திரு நடனத்திற்கு நான்முகன் மத்தளம் முழங்குபவன். எனவே மத்தளம் நான்முகன் எனப்பட்டது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**வீணையும், மானுடசரீரமும்**

வீணா சரஸ்வதி தேவியின் வாத்தியம் என்பது யாவரும் அறிந்ததே சகலகலாவாணியாகிய கலைமகள், வீணா புத்தக தாரிணியாக உருவகப்படுத்தப்பட்டுள்ளாள். நாதம், அறிவு இரண்டிற்குமே அவள் மூலாதாரம். இவள் வாசிக்கும் வீணை கச்சபி வீணை என அழைக்கப்படும். செங்கோட்டியாழின் வளர்நிலையே வீணையாகும் என்கின்றனர் இசை வல்லுனர்கள். கடவுள் படைத்த வீணைக்கு எவ்வாறு சரம், வயிறு, நாக்கு, தசைகள் ஒலி, ஸ்பரிசம், தோல் உள்ளனவோ, அவ்விதமே மனிதர் அமைத்த மரவீணைக்கும் இத்தகைய அவயவங்கள் உள்ளன.[11] ஒரு மானுட சரீரத்தின் அமைப்புக்கும், அளவுக்கும், ஏற்ப வீணையின் அமைப்புக்கும் அளவுக்கும் ஒத்திருக்கும் மகத்தான தத்துவத்தை ஆபிரகாம் பண்டிதர் விளக்கிக் காட்டுகின்றார். (படம் - பக் 116) வீணா தண்ட மென்றழைக்கப்படும் முதுகெலும்பு - 24 கோர்வை போல, வீணை - 24 மெட்டுக்களாலானது.

24 மெட்டுக்குமேல் தந்திகள் நிற்கும் மெட்டு வரையும் எவ்வளவு இடம் காலியாயிருக்கிறதோ அப்படியே முதுகெலும்பின் மேலுள்ள சிரசின் பாகமுமாயிருக்கிறது.

அவரவர் கைக்கு அவரவர் உடம்பு எட்டு சாணாயிருக்கிறது போலக், கீழ் மூலத்தின் நடுமத்தியிலிருந்து மேல் மூலத்தின் மத்திவரை நாலு சாணாயிருக்க வேண்டும். அப்படியே வீணைக்கும் மேரு முதல் மெட்டு வரையுள்ள முக்கிய பாகம் நாலு சாணாயிருக்கும். எப்படி மானுட சரீரம் தோல், எலும்பு தலை, மூளை, சுக்கிலம், இரத்தம், மச்சை என்னும் ஏழு தாதுக்கள் பெற்று பூரணமாயிருக்கிறதோ அப்படியே வீணையும் ஏழு தந்திகளினால் பூரணமடைகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புல்லாங்குழலும், ஜீவாத்மா அழைப்பும்

யாழில் இசைக்க இயலாத சுரங்களை குழலில் இசைக்க முடியும். புல்லாங்குழலாகிய மூங்கில் மண்ணில் மண்சத்தில் முளைத்தது. அதனுள் வெப்பம் உள்ளது காற்றுள்ளது. ஈரப்பசை உள்ளது. வெற்றிடம் உள்ளது. எனவே புல்லாங்குழலில் ஐம்பூதச் சேர்க்கையைக் காணலாம்.

கிருஷ்ணனின் கருவியாக குழல், மரங்கள் முதலிய நிலையா பொருள்களும் மனிதன் முதலிய இயங்கியல் உயிர்களும் குழலிசையின் மயமாய் உடம்பும், உடம்பால் உணரும் ஐம்புலன்களும், அந்தக் கரணங்களுமாய் வேறுபட்டனவெல்லாம் வேறுபாடின்றி ஒன்றாகும் தன்மையது.

கண்ணனின் குழலோசை ஜீவாத்மாக்களை பரமாத்மா அழைக்கும் இசையாகக் கருதப்படுகிறது. மனித உள்ளம் குழலைப்போல் காலியாக்கப்படவேண்டும். அப்போதுதான் பகவான் தன்னுடைய மூச்சுக் காற்றை அதனுள் செலுத்தி அதைக் குழல்போல் வாசிக்கத் தொடங்குவான். சிற்சில மனிதர்கள் ஒரு வித தியானத்திலிருக்கும்போது அவர்களுடைய காதுகளில் குழல் மணி இவற்றின் ஓசை ஒலிப்பது அவர்கள் அனுபவித்த உண்மைகளாகும். [12] ஆனாயநாயனார் திருக்கதையிலிருந்து ஐம்பூதம் பற்றிய குறிப்பு ஒன்றையும் நாம் அறியலாம்,

"அன்பூறி மிசைப் பொங்கும் அமுத
இசைக் குழல் ஒலியால்
வன்பூதப் படையாளி எழுத்து
ஐந்தும் வழுத்தித்தாம்"[13] (பெரிய. அநாய.22)

எனச் சிறப்பிக்கின்றது

படைத்தான் படைத்தானா மாத்திரையைப் பாங்கா
யடைத்தே யமைதியற்று மாலோன் – மடக்கொடியாய்
வீடானார் வீடாய் விரிசடையோன் மெய்ப்பொருளை
யாடினா னாதியாயன்று"[14]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையின் காலக்கணக்குகளை நான்முகன் படைத்தான். அவற்றைத் திருமால் அமையச் செய்தான். சிவன் அவற்றை அணிந்து கொண்டு ஆடினான் என்று பஞ்ச மரபு கூறுகின்றது.

## ஓசை ஒலி ஆனான் ஈசன்

ஓசை ஒலி எலாம் ஆனான் இறைவன். அந்த ஓசையை உடல் மூலம் தான் உணரமுடியும். ஓம் எனும் தெய்வட் திருமந்திரமாம் இறைவன் அனைத்துமானவன் என்று திருமுறைகூறுகிறது. ஓசையைக் தொழுததனால் உடலுடன் அனாய நாயனார் விண்ணுலகு சென்றார்.

ஓசை வடிவானவன் இறைவன் (எ–டு)

1. ஏழோழுசையர் – சம் 14:3:3 (129,136)

2. வண்ண வண்ணத்தார் – சம் :4

3. பண்ணிடை ஒன்பதும் உணர்ந்தவர் – 1 : 79 : 3

4. பண்ணும் பலவோசைத் தமிழவையும் – சம் : 1 : 11 : 4

5. பாலையாழ்ப் பாட்டு கந்தார் – சுந் : 7 : 108

6. வண்டமிழ் வல்லவர்கள் ஏழிசை ஏழ்நரம்பின் ஓசையை – சுந் : 7 : 33 : 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருவி ஓசையின் நிறம்

இசைகருவிகளின் இசையை நிற அடிப்படையில் வகைபடுத்தியுள்ளார் பஞ்சமரபு ஆசிரியர்.

| | |
|---|---|
| குழலில் (வங்கியம்) பிறக்கும் ஓசையை | – சுத்தநிறம் |
| வீணையில் பிறக்கும் ஓசையை | – சாயைநிறம் |
| யாழில் பிறக்கும் ஓசையை | – தமிழ்நிறம் |
| இவை கலந்த ஓசை | – கலப்புநிறம் |

வீணையில் கிளியின் ஓசையும், யாழில் குயிலின் ஓசையும் ஒப்புமையாகபிறக்கும் என்றனர் இசை ஆசிரியர்

## உடல் ஒரு சாரீர வீணை

ஐம்பெரும் பூதங்களின் சேர்க்கைதான் மனித உடல். நமது கண்ணுக்குப் புலனாகும் உலகின் புறவெளித்தோற்றத்தை இறைவனின் உடலாகவும், உலகில் காணுகின்ற உயிர்த் துடிப்பாகவும் கொள்ளும் மரபு தமிழகத்தில் உண்டு. மனித உடலால் நாதனின் உடல் இயல்புகளை உணர்தல் வேண்டும் என்பது சான்றோர் கொள்கை.

பூதங்களைந்தாய் பொறி ஐந்தாய் மெய்யைந்தாய்
வாதனை ஐயைந்தாய் மாருதமு மேதகு சீர்ப்
பத்தாகும் நாடிகளும் பத்தென்பர் பாரிடத்தே
முத்திக்கு வித்தாம் உடம்பு – இது பஞ்சமரபுப் பாடம்
பூத வகைகளோ ரைந்தாய்ப் பொறியைந்தாய்
வாதனை யோரைந்தாய் மேதகு சீர்ப்
பத்தாகும் நாடிகளும் பத்தாகும் பாரிடத்தே
முத்திக்கு வித்தாம் உடம்பு – அடியார்க்கு நல்லார்பாடம்

இது பூத பரிணாமம் உணர்த்துகிறது.

Arasady Public Library
Municipal Council
Batticaloa



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதங்கள் ஐந்து - நிலம்,நீர்,காற்று,நெருப்பு,ஆகாய வெளி

பொறி ஐந்து - கண்,காது,மூக்கு,வாய்,மெய்

புலன் ஐந்து - சுவை,ஒளி,ஊறு,ஓசை,நாற்றம்

**வாதனை ஐயைந்தாவன**

1. நரம்பு, இறைச்சி, எலும்பு, மயிர், தோல் - 5
2. நீர், மூளை, சுக்கிலம், நிணம், உதிரம் - 5
3. பசி, சோம்பல், புணர்ச்சி, காட்சி, நீர்வேட்கை - 5
4. போக்கு, வரவு, நோய், கும்பித்தல், மெய்பரிசம் - 5
5. வெகுளி, மதம், மானம், அகங்காரம், கோபம் - 5

ஆக ஐயைந்து - 25

பிராணன் முதலிய பத்தும் தச நாடிகள். இடைபிங்கலை முதலிய பத்தும் மூலாதாரத்து எழுபத்தாறாயிரம் நாடிகளும் பீர்த்தங்கூட்டின் மூன்று கண்ணும் போல இடை,பிங்கலை சுழுமுனை என்னும் மூன்று நாடிகளுமாய் நடுவு நின்ற சுழுமுனை யொழிய இரண்டனும் மேனோக்கியேறி இரண்டு மூக்கானுடம் ஓரோர் பாரிசத்து ஐந்து நாழிகையாகக் கொண்டு ஒரு மாத்திரையில் நூற்றியிருப்தைந்து சுவாதமாய் ஒரு சுவாத்திலே பன்னிரண்டங்குலிளவு புறப்பட்டு, நாலாங்குலி தேய்நீது எண் விரலடங்குகின்றது பிராண வாயு எனக்கொள்க. இவ்வாறு அ. நல்லார், சிலம்பு அரங்கேற்று காதையில் உடல் ஒரு சாரீர வீணை என்னும் கட்டுரைத்தலைப்பின் கீழ் விளக்கியுள்ளார்.[15]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசைப் பயிற்சியும், முத்திக்கு வித்தான உடம்பும்

உடம்பு தூயது. அது இறைவனின் அருட் கொடை. இறைவனுறையும் கோயில். உடம்பு இதனை தூய்மையாய் (துப்புரவாய்க்)காக்கும்முறை - அபான வாயுவால் அசுத்தம் போக்கி, வியானனால் - நாடி நரம்புகளை முறுக்கேற்றி சாமானனால் அளவும் வகையும் அறிந்து உண்டு குருதியாக்கி, கிருகரனால் வெகுளி முதலிய தோற்றமறிந்து நீக்கி குணநலம் பெருக்கி, உதானனால் எண் இடத்தில் பொருத்தி இசை உண்டாக்கி, கூர்மனால் உறக்கம், விழிப்பு ஒழுங்குறப்பேணி, தேவதத்தனால் தாது முதலியவைகளைத் தேக்கி, உடலை ஓம்புதல் கடனாகும் முத்திக்கு வித்து உடம்பே. [16]

உயிரன் - பிராணன் - பத்து வாயுக்களுள் தலையாயது. பிராணவாயு நின்றுவிட்டால் பிராணன் போயிற்று என்று கூறுவார்கள். இசையானது பயிற்சியால் உயிரின் தூய்மை காக்க வேண்டும்.

மலவாயு - (அபாநன்) கழிவுதள்ளும் வாயு. இசையாளர்கள் மலவாயு தேங்கிக்கிடக்காமல் உட்புறத்தூய்மை காக்கவேண்டும்.

உதானன் - உணவுகளை அழித்து செரிமானத்திற்கு ஏற்ப உயர்வான மென்மையான நிலைக்குக்கொண்டு வருவது. காற்று குரல் வளையிலிருந்து ஒலிக்குரிய வளையை ஒலியாக மாற்றுவது.

சமானன் - உணவை பற்றி அதனை இரத்தத்திற்கு சமம் ஆக்கும் ஆற்றலுடைய வாயு.

கூர்மன் - உணர்ச்சியை உண்டாக்குவது. இழந்த ஆற்றல்களை மீண்டும் பெறச்செய்வது. உயிர் தருவது.

வியானன் - நாடிகள் எல்லாவற்றிலும் கலந்து விரிவாகிப் போக்கு வரவு செய்து இயங்குமாறு பரவி நிற்பது.

கிருகரன் - கிரு என்பது செய். கோபத்தை செய்பவன் (உருவாக்குபவன்) எனவே கோபத்தை சீராக்க வேண்டும் என்பதனால் கிருகரன் என்றார் இசை நுணுக்கமுடையார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனஞ் செயன் – உயிர் போன பிற்பாடு உடம்பில் தங்கி, மூன்றாம் நாள் உதிப்பித்து உச்சந்தலையின் பின்பாகத்தில் வெடிப்புண்டாக்கி வெளியேறும் காற்று என்று இசை நுணுக்கமுடையாரின் வெண்பா கூறுகிறது.

நாகன் (விக்கலன்) – விக்குதல் போன்ற செயலை செய்விப்பது.

தேவதத்தன் – (இளைப்பாற்றுநன்) ஓட்டமும் இளைப்பும் வியர்தலும் விளைவிப்பது தேவதத்தன்

இவற்றால் அறிவன

கி.பி 2 ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் இருந்தே குரல் நிலைகளைத் தாக்கும் வாயுக்களையும், ஒலி வளம் செய்யும் வாயுவின் முறைகளையும், தண்டமிழ்ப் புலவர்கள் அறிந்து ஆய்ந்து பகுத்து வகுத்து வைத்திருந்தமையறியலாம். பாடுவோர் உடலில் இயங்கும் வாயு வகைகளைச் செம்மைப்படுத்திக் குரலை வளப்படுத்திக்கொள்வது வற்புறுத்தப்பட்டுள்ளது.

## பிரம்பும், தெய்வங்களின் அளவுகளும்

முதல் ஒரு சாண் – சிவன்

அடுத்த இரு சாண் – திருமால்

அடுத்த அரைச்சான் – பிரமன்

இவ்வாறு பிரம்பில் தெய்வங்கள் உறைகின்றார்கள். இப்பிரம்பின் ஓசையின் மூலம் (இசையின் மூலம்) நாட்டியமாடுபவர்கள் ஆட்டுவிக்கப்படுகின்றனர். முரசு, முழவு, கோலாட்டம் கொட்டுவதற்கு பயன்படுத்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்களின் வகையும், இசைத்தத்துவமும்

| | | |
|---|---|---|
| ஓரறிவுயிர் | – | உற்றறியும் திறனுடையது<br>புல், செடி, கொடி, மரம் |
| ஈரறிவுயிர் | – | உற்றறிவு, சுவையறிவு<br>சங்கு, நத்தை |
| மூவறிவுயிர் | – | உற்றறிவு, சுவையறிவு, மோந்தறிவு<br>செல், எறும்பு |
| நான்கறிவுயிர் | – | உற்றறிவு, சுவையறிவு, மோந்தறிவு, கண்டறிவு<br>நண்டு, தும்பி |
| ஐந்தறிவுயிர் | – | உற்றறிவு, சுவையறிவு, மோந்தறிவு, கண்டறிவு, கேட்டறிவு<br>விலங்கு, மாக்கள் |
| ஆறறிவுயிர் | – | மனிதர்[17] |

ஓரறிவிலிருந்து ஆறறிவு படைத்த உயிர்கள் அனைத்துமே இசைக்கு மயங்கும் தன்னையுடையன, இத்தகைய உயிரினங்கள் அனைத்துமே இசைக்கு மயங்குகின்றன என்பதை சிற்பங்களில் காண்பது கண்கூடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மனித முள்ளந்தண்டிலுள்ள எலும்பும்,
வீணையுடனான - தொடர்பும்
(ஆதாரம் - மு. ஆபிரகாம் பண்டிதர் கருணாமிர்த சாகரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் ஆறு

## இசைக் கருவிகள் – சமூகவியல் பார்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. கோயிற் சிற்பங்களில் இசைக்கருவிகள் - சமூகவியல் பார்வை

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"
"திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும் அடவி காடே"

என்று நம் முன்னோர் கூறியுள்ளனர். ஆலயங்களில் நாகரிகம் அடைந்த சமுதாயத்தில் வெளிப்படையாக கலைகள் விளங்குகின்றன. பண்பாட்டைப் பேணிக் காப்பாற்றி பண்புள்ள மனிதனை உருவாக்க கலைகள் துணைபுரிகின்றன. உள்ளத்தால் எழும் உணர்வுகளுக்குப் பொருளும், அழகும் நிலைபேறும் தரும்போது கலை உருவாகி விடுகிறது. கலை, கலைக்காகவேயன்றி வாழ்க்கைக்காகவே என்பது நம் நாட்டு கணிப்பு.

இறைவழிபாட்டோடு தமிழரது கலைகள் அனைத்தும் ஒருமைப்பட்டு விளங்குகின்றன. ஆலயங்களே அவற்றின் கருவூலங்கள். தெய்வத்தைக் கலையாகவும், கலையைத் தெய்வமாகவும் தமிழர் போற்றியுள்ளனர்.

குழலூதும் நிலையில் – கண்ணன்
ஆடல் நிலையில் – ஆடல் வல்லான்
வீனை இசைக்கும் நிலையில் – கலைமகள்
மத்தளம் கொட்டும் நிலையில் – நந்தியெம்பெருமான்
தாளத்தோடு பண்ணிசைக்கும் நிலையில் – சமயக்குரவர்கள்

ஆலயங்கள் கலைகளையும் பேணிக் காக்கும் காப்பிடமாகவும், பிறப்பிடமாகவும் விளங்குகின்றன.

## ஆலயங்கள்

மன்னர்கள் கட்டிய அரண்மனைகள் அழிந்துவிட்டது. ஆனால் அவர்கள் வளர்த்த கலைப்பொக்கிஷங்கள், கோயில்களில் வாழ்கின்றன. அவர்கள் வாழ்ந்த அரண்மனைகள் அரசர் சொத்து, ஆலயங்கள் சமுதாயச் சொத்து. எனவே கோயில்கள் சமுதாயத்தோடு பின்னிப் பிணைந்து காணப்படுவது உண்மை. அதற்கு அழிவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரலாற்றுப் பெட்டகம்**

தமிழகம் தந்திட்ட இசைக்கலை வரலாற்றில் எந்தெந்த காலத்தில் எந்தெந்த மன்னர்கள் வாழ்ந்தார்கள்? அவர்கள் வளர்த்த கலைகள் எவை? அவர்கள் காலத்தில் வாழ்ந்த நாயன்மார்கள், ஆழ்வார்கள், பிற அருளாளர்கள் ஏற்படுத்திய இசைத்தமிழ் புரட்சிகள் என்பவற்றை அறியும் வரலாற்றுப் பெட்டகமாக திருக்கோயில், இசைச் சிற்பங்கள் பதிலளிக்கின்றன.

**ஆலயச் சிற்பங்களும், இசைச் சிறப்பும்**

யாழ், தாளம், சங்கு, குடமுழா, புல்லாங்குழல், மத்தளம், உடுக்கை, நாகசுரம், எக்காளம், பேரிகை, முரசம், வீணை போன்ற இசைக்கருவிகளையும், இசைப்போரையும் சிற்பங்களில் காணமுடிகின்றது. இவற்றை கோயில்களில் உருவாக்கியமைக்குக் காரணம் இசையும், இசைக்கருவிகளும், இறைவழிபாட்டிற்கும் ஆன்ம முத்திக்கும் இன்றியமையாதவை என்பதை உணர்த்துகின்றது.

**கோயிலில் உள்ள இசைச் சிற்பங்களும் அறுவகைச் சமய ஒற்றுமையும்**

சிவன் கோயில்களில் சிவன் ஊர்த்துவ தாண்டவம் ஆடும் காட்சியில் நந்தி முழவு கொட்ட, திருமால் இடக்கை முழங்க, நாரதர் சின்னரம் இசைக்கின்றார்கள்.

சிவன் திருமணக் காட்சியில் திருமால் தேவியின் அண்ணனாக சங்கு சக்கரதாரியாக உமையின் கையை சிவனிடம் ஒப்படைக்கின்றார். சரஸ்வதி வீணை வாசிக்கின்றார், நாரதர் தம்புரா வாசிக்கின்றார், நந்தி மிருதங்கம் முழங்குகின்றார், இசைவாணர்கள் நாதஸ்வரம், இசைக்கின்றனர் இதுபோன்ற சிற்பங்களை சோழர்கால ராஜகோபுரங்களில் காணமுடிகின்றது. (எ-கா – திருபுவனம்.)

புல்லாங்குழல் வாசிக்கும் கண்ணனின் சிற்பங்கள் சிவாலயங்களில் காணப்படுகின்றன. (எ-கா – தாராசுரம்)

**மாங்கனி பெற்ற கதை**

மாங்கனி பெற்ற கதையில் சிவன், உமை, பிள்ளையார், முருகன் ஒரே குடும்பமாக காட்டப்படும் சிற்பங்களில், கதைக்குரிய கதாநாயகன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நாரதா) கையில் தம்புராவும், சிப்ளாக்கட்டையுடனும் காணப்படுகின்றனர். (எ-கா) திருபுவன கம்பகரேஸ்வரர் ராஜகோபுரம்

## இராமாயண, மகாபாரத இசைச் சிற்பங்கள்

விஷ்ணுவின் அவதாரச் சிற்பங்கள் இசைக்கருவிகளுடன், சிவன் கோயில்களில் காணப்படுகின்றன. எனவே சமய ஒற்றுமையை காட்டும் சிற்பங்களில் இசைக்கருவிகளும், அதன் நாதமும் முக்கிய இடம் பெறுகின்றன.

## இராவணனும், சாமகானமும்

இராவணன் மிகுந்த கலை வல்லோனாக இருந்தானென்றும், சங்கீதத்தில் தேர்ச்சி பெற்றிருந்தானென்றும் இராமாயணத்திலிருந்து அறிகின்றோம். இதில் சாமவேதம் பாடி கைலைமலையை வேரோடு பிடுங்கி எடுக்கையில் அதன் கீழ் பரமசிவனால் நசுக்கப்பட்டானென்றும் அப்போது பாரம் பொறுக்காமல் பரமசிவனைச் சாமவேதத்தினால் கானம் பண்ணினானென்றும் சொல்லப்படுகின்றது. தெய்வ தோத்திரங்களடங்கிய சாமவேதத்தினை சங்கீதத்தின் பூர்ண சுரங்களோடு முதன் முதல் பாடியவன் இராவணனே. இந்த செய்திகளை இன்றைய தலைமுறை மட்டுமல்ல எதிர்கால தலைமுறையினரும் உணர அறிய வைப்பவை கோயில் இசைச் சிற்பங்கள். (எ-கா) தாராசுரம், கங்கைகொண்ட சோழபுரக் கோயிற் புடைப்புச் சிற்பங்கள்.

## சாதாரி இராகமும், விஞ்ஞானமும்

தனது பக்தனாகிய பாணபத்திரனுக்காக விறகாளாகி "சாதாரி" இராகம் பாடி வடநாட்டு வீணை வித்துவானாகிய ஏமநாதனை ஓடும்படிச் செய்தானென்று புராணத்தால் அறிகின்றோம். சாதாரி ராகம் பாடிய காலத்தில் அவ்வின்னிசையினால் அங்கிருந்தவர்கள் மெய் மறந்து துரிய நிலைக்கு வரவும், பட்டுப்போன மரங்கள் தளிர்த்து பூக்கவும் ஆரம்பித்தன என்றும் சொல்லப்படுகின்றது. இன்றைய விஞ்ஞானமும் இசைக்கருவிகள் தரும் இன்னிசை மூலம் மரங்கள் நல்ல பயனைத் தரும் என்பதை ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. இன்றைய விஞ்ஞானத்தை அன்றே எடுத்து விளக்கியுள்ளது எமது இசைக்கருவிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விநாயகர் நடனம்

சிவாலயங்களில் விநாயகர் நடனம் ஆட இசை வழங்கும் தேவமகளிர், சிவகணங்கள் இடம்பெற்றுள்ளன. (எ–கா) கங்கைகொண்டசோழபுரம்

### தமிழ் நாட்டையே காப்பாற்றிய இசை

தமிழ் மலையாகிய பொதிகை மலையைக் கைப்பற்றிக்கொண்டால் தமிழ்நாட்டை வளைத்து ஆட்சிபுரிதல் எளிது என்றெண்ணினான் இராவணனாகிய இலங்கை வேந்தன். அந்த எண்ணத்தைச் செயல்படுத்தும்போது, அங்கு முத்தமிழ் முனிவராகிய அகத்தியர் அமர்ந்திருக்கக் கண்டான். இராவணன் வல்லரசனாயினும் இன்னிசையில் வல்லவன். நாரத முனிவரும் நயக்கும் வண்ணம் நல்லிசை பாடவல்லவன். வீணையில் சாமகானம் பாடி ஈசனது இன்னருளைப் பெற்றவன்.

இசைக் கலையில் இத்தனை ஏற்றம் வாய்ந்த இராவணன் தமிழிசையில் புகழ் பெற்ற முனிவரிடம் தன் கைவரிசையைக் காட்ட முற்பட்டான். அவன் கருத்தறிந்த தமிழ் முனிவர் இசைக் கருவியாகிய யாழை மீட்டத் தொடங்கினார். அவர் பாட்டொலி கேட்ட பறவைகளும், விலங்குகளும் பரவசம் உற்றன. எதிரே நின்ற பாறை இளகிற்று. அரக்கர் கோன் உள்ளமும் இளகிற்று. அந்த நிலையில் அகத்தியரை நோக்கி "என் உயிரினும் இனிய இசை ஞானியே! உமக்கு என்ன வேண்டும்?" என்றான் இராவணன்.

தமிழ்நாட்டைக் காப்பதற்கு ஏற்ற சமயம் வந்துற்றது என்று அறிந்த அகத்திய முனிவர் "ஐயனே இந் நாட்டினுள்ளோர் எவருக்கும் நீ இடரிழைக்காமல் இருக்க வேண்டும்" என்றார். அதற்கு இசைந்து இராவணனும் பொதிகை மலையை விட்டகன்றான். இச்செய்தியை தொல்காப்பிய பாயிரவுரையிலும், மதுரைக்காஞ்சியுரையிலும் அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்நாட்டு இசைக்கருவியும் யாழ்ப்பாணமும் (இலங்கை)

தமிழ்நாட்டைப் பாதுகாத்து இசைத்தமிழ், கடல் கடந்து இலங்கைக்குச் சென்று வெற்றி பெற்ற செய்தியும் அறியத்தக்கதே.

இன்று இலங்கையில் தமிழர் வாழும் நகரங்களுள் ஒன்றான யாழ்ப்பாணம் என்னும் பெயரைப் பெறக் காரணமாயிருந்த யாழ்ப்பாணர் என்பவர் இன்னிசைக் கருவியாகிய யாழைக் கையிலேந்திப் பாட்டிசைக்கும் இசைவாணர். பாணர் என்னும் பெருங்குலத்தின் ஒரு வகுப்பார் யாழ்ப்பாணர் என்று பெயர் பெற்றனர்.

தமிழ்நாட்டின் திருஞான சம்பந்தர். "நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த காலத்தில் திருநீல கண்ட யாழ்ப்பாணர்" என்னும் இசைவாணர் அவருக்குத் துணைபுரிந்தார் என்று திருத்தொண்டர் புராணம் கூறுகிறது. இவர் இனத்தைச் சேர்ந்த இன்னிசைவாணர் இலங்கைக்குச் சென்று இசைத்திறம் காட்டி அந்நாட்டு அரசனிடம் பரிசாகப் பெற்ற இடமே யாழ்ப்பாணம் ஆயிற்று என்று கூறுகின்றனர் ஒரு சில ஆய்வாளர்கள்.

யாழ்ப்பாணர் என்னும் குலத்தார் இப்பொழுது தழிழ்நாட்டில் இல்லை என்றாலும் முன்னாளில் அவர்கள் சிறந்து வாழ்ந்தனர் என்பதற்கு ஒரு சான்றாக நிற்பது யாழ்ப்பாணம் என்னும் நன்னகரம்.

பழந் தமிழ்க்குடிகளாகிய பாணரைத் தமிழ்நாடும் பெருநில மன்னரும், குறுநில மன்னரும் ஆதரித்தார்கள். அவர்களுக்கு வரிசை அறிந்து அவர்களுக்குப் பரிசளித்தார்கள், சோழ நாட்டில் ஆட்சிபுரிந்த இளந்திரயனும், குறுநில மன்னனாகிய நல்லியக்கோடனும் இசைவாணர் குலத்தை ஆதரித்த செய்தி பத்துப்பாட்டிலே கூறப்பட்டுள்ளது.

சோழநாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்தில் பெரும்பாணர் குலம் சிறப்புற்று வாழ்ந்ததென்பது சிலப்பதிகாரத்தாலும் அறியப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குழலிலும் யாழினும் குரல் முதல் ஏழும்
வழுவின் றிசைத்து வழித்திறம் காட்டும்
அரும் பெறல் மரபின் பெரும் பாண் இருக்கையும்"

என்று பாடினார் இளங்கோவடிகள். எனவே முற்காலத்தில் தமிழிசையை இசைத்தொழிலுக்காகப் பயின்றவர் பாணர் குலத்தவரே என்பதும், அவர்களை ஆதரித்த பெருமை தமிழ்நாட்டு மன்னருக்கு உண்டு என்பதும் பண்டைத் தமிழ் நூல்களால் விளங்குவன. இவ்வாறு பாணர்களும், புலவர்களும் வளர்த்துவந்த தமிழிசையை நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்தி நெறியை பரப்பப் பயன்படுத்தினார்கள். இத்தகைய கருத்துக்களை அரசர்களும் பெரும் ஸ்தலங்களில் பொதுமக்கள் மனதைப் பெரிதும் கவரும் விதத்தில் இசைச் சிற்பங்களாக்கினர். எனவே இத் தலங்களில் அவர்கள் சிறப்பாகப் பயன்படுத்திய இசைக்கருவிகள் எவை என்பதனையும் கோயிற் சிற்பங்களில் எழுச்சிபெற காரணமாயிருந்த வரலாறுகளையும் அறிய முடிகின்றது.

## யாழ்நூல்

யாழ் நூலினை யாத்தவர் சுவாமி விபுலானந்தர். இது மிகப் பெரிய நூல். யாழின் உருவாக்கம், யாழின் வகைகள், வளர்நிலை மட்டும் அல்ல ஏனைய இசைக்கருவிகள் போன்ற இசை ஆராய்ச்சிகளை பதிவு செய்தது மட்டும் அல்ல அழிந்த இசைக்கருவிகளை மீட்டுருவாக்கமும் செய்தார். இதுவும் திருக்கோயிற் சிற்பங்களை அறிவதற்குத் துணை செய்கின்றன.

## பிரபானந்த அடிகளார்

வீணை என்ற பெயரோ, யாழ் என்ற பெயரோ வடமொழி வேதங்களில் இல்லை. வீணையையோ யாழையோ அவர்கள் கண்டதும் இல்லை. கேட்டதும் இல்லை. இசைத்ததும் இல்லை என்கிறார் பிரபானந்த அடிகளார்.

எனவே மேற்கூறப்பட்ட சில எடுத்துக்காட்டாக கூறப்படும் அக்கால சமுதாய பின்னணியையும் மேலும் இது பற்றி ஆழமாக ஆராயும் ஒரு போக்கையும் வெளிக்கொணர்ந்துள்ளது இசைக் கருவிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய இசைக்கருவிகளில் வீணை

வீணை இசையின் முதன்மையான பண்ணிசைக் கருவிகளுள் ஒன்றாகத் திகழ்கிறது. இந்திய தேசிய வாத்தியமாக இன்று சிறப்புப் பெற்றுள்ளது. கலைகளுக்குத் தெய்வமாக விளங்கும் கலைமகளின் கைகளில் இருப்பதாக சிற்பங்களில் காணப்படும் கருவி இன்று சிறந்த ஓர் அரங்கு நிகழ்ச்சிக் கருவியாக இசை அரங்குகளில் இசைக்கப்பெற்று வளர்ச்சியடைந்துள்ளது.

வீணை வாசிப்பது நுண்ணிய ஒரு கலையாக வளர்ந்து பல பாணிகளாக உருவெடுத்துள்ளது. இவற்றுள் முக்கியபாணி தஞ்சாவூரைச் சேர்ந்தது. இந்த பாணியை அறியும் விதத்தில் சிற்பங்கள் உறுதுணையாக அமைகின்றன.

## சங்கீதம் - ஓர் நல்ல பழக்கம்

சங்கீதமானது காலத்தை நல்வழியில் செலவழிக்கக் கூடியதும், மனதைப் பரவசப்படுத்தக் கூடியதுமான ஒரு நல்ல பழக்கம். அது யாவருக்கும் சந்தோஷத்தைத் தரத்தக்கதும், மனதை சாந்தப்படுத்தி, சுத்தப்படுத்தி உலகைப் படைத்த சிருஷ்டிகரிடம் அம்மனதை வசப்படுத்துகிறது.

"ஒருவன் கூறிய இனிய வசனங்களும் இன்பமான ஓசைகளும் அவனிடத்திலேயே திரும்பப் போய் சேர்கின்றன என்பது உரைப்படுகின்றது.

## நோய் தீர்க்கும் இசை - மனநோய் நீக்கம்

சங்கீதம் (இசை) இறைவனையும் பரவசப்படுத்திப் பக்தர்களுக்கு இரங்கச் செய்கிறது, ஒலிவகைகளைக் கொண்டு மனநோயான சித்தக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழப்பத்தைச் சீர்படுத்தும் முறையை ஆயுர்வேதத்தில் மகான்கள் வகுத்துத் தந்திருக்கிறார்கள். ஆதியில் தன்வந்திரியே இது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

சுஸ்ருதர், சரகர், வாக்படர், முதலியவர்களின் புகழ் பெற்ற வைத்திய நூல்களும் இதை ஒப்புக் கொண்டிருப்பதைக் காணலாம். இசையைக் கேட்கும் போது காதிலே தக்க ஒலி விழுவதால் சித்தக்கோளாறு நீங்குகிறது. கேட்பவரின் சித்தத்தை, இசை ஒலி மிருதுப்படுத்தி அதை ஒரு நிலைக்குக் கொண்டு வருகிறது.

சிறப்பான சில ஸ்வரங்களின் இனிமை கேட்பவரின் மனதில் புகுந்து அதை தன்வசமாக்கிக் கொள்கிறது. இவ்விதமாக, மனதில் ஏற்படும் மகிழ்ச்சியின் போக்கு அந்த மனதைப் பாதித்துள்ள வியாதியைப் போக்குவதற்கேற்ற சாதனமாக அமைகிறது.

சங்கீதத்தால் (இசை) அமையும், ஷட்சம் முதலான பலவித ஸ்வரங்களின் சப்தத்தால் ஏற்படுகிற ரஸனை, உடலில் உள்ள ஆத்மா, சதை, மேதஸ், எலும்பு, ஸப்த தாதுக்கள் போன்ற சகல கூறுகளிலும் தனித்தனியாகப் புகுந்து ஒரே விதமான முறையில் செயல்படும்போது ஏற்படுகின்ற உணர்வுதான் மனப்பேதலிப்பைப் போக்கும் பரிகாரமாக அமைகிறது.

வாத – பித்த – சிலேஷ்மம் ஆகிய மூன்றினாலும் ஏற்படும் நோய்ப் பீடைகளைச் சமன்படுத்தும் விசேட சக்தி இசைக்கு உண்டு. மருத்துவம் (Music Therophy) குறிப்பாக உணர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்கள், மனோவியாதியுள்ளவர்கள், மனம் வளர்ச்சி குன்றியவர்கள், வேதனையாளர், அல்லல் படுவோர் ஆகியோருக்கு மன அமைதியைத்தந்து, நோயைக் குணமாக்குகின்றது என டாக்டர் டொனால்டு மிச்சல் தமது நூலில் தெரிவித்திருக்கிறார் இவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனோவியாதி மருத்துவமனையில் எட்டு ஆண்டுகள் ஆய்வு செய்து இசை மருதுவம் பற்றிய தமது அனுபவங்களை தெரிவித்திருக்கிறார்.

**இளம் குற்றவாளிகளைத் (கெட்ட பழக்கங்களைக் கொண்டவர்கள்) திருத்துதல்**

ஒழுங்கற்ற நடத்தையுள்ள இளைஞர்கள் ஆகியோரைத் திருத்தவும் இசை மருத்துவம் நல்ல முறையில் பயன்படுகின்றது என்றும் மது அருந்துதல், போதை தரும் பொருள்களை உபயோகித்தல் போன்ற கெட்ட பழக்கங்களுக்கு அடிமைப்பட்டவர்களை படிப்படியாகத் திருத்துவதற்கு இசை மருத்துவம் பயன்படுகிறது எனவும் தமது அனுபவத்தை மேற்கூறிய நூலில் விளக்கியிருக்கிறார்.

**இருதய நோய், தூக்கமின்மையை நீக்குதல்**

இருதய, தூக்கமின்மை போன்ற நோய்களையும் குணமாக்கும் ஆற்றல் இசைக்குண்டு. தூக்கமின்மையால் அவதியுறுவோர் நீலாம்பரி இராகம் கேட்பதன் மூலம் மன அமைதியும், நல்ல தூக்கமும் பெறுவார்கள் என்பது பேராசிரியர் சாம்பமூர்த்தியின் கருத்தாகும்.

**வயிற்று வலி நீங்குதல்**

சுபபந்துவராளியின் (45) ஜன்யமான ருத்ரமஞ்சரி என்ற ராகத்தை முறையாக தினம் நான்கு அல்லது ஐந்து முறை முப்பது நிமிடங்கள் பாடினால் வயிற்றுவலி குணமாகும்.

**தலைவலி நீங்குதல்**

27வது மேளகர்த்தா ஸரஸாங்கியில் ஜன்யமான இராகத்தால் தூக்கநிலை உருவாகும். தலைவலி மறையும்.

**தலைசுற்றல் நீங்குதல்**

21 வது மேள கர்த்தா கீரவாணியின் ஜன்ய ராகம் பாட குணமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சர்க்கரை வியாதி நீங்குதல்**

29 வது மேளகர்த்தா இராகமான சங்கராபரணத்தில் ஜன்யமான நளினகாந்தியை விடியற் காலையில் கேட்கும் போது சர்க்கரை வியாதி குணமடையும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**இரத்த அழுத்தம் நீங்குதல்**

உயர் இரத்த அழுத்தம் – ஆகிர், தோடி

தாழ்வு இரத்த அழுத்தம் – ஹிந்தோளம் பாட நோய் நீங்கும்.

**இசை உயிர் கொடுக்கும் தன்மை**

வீட்டிலே வளர்கின்ற பறவையினங்கள் உயிருக்கு போராடும் காலகட்டத்தில் ஆலய மணியோசை போல் கேட்கும் வெண்கலத்தாலான சாடியை ஏதேனும் ஒரு பொருள் கொண்டு அடிப்பதன் மூலம் அப்பறவை தானாகவே எழுந்து நிற்கும் தன்மை இன்னிசையின் சிறப்பை வெளிக்கொணர்கிறது.

**இசையும் கணிதமும்**

நம் இசைக்கலையின் சிறப்பம்சங்களான சுருதி, சுரம், தாளம், இசை உருப்படிகள், இசைக்கருவிகள் யாவற்றிலும் கணக்கு ஆதாரமாக உள்ளது. தவிர இசை எண் 3,4,5, 6, 7 ஆகியவற்றோடு ஒத்து பல அம்சங்களைக் கொண்டுள்ளது.

இசைக்கருவிகள் யாவும் கணக்கின்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. அரைக்கோள வடிவம் – வீணை, குழாய் வடிவம் – புல்லாங்குழல், உருளை – பம்மை, கூம்பு வடிவம் – நாகஸ்வரம், நீண்ட சதுரம் – ஹார்மோனியம் இவற்றின் அமைக்கப்படும் துளைகளும் கணக்கிட்டு அமைக்கப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணித எண் 2, 3, 4, 5, 6, 7 ஆகியவற்றோடு இசை மிகத் தொடர்பு கொண்டுள்ளது.

**கெட்டி மேளம்**

மங்கலகரமான நிகழ்ச்சிகள் நடைபெறும் பொழுது கெட்டிமேளம் கொட்டும் மரபுள்ளது. ஆலயங்களில் தீபாராதனை நடைபெறும் போதும், கொடி இறக்கும் போதும் சிவாச்சாரியாருக்கு இரட்சாபந்தனம் செய்யும் போதும் கெட்டிமேளம் முழங்குகின்றது.

மக்களின் திருமண நிகழ்ச்சிகள், காதணி விழா நிகழ்ச்சிகள், பெயரிடல், பந்தக்கால் முகூர்த்தம், பெண் வீட்டார் அடியெடுத்து வைத்தல், திருமாங்கல்யம் பூட்டுதல் போன்ற மங்கலகரமான நிகழ்ச்சிகளில் கெட்டிமேளம் வாசிக்கும் மரபு உண்டு.

மங்கலகரமான நிகழ்வுகள் நடைபெறும் போது தீய சொற்கள் காதில் விழாதவாறு தடுக்கவும், மங்கல நிகழ்ச்சி நடைபெறுகின்றது என்பதை அறிவிக்கவும் மங்கல வாத்தியத்தில் இதனை இசைக்கும் மரபு இருந்து வருகின்றது. கெட்டி மேளத்தில் மேளம், நாதஸ்வரம், இசைக்கப்படும். இவற்றினை அழியாதவாறு நிலை நிறுத்தி வைத்திருக்கின்றது கோயில்களில் இடம் பெற்றிருக்கும் இசைக்கருவிச் சிற்பங்கள்.

**நேரத்திற்கேற்ற இசை**

திருக்கோயில்களில் நாள்தோறும் செய்துவரும் வழிபாட்டு முறைகளுக்கேற்ப இசையும் இசைக்கப்படுகின்றன என்பதை நாம் இன்றும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடத்திற்கேற்ற இசை

நேரத்திற்கும், வழிபாட்டிற்கும் ஏற்ப இசை முறைகள் பின்பற்றப்பட்டு வருவது போல இறைவன் வீதியுலா எழுந்தருளும் போது மல்லாரி இசைக்கப்படும். இது ஓர் அடையாள இசையாக வளர்ந்துள்ளது.

இறைவன் எழுந்தருளுவதென்பதைக் குறிக்க சுவாமி வீதியுலா வரும் போது இந்தத் தெருவில் இன்ன இடத்தில், இன்ன ராகங்களும் கீர்த்தனைகளும் இசைக்கப்படவேண்டும் என்ற முறைகள் இன்றும் பின்பற்றப்படுகின்றன.

## திருக்கோயில் இசைச்சிற்பங்கள் ஊடாக மேலும் நாம் அறிந்து கொள்பவை

இந்திய சிற்பங்கள் விலை மதிக்க முடியாத இசைபற்றிய தகவல்களை தருகின்றன. இவைகள் நம்முடன் பேசுகின்றன. இசை தொடர்புடைய சிற்பங்களை ஆலயங்களில் செதுக்கி வைத்தமை நமது எதிர்கால சந்ததியினரும் கலை வரலாற்றினை அறியும் பொருட்டே ஆகும்.

ஆகமங்கள், புராணங்கள், சிற்பசாத்திரங்கள், இசை நூல்கள், தேவாரங்கள் ஆகியவற்றிலுள்ள நிகழ்வுகளை, பதிவு செய்ய முடியாத அக்காலத்தை இசைக்கருவிச் சாதனங்களை, செய்திகளை எடுத்து விளக்க சிற்பங்கள் சிறந்த ஆதாரங்களாக விளங்குகின்றன.

இசைக்கருவிகளின் தோற்றம் வளர்ச்சி மற்றும் அதன் சிறப்பு நிலைகளை அறிவதுடன் சிற்பங்களில் எந்தெந்த காலங்களில் எந்தெந்த வாத்தியங்கள் சிறப்புற்றிருந்தன. எந்தெந்த இசைக்கருவிகள் வழக்கொழிந்து விட்டன. எந்தெந்த கருவிகள் புதிய வடிவம் பெற்றுள்ளன என்பதையும் அறிய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் தனியிசை, பல்லிசை இவற்றிற்கு பயன்படுத்தப்பட்ட கருவிகள், ஆலயங்களில் பயன்படுத்தப்பட்ட கருவிகள் எவை என்பனவற்றையும் ஊகித்தறிய முடிகிறது.

இந்திய நாட்டிற்கே உரிய இசைக்கருவிகளா? அல்லது மேலை நாடுகளின் தாக்கங்கள் உள்ளதா? என்றும் ஆராய்ச்சி செய்யவும் முடிகின்றது. எம்முடைய கலைப் பொக்கிஷங்கள் மேலைநாட்டினரைக் கவர காரணங்கள் எவை என்பதையும் ஆராய உதவுகின்றன.

**கலாசார உறவு**

இந்திய இசை, இசைக்கருவிகள் ஆகியவற்றின் சரித்திரங்கள், இந்திய நாட்டின் பண்பாடு, கலை வரலாறு, மொழித்துறை மாறுதல்கள், சமூகப் புரட்சிகள் போன்ற கலாசார உறவும் பிரதிபலிக்கப்படுகின்றன.

**தத்துவ சிந்தனை**

இன்று நாம் இசையையும், இசைக்கருவிகளையும் பற்றி அறிந்துள்ள விவரங்கள் எவ்வாறு தத்துவ சிந்தனைக்கு வித்திட்டுள்ளது என்பதையும் அறிய உதவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்பு


1. லோகிதாசனார், **தமிழ்நாட்டுக்கலைகள்,** பக். 10-11
2. சைத்தன்ய தேவ. பீ; **இசைக்கருவிகள்,** பக். 48
3. சுந்தரர் **தேவாரம்,** 7.3.3
4. சைதன்யதேவ, மு.கூ.நூ, ப. 80
5. விஜய் கார்த்திகேயன், வி; **இசையும் பிற நுண்கலைகளும்,** பக். 203-204
6. கணபதி ஸ்தபதி, **சிற்பச் செந்நூல்,** ப. 131
7. மேலது, ப.132
8. மேலது, ப. 137
9. சைத்தன்ய தேவ, மு.கூ.நூ, ப.132
10. மகாலிங்கம். நா; **அறிவனார் இயற்றிய பஞ்சமரவு,** ப.330
11. ஆபிரகாம் பண்டிதர், **கருணாமிர்த சாகரம்,** ப. 785
12. சைத்தன்ய தேவ, மு.கூ.நூ, ப. 88
13. **பெரியபுரணம்,** அனாய நாயனார், ப. 22
14. மகாலிங்கம். ந; மு.கூ.நூ, ப. 155
15. உ.வே.சா பதிப்பு, **சிலப்பதிகாரம்,** ப. 102
16. மகாலிங்கம். நா; மு.கூ.நூ, ப. 206
17. பழனி. **தண்டாயுதபாணி திருக்கோயில் சிறப்பு மலர்,** ப. 230
18. லோகிதாசனார், மு.கூ.நூ, பக். 70-71
19. **இந்திய இசையின் வரலாற்று வளர்ச்சிப் பொழிவு,**ப. 186
20. ஆபிரகாம் பண்டிதர். மு, **கருணாமிர்த சாகரம்,** ப. 114
21. லோகிதாசனார், மு.கூ.நூ, ப. 78
22. மேலது, ப. 79
23. தனபாண்டியன். து. ஆ, **புதிய இராகங்கள்,** ப. 5
24. Sambamoorthy. P, **south indian music**, vol. V
25. அங்கயற்கண்ணி. இ; (தொ. ஆசிரியர்) **தமிழிசை தொன்மையும் பெருமையும்,** ப. 481
26. மேலது, பக். 483-484
27. அங்கயற்கண்ணி. இ, (தொ. ஆசிரியர்) அ. ஸ்ரீவித்யா, (கட்டுரை ஆசிரியர்) மு. கூ. நூ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகத் தொன்மையான காலத்திலேயே இசையும், கருவி இசையும் தோன்றின. கலைகளையே தம் வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டமையால் (எ-கா யாழ் வாசிப்பவர் - பாணர் பரம்பரையினர்) மன்னரும், மக்களும் இவர்களை ஆதரித்தாலும் இக் கலை முறைகள் வளம் பெற பல வாய்ப்புகள் அமைந்தன.

புராணங்கள், ஆகமங்கள், சிற்ப சாத்திரங்களுக்கேற்ப சிற்பக்கலைஞன் விமானம், கோபுரம், தூண்கள், அதிஷ்டானப் பகுதிகளில் முழுச் சிற்பங்களையும், புடைப்புச் சிற்பங்களையும் உருவாக்கினான் என்பதை இசைச் சிற்பங்கள் உறுதி செய்கின்றன. இவற்றை இன்றைய சிற்பமுறைகளோடு ஒப்பிட முடிந்தது.

நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலத்தில் பல இசைக் கருவிகள் வழக்கிலிருந்துள்ளன. சிலது வழக்கொழிந்துவிட்டது. சிலது சற்று உருமாறியுள்ளது. எடுத்துக்காட்டாக தண்ணுமைக் கருவியே பின்னால் மிருதங்கமானது. நாயன்மார்களும், ஆழ்வார்களும் பாடிய இசைக்கருவிகள் பல இன்றும் சிற்பங்களில் காணலாம். எடுத்துக்காட்டாக குழல், நாகசுரம், வீணை, தாளங்கள், தம்புரா போன்றன.

கட்டக்கலை போல் அல்லாமல் சிற்பக்கலையில் இறையானது (Spirit) அதுவே சிற்பக்கலைக்குள் நுழைந்து விடுகின்றது. ஆதலால் சிற்பக்கலையின் ஆன்மீகத்தன்மை (Spirituality) அதன் உள்ளடக்கமாக அமைகின்றது. அதுவே தத்துவமாகின்றது. எனவே இங்கு இறைவனே இசையாகின்றான். இசை மூலமே இறைவனை அடையலாம் என்பதை கோயிலில் உள்ள இசைச் சிற்பங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

கோயில் இசைச் சிற்பங்கள் சமூகம் சார்ந்த கலையாகும். சமுதாயத்தில் ஒவ்வொருவருடனும் பேசும் கலையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இந்த வகையில் கோயில் இசைச் சிற்பங்களுக்கும் சமூகத்திற்குமுள்ள உறவு நிலைகளை அறிய முடிந்தது. சிறியவர் தொடக்கம் பெரியவர் வரை ஏன்? எதற்காக? சிற்பங்களில் இவை இடம் பெற்றுள்ளன என்ற கேள்விகளுக்கு இயன்றவரை தக்க பதில்களை ஆதாரங்களுடன் கொண்டுவர முடிந்தது.

கோயில் சிற்பங்களில் இசைக்கருவிகள் எனும் இவ் ஆய்வு நூல் பலவித ஆதாரங்களுடன் எழுதப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இது பற்றி மேலும் ஆய்வு செய்வோருக்கு இந்நூல் உதவும் என எண்ணுகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அங்கயற்கண்ணி. இ, **தமிழிசை தொன்மையும் பெருமையும்**
தஞ்சாவூர் : தமிழ்ப்பல்கலைக்கழகம்
வெளியீடு, 2006

2. ஆபிரகாம் பண்டிதர். மு, **கருணாமிர்தசாகரம்,**
தஞ்சாவூர் : 1917

3. ஆளவந்தார். ஆ, **தமிழர் தோற் கருவிகள்**
சென்னை : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
1981

4. இராமநாதன். ஆறு, **நாட்டுப்புறக் கலைகள்,**
சென்னை : மெய்யப்பன் தமிழாய்வகம், 2001

5. ஏகாம்பரநாதன், ஏ **தமிழக சிற்ப ஓவியங்கள்,**
சென்னை : கழக வெளியீடு, 1984

6. கணபதி ஸ்பதி.வை **சிற்பச் செந்நூல்**
சென்னை : தொழில் நுட்ப கல்வி இயக்கம்,
1994

7. கௌசல்யா. இராம, **ஆலய வழிபாட்டில் இசைக்கருவிகள்,**
தஞ்சாவூர் : மீனாம்பிகை பதிப்பகம், 2004

8. குடவாயில் பாலசுப்ரமணியம் **தஞ்சைப் பெரியகோவில்,**
அஞ்சனா பதிப்பகம், 2006

9. குடவாயில் பாலசுப்ரமணியம் **தமிழக கோயிற்கலை மரபு,**
தஞ்சாவூர் : சரஸ்வதி மகால் வெளியீடு, 1993

10. சந்திரகுமார். த, வேலுச்சாமி சுதந்திரன். ஆ, **சிந்தைக்கினிய சிற்பக்கலை,**
தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக்கழகம், 1995

11. சீனிவாசன். கே. ஆர் **தென்னிந்தியக் கோயில்கள்,**
டில்லி : நேஷனல் புக் டிரஸ்ட், 2004

12. சைதன்ய தேவ. பி, **இசைக்கருவிகள்,**
டில்லி : இந்தியா நேஷனல் புக் டிரஸ்ட்,
2004


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. சுப்பிரமணிய சாஸ்திரி. கே.எல், **ஸ்ரீ குமார சிற்ப ரெத்தினம்** தஞ்சாவூர் : சரஸ்வதி மஹால் வெளியீடு, 1998

14. சுப்பிரமணிய சாஸ்திரி.கே.எல், **மானசாரம்,** தஞ்சாவூர் : சரஸ்வதி மஹால் வெளியீடு, 2004

15. சுப்பிரமணிய சாஸ்திரி.கே.எல், **மயமதம்,** தஞ்சாவூர் : சரஸ்வதி மஹால் வெளியீடு, 1966

16. சுப்பிரமணிய சாஸ்திரி.கே.எல், **ஸ்ரீ தத்துவநிதி,** தஞ்சாவூர் : சரஸ்வதி மஹால் வெளியீடு, 1966

17. **சுந்தரமூர்த்தி தேவார பதிகங்கள்** சென்னை : சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1973

18. சுந்தரம்.வீ.ப.க, **பழந்தமிழ் இலக்கியத்தில் இசையியல்,** சென்னை : சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1984

19. தட்சணாமூர்த்தி.வை, **ஸ்ரீ நடராஜர் தத்துவம்,** சென்னை: வானதி பதிப்பகம், 1994

20. தட்சணா மூர்த்தி.அ, **தமிழர் நாகரிகமும் பண்பாடும்,** சென்னை : யாழ் வெளியீடு, 1999

21. தனபாண்டியன். து, ஆ **நுண்ணலகுகளும் இராகங்களும்,** தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, 1988

22. தனபாண்டியன்.து, **புதிய இராகங்கள்,** தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியீடு, 1985

23. பரணீதரன் **திருத்தலப்பெருமை,** பாகம் நான்கு சென்னை : கலைஞன் பதிப்பகம் – 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. பக்கிரிசாமி பாரதி.கே.ஏ **இந்திய இசைக் கருவூலம்,** சென்னை : குசேலர் பதிப்பகம், 2002

25. பத்மநாதன்.சி, **இந்து கலாசாரம் - கோயில்களும் சிற்பங்களும்,** கொழும்பு : இந்து சமய அலுவலக திணைக்களம், 2001

26. பாலசுப்ரமணியன்.என்.ஆர், **முற்காலச் சோழர்கலையும் சிற்பமும்** 1966

27. பாஸ்கரன்.க, **தியாகராஜர் கீர்த்தனைகளில் தத்துவச் சிந்தனைகள்,** தஞ்சாவூர் : மகாவீர் பதிப்பகம், 2008

28. பிள்ளை.கே.கே, **சோழர் வரலாறு, சென்னை :** தமிழ்நாடு பாடநூல் நிறுவன வெளியீடு, 1977

29. ஞானா குலேந்திரன் **பழந்தமிழர் ஆடலிசை,** தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக்கழகம், 1990

30. ________________ **நாலாயிர திவ்யபிரபந்தம்,** சென்னை : திருவேங்கடத்தான் திருமன்றம், 1981

31. நாராயண சுவாமி.எஸ், **படிமத்திருக்கோலங்கள்,** திருவாடுதுறை : திருவாடுதுறை ஆதினம், 1998

32. நாகசாமி. இரா, **தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்கள்,** டில்லி : தொல்பொருள் ஆய்வுத்துறை, 1966

33. மகாலிங்கம்.நா, **அறிவனார் இயற்றிய பஞ்ச மரபு,** சென்னை : சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. மௌனகுரு.சி **கலை இலக்கியக் கட்டுரைகள்,** சென்னை : குமரன் பதிப்பகம், 1997

35. லோகிதாசனார் **தமிழ்நாட்டுக் கலைகள்,** சென்னை : தங்கவயல் பிரிண்டர்ஸ், 1994

36. ________________ **வாழ்வியற் களஞ்சியம்,** தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, 2003

37. விக்கிரமன், **சிற்பம் சித்திரம் கோபுரம் கோவில்,** சென்னை : விக்ரமன் பதிப்பகம், 1981

38. வேங்கடசாமி.சீனி, **நுண் கலைகள்,** சென்னை : மணிவாசகர் நூலகம், 1967

39. வேங்கடாசாமி.சீனி, **தமிழர் வளர்த்த அழகு கலைகள்,** சென்னை : நாம் தமிழர் பதிப்பகம், 2005

**இதழ்**

1. பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் **திருக்குட நன்னீராட்டு பெருவிழா சிறப்பு மலர்,** பழனி : 2000

**ஆங்கில நூல்கள்**

1. Arunachalam.M, ***The Saivagamas***, Gandhi vidyalayam, 1983
2. Balasubramaniyam.S.R ***Early Chola Temples,*** Madras : Publishing house, 1965 Asian
3. Balasubramaniyam.S.R, ***Middle Chola Temples,*** Asian Publising House, 1975
4. Coomaraswamy.A.K, ***The Dance of Shiva,*** New york : 1957
5. Day C.D ***The Music and musical Instruments of south India,*** Delhi : 1977



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. Doral Rangaswamy — ***The Rellgion and philosophy of Thevaram,*** Chennai : University of Madras, 1956

7. Gopinatha Rao.T.A — ***Elements of Hindu Iconography,*** Indological Book house, 1971

8. Michel.E.Donald, — ***Music Theraphy,*** U.S.A, 1976

9. Michel Lockwood — ***Mamallapuram,*** Madras : Tambaram Reseach Associates, 1993

10. Popley.H.A — ***The music of India,*** New Delhi : 1986

11. Prajnananda Swami — ***Music of the South Asian Peoples,*** Calcutta : Ramakrishna Vethantha Math, 1979

12. Sambamoorthy.P — ***History of Indian Music,*** Madras : Indian Music Publishing house, 1960

13. Sivaramamoorthy — ***Chola Temples,*** Delhi : Archaeological Survey of India, 1984



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No: 784
Acc No 6369.

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோழர்கால திருக்கோயிற் சிற்பங்களில் இசைக்கருவிகள் என்னும் நூலை எழுதியுள்ள முனைவர் (திருமதி)சாந்திகேசவன் அவர்கள் சோழநாட்டுப் பகுதியில் சோழர்களின் கோயிற் படைப்புகளில் சிகரங்களாக விளங்கும் தஞ்சாவூர் பெரிய கோயில், கங்கை கொண்ட சோழ புரத்திலுள்ள கங்கைகொண்ட சோழீஸ்வரம், தாராசுரம் ராஜராஜசோழீஸ்வரம்,திருபுவனம் கம்பஹரேஸ்வரர் ஆகிய கோயில்களின் இசைச் சிற்பங்களைத் தெரிவு செய்து அவற்றின் தோற்றம் வளர்ச்சியினை சங்க காலம் முதல் சோழர்காலம் வரை அழகுபட எடுத்தியம்புகின்றார். தமிழகம் கலை களின் பிறப்பிடம். தமிழ் இசை கி. பி. 2 ஆம் நூற்றாண்டளவிலும் இசைக்கருவிகள் இருந்துள்ளதை அறச்சலூர் கல்வெட்டொன்று குறிப்பிடுகின்றது. ஏழாம் நூற்றாண்டைச்சார்ந்த குடுமியான் மலைக் கல்வெட்டு ஏழு சுரங்களைப் பற்றிக் குறிப்பதுடன் பரிவாதினி என்னும் தொன்மையான இசைக்கருவியையும் குறிப்பிடுவதிலிருந்து இசைக்கலைஞர்கள் பெருமளவில் தொன்றுதொட்டு தமிழகத்தில் சிறப்பிடம் பெற்று சோழர் காலத்தில் மிக உயர்ந்த நிலையில் அரசுகளின் ஆதரவு பெற்று விளங்கினர் என்பதை இந் நூலாசிரியர் எடுத்தியம்புகின்றார். கோயில்களிலுள்ள பல்வகை சிற்ப அமைதிகளில் இசையுடன் தொடர்புடைய சிற்பங்கள் குறித்து நுண்ணிய அளவில் ஆய்வு மேற் கொண்டு வெளிவந்துள்ள நூல் இதுவாகும். பொதுவாக இறை உருவங்கள் குறித்த ஆய்வுகளே வெளிவந்துள்ள நிலையில் இசைக்கருவிகளுடன் உள்ள இறைவுருவங்களும் இசைக் கலைஞர்களின் சிற்பங்கள் குறித்தும் தமிழகத்தில் பயன்படுத்தப்பட்ட பல்வகை இசைக்கருவிகள் குறித்தும் அதன் தத்துவம், சமூக சிந்தனைகளையும் இந்நூல் திறம்பட எடுத்தியம்புகிறது. இந்நூலாசிரியர் கள ஆய்வுகளின் வழியாக கண்ட அரிய வகை இசைச்சிற்ப வடிவங்களை ஆய்வு செய்துள்ளமை பாராட்டுக்குரியது. ஆய்வாளர்கள் மட்டுமன்றி ஆர்வலர்களும் பயன் பெறும் வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

முனைவர்.AR.சரவணகுமார்,
துறைத்தலைவர்,வரலாற்றுத்துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி
E Mail :skumarar@alagappauniversity.ac.in
Mobile : 9842497150

சோழர்கள் ஆட்சியில் நிலப்பரப்பும் செல்வமும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக விரியவும் பெருகவும் ஆயின. இதற்கு தக்க சான்றுகள் அவர்கள் கட்டிய திருக்கோயில்களேயாகும். தமிழ்நாட்டின் அழியாத சிற்பக்கலையின் இன்றுள்ள வளர்ச்சி பாண்டிய, பல்லவர்கள் காலத்தில் இருந்து தொடங்கியது. அவர்கள் விட்ட இடத்திலிருந்து சோழர்கள் தம் கலைப்பணியை தொடங்கினர். சோழர் காலம் தமிழ் சிற்பக்கலையின் மறுமலர்ச்சி காலம் எனலாம். தாங்கள் பெற்ற பெரும் வெற்றியின் காரணமாக தமது மெய்க்கீர்த்தியின் சிறப்பையும் பெருமையையும் அடிப்படையாகக் கொண்டு சிற்பங்களை அமைத்துள்ளனர். சிற்பக்கலையில் கல், சுதை, வெண்கலம் என்ற மூன்றுவகையான நுண்கலைகளை வளர்த்த பெருமையைத் தனதாக்கிக்கொண்டனர்.

அவ்வகையில் சோழர்கால திருக்கோயில் சிற்பங்களில் இசைக்கருவிகள் என்னும் பொருண்மையில் தான் நேரில் சென்று பார்த்து தரவுகளை தொகுத்து நூலாக்கப் பணியினை செய்தவரும் இந்நூலினை படிப்பவர்கள் மனதில் சோழர்களை நினைக்கத் தூண்டியவருமான டாக்டர் (திருமதி) எஸ் கேசவன் அவர்களுக்கு உளமார வாழ்த்துகளும் பாராட்டுதல்களும் என்றும் உரியதாகும்.

என்றும் தமிழன்புடன்,
முனைவர் ஆ.மகாலட்சுமி
நுண்கலைமன்றம்,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி, கோவை, தமிழ்நாடு.

இந்நூல் ஈழப்பெண் சிங்கத்தின் சிந்தையில் உதித்த சிதையா சிகரம். சோழர் கோயிற் சிற்பங்களில் இருந்து செதுக்கப்பட்டச் சொல்லோவிய இசைக்கருவிகளே இந்நூல். சோழர்காலத் திருக்கோயிற் சிற்பங்களில் இசைக் கருவிகளை விதந்துரைப்பது மட்டுமல்ல அவை புலப்படுத்தும் தத்துவக் கருத்தியல்களையும், சமூகவியல் சிந்தனைகளையும், தெளிவாக, யாரும் இதுவரை கூறவில்லை. அந்தவகையில் ஆழமாகஆய்வு மேற்கொண்டு இவ்வரியநூலை வெளியிடும் நூலாசிரியர் முனைவர் (திருமதி) எஸ்.கேசவன் அவர்களுக்கு எனது பாராட்டுதல் கள். ஆய்வாளர்களுக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதம்.

முனைவர்
ஹெப்சி ரோஸ் மேரி. அ
கேரளப் பல்கலைக் கழகம், இந்தியா.

துர்க்கா அச்சகம், மட்டக்களப்பு. 065 205 3060

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org